

சரித்திரச்
சிறப்பிதழ்
கல்கி
KALKI 25.8.1974
60 காசு

வாழ்க்கை ஒரு கண்டுபிடிப்பு



'க்ளிக்'அடித்துவைப்பீர்-நீங்காத நினைவுக்கே

எப்போதுமே உங்கள் கையோடிருக்கட்டும், தப்பாதத் துணையான க்ளிக் III.
மின்னலெனத் தோன்றி மறையும், வாழ்வின் அந்த மகோன்னதமான
கணங்களைப் பிடித்துக் காத்திடுவீர், என்றென்றும் நீங்காத நினைவுக்கே.
'குறிவைத்ததும் கப்பென' தப்பாமலே எடுப்பதற்கு ஏற்றது ஆக்பா க்ளிக்.
நடைமுறைக்குகந்தது. உள்ளது உள்ளபடியே எடுப்பது, கையாளச்
சுலபமானது. சிக்கனமானது.

■ 120 பிலிம் ரோல் ஒவ்வொன்றுக்கும் 12 பெரிய (6 x 6 செமீ.) படங்களைப் பெறுவீர்கள்.

■ சிறந்த தயார்த் தோலுறை, போர்ட்ரெய்ட் லென்ஸ், ஆகியவை தனியாக விலைக்குக் கிடைக்கும்.

துல்லியமான பிரிண்டுகளையும், என்லார்ஜ்மென்டுகளையும் பெறுவதற்கே.
ஆக்பா-கேவார்ட் போட்டோ தாள்களையே வற்புறுத்திப் பெறுங்கள்.
அனுமதிபெற்ற எல்லா ஆக்பா-விற்பனையாளர்களிடமும் கிடைக்கும்.,
ஆக்பா-கேவார்ட் ஏ. ஜி. லீவர்குஸன் அவர்களின் கூட்டுறவோடு
தயாரிப்போர் : தி நியூ இந்தியா இண்டஸ்ட்ரீஸ் லிட்

விலை
ரூ. 70.25
(எக்சைஸ் தீர்வை உள்ளிட்டது. இதர வரிகள் தனி).



ஆக்பா க்ளிக
இந்தியாவின் மிகப்
பிரபலமான காமிரா.

ஏகபோக விநியோகஸ்தர்கள் :
ஆக்பா-கேவார்ட் இந்தியா லிமிடெட்.,
பம்பாய் · புது டெல்லி · கல்கத்தா · சென்னை
புகைப்பட சாதனங்களின் தயாரிப்பாளர்களான ஆக்பா-கேவார்ட்
ஆன்ட்வெர்ப்/லீவர்குஸன் அவர்களின் ரெஜிஸ்டர்டு டிரேட் மார்க்.



ராசி மிகுந்த
ராசி
அன்றாடம் அணிய அல்லது
திருமணம் போன்ற விசேஷ
வைபவங்களுக்கு ஏற்ற
எழில்மிகு பட்டுப் புடவைகள்
வாங்கச் சிறந்த இடம்
ராதா சில்க் எம்போரியம்
(உங்கள் ஜவுளித் தேவைகள்
அனைத்தையும் வாங்கத் தகுந்த
டிபார்ட்மெண்ட் ஸ்டோர்)
சென்னை-600004
ராதா சில்க் எம்போரியம்
29, கோவிந்த் மஹால்,
86-B, மரைன் டிரைவ், G.ரோடு,
பம்பாய்-400002
சார்பு நிறுவனம்: ராதா சில்க்ஸ்
'தன் பில்டிங்ஸ்' மவுண்ட் ரோடு,
சென்னை-600002
ராதா சில்க்கின்
ராசி உன்னத
வாழ்வுக்கு ஆசி
EP-RASI-85



everest/858/SH.tm


Nikon
DINERS CLUB

தீரஜ் செளடாவைத் தெரியுமல்லவா? எதிலுமே மிகச் சிறந்தவைதான் வேண்டும் அவருக்கு...

எனவே இந்து ரோல் பிலிம், இந்து புரோமைட் பேப்பர் இவற்றை அவர் உபயோகிப்பதில் வியப்பில்லை. அவர் மட்டும் அல்ல. மிட்டர் பேடியும், ஆர். கிருஷ்ணனும் கூடத்தான்.

இவர்கள் எல்லோரும் மிகச் சிறந்த, புகழ்பெற்ற புகைப்பட நிபுணர்கள். எந்த பிரபல வெளிநாட்டுப் பிலிம்களையும் அவர்கள் பயன்படுத்த முடியும். என்றாலும் அவர்கள் இந்துவையே தேர்ந்தெடுக்கிறார்கள். காரணம், இந்துவின் தரமே.

உங்கள் காமிராவும், லென்ஸும் எந்தத் தயாரிப்பாக இருந்தாலும், நீங்கள் எடுக்கப் போவது எவ்வித புகைப்படமாக இருந்தாலும், இந்து ரோல் பிலிமையும், புரோமைட் பேப்பரையுமே பயன்படுத்துங்கள்.


காரணம், ஒரு நல்ல ரோல் பிலிமும் புரோமைட் பேப்பரும் அளிக்க வேண்டிய எல்லாப் பயன்களையும் இந்து அளிக்கிறது. தெளிவான மாறுபாடு, சிறப்பான ஒளிப்பதிவு, ஒரே சீரான தரம், துல்லியமான கிரெயின்கள் இவற்றை அளிப்பது இந்து. அது மட்டுமல்ல, இந்து மிக எளிதில் கிடைக்கிறது. எனவே புகைப்பட வல்லுநர்கள் இந்துவையே தேர்ந்தெடுக்கிறார்கள்.

இத்துறையில் தன்னிறைவு பெற, தன்னிகரற்ற சேவையில் இந்து அளிப்பவை:

இந்து ரோல் பிலிம். இந்து போட்டோகிராபிக் பேப்பர்கள். இந்து சினி பாஸிடிவ். இந்து சினி சவுண்ட் நெகடிவ். இந்து எக்ஸ்ரே பிலிம். இந்து மீடியம் காண்ட்ராஸ்ட் கிராபிக் ஆர்ட்ஸ் பிலிம். இந்து டயாபாஸிடிவ். இந்து டாகுமெண்ட் காபியிங் பேப்பர்.

இந்துஸ்தான் போட்டோ
பிலிம்ஸ் மான்யுபாக்சரிங்
கோ. லிமிடெட்
இந்துநகர், உதகமண்டலம் 643005

இந்துவின் தரத்துக்குச் சான்று உங்கள் கண் எதிரே.



INDU ®

SAA/HPF/1378

உங்கள் குடும்பத்தின் ஆரோக்கியத்திற்கு வைட்டமின்களும் தாதுப் பொருள்களும் இன்றியமையாதவை



அவை போதுமான அளவில் கிடைக்கின்றனவா?


வைட்டமின்கள் மற்றும் தாதுப்பொருள்களின் பற்றுக்குறை குடும்ப ஆரோக்கியத்தைப் பாதிக்கக் கூடும். சோர்வு, ஜல தோஷம், பசியின்மை, உடல் இளைத்தல், சரும மற்றும் பல் உபாதைகளுக்குக் காரணம் இவற்றின் பற்றுக்குறைதான்.

திட்டமிடப்பட்ட உணவில் கூட இக்குறை காணப்படுகிறது. அவ்வாறின்றி குடும்பத்தில் ஒவ்வொருவருக்கும் தேவையான அளவில் இந்த இன்றியமையாத சத்துக்கள் கிடைக்க தினம் விம்க்ரான் கொடுங்கள்.

விம்க்ரானில் 11 முக்கிய வைட்டமின்களும் 8 தாதுப் பொருட்களும் அடங்கியுள்ளன. இரும்புச் சத்து—இரத்தப் பெருக்கத்திற்கும், சுறுசுறுப்பிற்கும், கால்ஷியம்—எலும்புகளையும், பற்களையும் உறுதியாக வைக்கவும், வைட்டமின் 'ஸி'—ஜல தோஷத்தை எதிர்க்கும் சக்தியை அதிகரிக்கவும், வைட்டமின் ஏ—சிறந்த கண்பார்வைக்கும் ஆரோக்ய சருமத்திற்கும், வைட்டமின் பி12—பசியைத் தூண்டி, தாங்கும் சக்தியை அதிகரிக்கும் இவற்றுடன் இதர போஷாக்குச் சத்துக்களும் உள்ளன. இன்று முதல் தினம் உட்கொள்வீர்—விம்க்ரான்!

விம்க்ரான்®

பல்வேறு வைட்டமின்-தாதுச் சத்து மாத்திரைகள்
11 வைட்டமின்கள் + 8 தாதுப் பொருட்கள்



® · SQUIBB®

SARABHAI CHEMICALS PVT. LTD.

® இ.ஆர். ஸ்க்விப் அண்ட் ஸன்ஸ் இன்கார்ப்பரேடட் அவர்களின் ரெஜிஸ்டர்ட் ட்ரேட் மார்க்காகும். எஸ்.வி.பி.எல். இதை உபயோகிக்க உரிமை பெற்றவர்கள்.

ஒரே ஒரு விம்க்ரான் மாத்திரை உங்களை நாள் முழுதும் சக்தியுடன் வைத்திருக்கப் போதுமானது

Shilpi-HPMA 2A/74 Tam


THE MOST WONDERFUL IDEAS GROW WITH COTTON
FINISHES
wash-n-wear... stain resistant... non-shrink... finishes-to heighten the utility of the natural fibre...
Century– FOR 100% COTTON TEXTILES
THE CENTURY SPG. & MFG. CO. LTD., Bombay 400025
Adroit-CM-540-P



Born : 25 - 3 - 1925

Died : 29 - 8 - 1972

In fond and affectionate memory of

Mrs. RENGAMONY

Beloved wife of S. Padmanabhan
Affectionate mother of
Jana and Kanna



கல்கி

சரித்திரச் சிறப்பிதழ்

ஆனந்த ஆவணி, 9 ○ ஆகஸ்டு 25, 1974

சரித்திரச் சிறப்பிதழ் என்றும் அறுவையாகி விடுமோ என்று நேயர்கள் அஞ்ச வேண்டாம். நமது உதவி ஆசிரியர் திரு கௌசிகன் தயாரித்துள்ள இந்தச் சிறப்பிதழ் பாடப் புத்தகப் பாணியில் அமைந்தது அல்ல. நிகழ்காலத்தை மறவாமல் உருவானது. கௌசிகனின் பலவிதமான எழுத்துப் பணிகளுள் சரித்திர நாவல்களும் உண்டு. பாமினிப் பாவை நேயர்களுக்கு நினைவிருக்கும். ஒரு ரகசியத்தை உடைத்து விடலாமென்றால் கோகுலத்தின் வாண்டு மாமாவும் இவரே. இந்தச் சிறப்பிதழுக்குச் சுவாரஸ்யம் கூட்டி மெருகேற்றி ஒத்துழைத்த அனைவருக்கும் நன்றி.

முக்கியமாக அரசியலில் முக்கோணத்தின் மூன்று முனைகளில் நிற்கும் மூவரைக் கலை — இலக்கியம் என்ற அடிப்படையில் இந்தச் சிறப்பிதழில் ஒன்று சேர்க்க முடிந்ததில் அளவற்ற மகிழ்ச்சி!

—ஆசிரியர்

அட்டைப்பட விளக்கம்:

அகிலன் அவர்கள் எழுதிக் கல்கியில் பிரசுரமான சரித்திரக் கதைகளுள் வேங்கையின் மைந்தன் சாகித்திய அகாதமி பரிசு பெற்றது (மத்திய அரசு). கயல்விழி தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பரிசு பெற்றது (மாநில அரசு). தற்போது கயல்விழி மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன் என்ற புதுத் தலைப்பில் திரைப்படமாக உருவாகி வருகிறது.

புரட்சி நடிகர் திரு எம். ஜி. ஆர். பிரதம பாகம் ஏற்று நடிக்கும் இத்திரைப்படத்தை பத்மினி பிக்சர்ஸார் தயாரித்து வருகிறார்கள். கயல்விழிகளின் துள்ளல் சுந்தர பாண்டியனின் வீரத்தில் சொக்குவதும் சுந்தரபாண்டியனின் வீரம் கயல்விழிகளின் துள்ளல் பார்வைக்கு அடிமைப்படுவதும் உறுதி. வண்ணப்படம்: அமிர்தம்.



சரித்திர நாயகர்கள் திரும்பி வந்தால்!...
"நீங்கள் கலிங்கப் போரில் மனமாற்றம் அடைந்ததுபோல் பீகார் போருக்குப் பின் ஜயப்பிரகாஷ் மனமாற்றம் அடைய வழி செய்யுங்களேன்!"
அசோகர்
ஜெயப்பிரகாஷ்
"ஜுல்பி தம்பி! நான் 17 தடவை படை எடுத்ததுபோல் நீ 17000 தடவை படை எடுத்தாலும் பாரதத்திடம் உன் 'பாச்சா' பலிக்காது!"
கஜினி முகம்மது
புட்டோ
"அபஸ்வரப் போட்டியில் வெற்றி பெறுபவருக்கு எங்கள் அபஸ் வரா சபா பரிசளிக்கும்!"
அபஸ்வரா கலை மன்றம்
ஔரங்கசீப்
"நீங்க செய்த ஜபத்தாலே உங்க மகன் பொழைச்சமாதிரி எங்க அப்பனைச் சாகடிக்க எனக்கு ஒரு ஜபம் கத்துக்குடுங்களேன்!"
அ.தி.மு.க
தி.மு.க
பாபர்
"நான் கட்டிய பிரகதீசுவரர் கோயிலுக்கு வெளியே முச்சந்தியிலே என் சிலையை முழ உயரத்துக்கு வைத்திருக்கிறீர்களே;...அதை அகற்றி விட்டு என் மானத்தைக் காப்பாற்ற வேண்டுகிறேன், டாக்டர், கலைஞர், முதல்வர் அவர்களே!"
ராஜ ராஜ சோழன்

"எங்கள் பெயரில் ராஜ்யங்கள் இருந்தது போய், சோழன், சேரன், பாண்டியன், பல்லவன்னு எங்கள் பெயரில் இப்படி பஸ் டிரான்ஸ்போர்ட் நடத்துவதை மாற்றக்கூடாதா?"




"உங்க காலத்திலே மணி அடிச்சா நீதி கிடைக்கும்! எங்க காலத்திலே 'மணி' (Money)யால் அடிச்சால்தான் எதுவும் கிடைக்கும்!"






"உங்கள் திருக்குறள் பாணியில் எங்கள் புதுக் குறள் பார்க்கலாம், வள்ளுவரே!"


"இன்னுய்யா உன் பேஜார் புடிச்ச உண்ணு விரதம்? எங்க உண்ணுவிரதத்தை வந்து பாரு! சொம்மா இட்டிலி, வடை, தோசை, பூரி, சப்பாத்தின்னு வெளுத்துக் கட்டிக்கிட்டுத்தான் ஒரு மணி நேரம் உண்ணுவிரதம்!"



"அரசியல் சுதந்திரம் கிடைத்துக் கால் நூற்றுண்டுக்கு மேல் ஆகியும் 'அரிசிச் சுதந்திரம்' இன்னும் கிடைக்கவில்லையே!"




கள்ளுக்குடிக்காதே!
ரேஸுக்குப்போகாதே!
சினிமா வேண்டாம்
ஆனால் மாநில
லாட்டரியை
மட்டும்
விட்டு
விடாதே!
ஞானோதயம்!


சுவரண்சிங்தானே?
திட்டி, வைது எனக்கு
அலுத்துவிட்டது.
இனி கொஞ்சம்
பேசலாமா?
புட்டோ

மனக்கசப்புடன் வரவேற்கிறோம்!

சுதந்திர தினத்தை யொட்டி சரித்திரத்தில் இடம்பெறத்தக்க மூன்று சாதனைகளைப் புரிந்திருக்கிறார் தமிழக முதல்வர்.

கோட்டையிலே கொடி ஏற்றினார். சாமானியக் குடிமகனுக்குக் கோட்டையில் கொடியேற்றுபவர் முதல்வரா யிருந்தாலென்ன ஆளுநராயிருந்தாலென்ன? படி அரிசி ஐந்து ரூபாய் விற்கிறதே; நாளை பிள்ளை குட்டிகளுக்கு அரை வயிறாவது நிரம்ப வேண்டுமே என்ற கவலைதான் அவனுக்கு.

ஆனால் தி. மு. க. முதல்வர் தேசியக் கொடி ஏற்றினார் என்பதில் விசேஷ அர்த்தம் உண்டு. ஒரு காலத்தில் பிரிவினைவாதிகளாக இருந்தவர்கள்; நிகழ்காலத்தில் மாநில சுயாட்சிக்காகப் போராடுகிறவர்கள்; ஐக்கிய இந்தியாவின் அவசியத்தையும் உணர்ந்திருக்கிறார்கள் என்பதற்கு ஓர் அடையாளமாகக் கொடியேற்று வைபவத்தைக் கொள்ளலாம். அந்த அளவில் அதை வரவேற்கிறோம்.

குதிரைப் பந்தயத்தை ஒழித்து விட்டார் முதல்வர், அசாதாரணமான துணிச்சலுடன். ஆயிரக் கணக்கான மத்தியதரக் குடும்பங்களை மீளாக் கடனில் தள்ளி மாளாத் துயரம் என்னும் குழியும் பறித்து வந்தது கிண்டிக் குதிரை. கணக்கற்ற குடும்பத் தலைவிகள் கழுத்திலோ கரத்திலோ மிஞ்சியிருக்கும் ஓரிரு தங்க நகைகளைத் தொட்டுப் பார்த்துக் கொண்டு உள்ளம் குளிர முதல்வரை மனதார வாழ்த்துவார்கள். நாமும் வாழ்த்துகிறோம்.

முதல்வரின் மூன்றாவது சாதனை இடைக்கால பட்ஜெட். இத்தனை அபத்தமான ஒரு பட்ஜெட் தமிழகத்தில் இன்றுவரை தயாரிக்கப்பட்டதில்லை என்ற அளவில் இது மாபெரும் சாதனைதான்!

குதிரைப் பந்தயம் ஒழிக்கப்பட்டதால் நஷ்டமாகும் இரண்டு கோடி ரூபாயை ஈடுகட்டப் புது வரிகள் விதித்தால் அது நியாயம். ஆனால் இன்று மதுவிலக்கை அமுல் செய்வதால் நஷ்டமாகும் ஐம்பத்தாறு கோடி ரூபாயை இதே அளவுகோல் கொண்டு பார்க்க முடியாது. இவர்கள் மதுவிலக்கைத் தீர்க்கதரிசனமின்றி ரத்து செய்ததால் கிடைத்த அதிகப்படி வருமானம்தான் ஐம்பத்தாறு கோடி. அந்த ஐம்பத்தாறு கோடிக்கும் ஏற்ப அரசு செலவினங்களை வளர்த்துக்கொண்டு விட்டது. இப்போது மதுவிலக்கை அமுல் செய்வதால் நஷ்டம் நஷ்டம் என்று புலம்புவதில் பொருள் இல்லை. அரசாங்கச் செலவினங்களில் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதும் அத்தியாவசியமில்லாத திட்ட இனங்களில் முதலீடுகளைக் குறைத்துக்கொள்வதும்தான் விவேகம். அதற்குப் பதில் ஐம்பத்தாறு கோடியில் பதினைந்து கோடியாவது புது வரி மூலம் வசூலித்தே தீருவேன் என்று ஆரம்பித்தால் வாட்டுகின்ற விற்பனை வரிகளாலும் அதன் தொடர்பாகப் பல இனங்களில் உயர்கின்ற விலைவாசிகளாலும் மக்கள் தூண்டில் புழுவாகத் துடிக்க நேரும்.

வரிகள் மக்களுக்கு நன்மை செய்யவும் நாடு வளம் பெறவுமே ஏற்பட்டவை. ஆனால் அபரிமித வரிகள் மக்களைச் சோர்வுறச் செய்து செயலூக்கத்தைக் குறைக்கும். செடிகளைக் கத்தரித்து விட்டால் அடர்ந்து படர்ந்து செழித்து வளரும். வேரோடு பிடுங்கி வெந்நீரும் ஊற்றினால்?

மதுவிலக்கு அமலாவதால் இதுவரை மது அருந்தியவர்களிடம் மிச்சமாகக்கூடிய பணம் சேமிப்பாக மாறவும் அது தனியார் துறையிலோ கூட்டுறவுத் துறையிலோ தொழிலகங்களில் முதலீடாகவும் தக்கதொரு திட்டத்தை முதல்வர் வகுக்க வேண்டும்.

அதை விடுத்து எம். ஜி. ஆருக்கும் மதுவிலக்குக்கும் முடிச்சுப் போட்டுத் திரைப்படக் காட்சி வரியை இரண்டாயிரம் சதவீதம் அதிகரிப்பதன் மூலம் புரட்சி நடிகரின் செல்வாக்கைக் குறைக்கப் பார்ப்பது அவலை நினைத்துக் கொண்டு உரலை இடிக்கும் கதை. மனக்கசப்பு மிகுவதைத் தவிர்த்து மூடிய திரைப்பட அரங்குகள் திறக்க முதல்வர் வழி செய்யட்டும்.

கல்கி
மலர் 34
இதழ் 4

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்



நிக்ஸன்

ஃபோர்டு



ஜனநாயகத்தின் வெற்றி

நிக்ஸனின் பிடிவாதம் வலுத்தாலும் கடைசியில் மக்களின் விருப்பத்துக்கு அவர் அடிபணிந்து ராஜிநாமா செய்ய நேர்ந்ததை ஜனநாயகத்தின் வெற்றி என்று சரித்திரம் கூறும்.

நிக்ஸனின் வெற்றி

வியட்நாம் போர்நிறுத்தமும் மேற்கு ஆசிய சமாதானமும் ருஷ்ய அமெரிக்க நட்பும் அணு ஆயுதச் சோதனைக் குறைப்பு ஒப்பந்தமும் சீன அமெரிக்க நல்லுறவும் இதர பல அமைதிப் பணிகளும் நிக்ஸனின் வெற்றி என்று சரித்திரம் புகலும்.

கொள்கைக்கு வெற்றி

புதிய அமெரிக்க ஜனாதிபதி ஃபோர்டு, நிக்ஸனின் கொள்கைகளையே தாம் தொடர்வதெனத் தீர்மானித்தது நிக்ஸனுடைய கொள்கைகளுக்கு வெற்றி என்று வரலாறு பகரும்.

நிக்ஸன் ராஜினமா: மூஷிகர் பேட்டி

"ஏன்ன எழுதிக் கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டார் விநாயகர். "நிக்ஸன் ராஜினமா பற்றி நமது தலைவர்கள் பலரைப் பேட்டி கண்டேன்!...."

"அடடே! யார் யார் என்னென்ன சொன்னார்கள்? படி பார்க்கலாம்!" என்றார் பகவான். மூஷிகர் படித்தார்:

சத்தியவாணிமுத்து: ஆப்ரஹாம் லிங்கன் நீக்ரோக்களுக்காக ஒன்றும் பண்ணலே என்று நான் சொன்னதாக முதலில் பிரசுரம் செய். இதற்கு ஏகப்பட்ட எதிர்ப்பு கிளம்பும். உடனே ஒரு விளக்கத்தையும் போடலாம். அப்போதுதான் ஒரு முறைக்கு இரு முறையாக என் பெயர் பத்திரிகையில் அடிபடும். என் விளக்கத்தையும் இப்பவே குறிச்சுக்க. நான் எந்த அர்த்தத்தில் சொன்னேன்னு ஆப்ரகாம் லிங்கன் மாபெரும் தலைவர். அவர் விரும்பியிருந்தால் நீக்ரோக்களுக்காக இன்னும் எவ்வளவோ செய்திருக்கலாம். நிக்ஸன் நீக்ரோக்களுக்கு நிறைய செய்ய ஆசைப்பட்டார். ஆனால் அதிகாரிங்க முட்டுக்கட்டை போட்டாங்க. அவர் ராஜினமா ஏன் பண்ணணும்? டிஸ்மிஸ் ஆகும்வரை காத்திருந்திருக்கலாமே?

எம். ஜி. ஆர். : வாட்டர்கேட் விவகாரம் ஒரு பக்கம் இருக்கட்டும். நிக்ஸனைக் கணக்குக் கேட்கப் போய்த்தான் இந்த நிலைமை ஏற்பட்டது என்பதை உரியவர்களுக்குக் கூறி எச்சரிக்க விரும்புகிறேன்.

கருணாநிதி: நிக்ஸனிடம் கேட்கப்பட்ட கணக்கு இன்கம்டாக்ஸ் கணக்கு என்று சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரிவிக்க ஆசைப்படுகிறேன் என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

ஜகஜீவன்ராம் : என்னமோ இன்கம்டாக்ஸ் தகராறும். பல வருமானங்களைக் கணக்கில் காட்டாமல் மோசடி பண்ணி விட்டாராம் நிக்ஸன். எதுக்கு இந்தத் தொல்லே? இன்கம்டாக்ஸ் கணக்கே கொடுக்காமல் இருந்திருக்கலாம் அவர். அப்புறமாக, 'மறந்து விட்டேன்' என்று கூறிச் சமாளித்தால் ஆயிற்று!

மதியழகன்: வாட்டர்கேட் விவகாரத்தில் அநியாயமாய் மாட்டிக்கிட்டார். எதிர்க் கட்சியின் திட்டங்கள் பற்றி உளவு அறிய ஆள் அனுப்பி பூட்டை உடைத்துச் சிரமப் படுவானேன்? இரண்டு கட்சிமாறிகளைத் தயார் பண்ணினால் போயிற்று! இங்கிருந்து அங்கும் அங்கிருந்து இங்கும் அவர்கள் தாவிக் கிட்டே இருந்தாங்கன்னு இரு தரப்பின் ரகசியங்களையும் இரு தரப்பிலும் அவர்கள் பரிமாறிக் கொண்டே யிருக்கலாமே!

இந்திரா காந்தி : நிக்ஸனுக்குத் தேர்தல் நடத்தவே தெரியலே. இப்படி யாராவது வாட்டர்கேட் விவகாரத்தில் மாட்டிப் பாங்களா? அப்படியே மாட்டிக்கிட்டாலும் சாட்சியங்கள் அகப்படுகிற மாதிரி நடந்துப் பாங்களா? என் பேரில் கூடத்தான் எத்தனையோ பழி சுமத்தினாங்க. ருஷ்யாவில் அச்சான வோட்டுச் சீட்டுக்கள்; நகர்வாலா விவகாரம்; மாருதி ஊழல்... என்றிப்படி. எதையாவது நிரூபிக்க முடிஞ்சுதா?

"போதும், போதும்!" என்றார் விநாயகர். "பேட்டியுமில்லே, ஒரு மண்ணுமில்லே. அத்தனையும் உன் கைச்சரக்கு!"

"உண்மைதான்" என்று ஒப்புக் கொண்டார் மூஷிகர். "நிஜ பேட்டி இப்போதுதான் ஆரம்பமாகிறது. முதலில் நீங்கள் சொல்லுங்கள், உங்கள் கருத்து என்ன, நிக்ஸன் ராஜினமா பற்றி?"



"ஆளை விடு" என்றார் கஜவதனர். "எனக்குப் பொய் சொல்லத் தெரியாது. உண்மை பேசினால் ரொம்பப் பேருக்குப் பிடிக்காது. எனவே...." என்றவர் சிலையானார்..

சிவத்தின் சக்தி 3 நாராயண சகோதரி

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசார்ய சுவாமிகள்

அம்பிகையின் ரூபங்கள் பல தினுசாகக் கோயில்களில் இருக்கின்றன. சிவன் கோயில்களில் கர்ப்பக்கிருகத்தைச் சுற்றி விநாயகர், தட்சிணாமூர்த்தி, மகாவிஷ்ணு (அல்லது லிங்கோத்பவர்), பிரம்மா, துர்க்கை ஆகிய மூர்த்திகள் இருக்கின்றன. இவர்களில் தட்சிணா மூர்த்திக்குப் பத்தினி கிடையாது. இது அம்பாளின் சம்பந்தமில்லாமல் ஸ்வச்சமாகத் தான் மட்டுமே ஸ்வாமி இருக்கிற கோலம். இப்படியே துர்க்கைக்கும் பதி ஸ்தானத்தில் எவரையும் சொல்லத் தெரியவில்லை. தனி அம்பாளாக அவள் இருக்கிறாள். தக்ஷிணா மூர்த்தியின் கைகளில் ஜப மாலையும் சுவடியும் இருக்கும். அவர் வெள்ளை வெளேர் என்று இருப்பார். இதேமாதிரி ஒரே வெளுப்பாக ஜப மாலையும், சுவடியும் வைத்துக் கொண்டிருக்கும் ஸ்திரீ தேவதை சரஸ்வதி. அதனால் சரஸ்வதி சிவனின் சகோதரி. இருவரும் ஞான மூர்த்திகள். பிரம்மா தாமரைப் பூவில் அமர்ந்திருக்கிறார். அவரது வர்ணம் உருக்கிவிட்ட தங்கத்தின் நிறம். இதே மாதிரி ஸ்வர்ண வர்ணத்தோடு தாமரைப் பூவில் அமர்ந்திருக்கிறாள் மகாலக்ஷ்மி. பிரம்மா பிரஜைகளை சிருஷ்டித்துக் கொண்டேயிருக்கிறார் என்றால், லக்ஷ்மியோ ஐச்வரியத்தைப் பெருக்கிக் கொண்டேயிருக்கிறாள். இவர்கள் இருவரும் உடன்பிறந்தவர்கள்.

இப்போது, புருஷ சம்பந்தமில்லாமல் தனியாக இருக்கிற அம்பாளான துர்க்கையம்மன் எப்படியிருக்கிறாள்? நீலமேக சியாமளமாக இருக்கிறாள். கையிலே சங்கும் சக்கரமும் வைத்திருக்கிறாள். மகிஷாசுரன் போன்ற பல ராட்சதர்களை சம்ஹரித்திருப்பவள் இவள் தான். ஸ்ரீ மகாவிஷ்ணுவே இவளுடைய சகோதரர் என்று சொல்லாமலே புரியும். இதே வர்ணம், இதே மாதிரி சங்கு சக்கரம், அசுரர்களை சம்ஹரிப்பதற்காக என்றே திரும்பத் திரும்ப அவதாரங்கள் எல்லாம் மகாவிஷ்ணுவிடமே காணப்படுகின்றன. பரம கருணையினால் இருவரும் இப்படி துஷ்ட நிக்ரகம் செய்கிறார்கள். இந்த மாயப் பிரபஞ்சத்தை லீலா விநோதமாக நடத்துவது இந்த இருவரும்தான். மாயோன், மாயோள் என்றே அவரைச் சொல்வார்கள். அவளை மகா மாயை என்கிறோம். மற்றச் சகோதர ஜோடிகளைவிட இந்த இரண்டு பேரும் ரொம்பவும் நெருக்கமாக இருக்கிறார்கள்— ஒன்று என்றே சொல்லிவிடலாம் போல. மேலே நான் சொன்ன துர்க்கைக்கு, ''விஷ்ணு துர்க்கை'' என்றே பெயர் இருக்கிறது. லோகத்திலும் அம்பாளை விஷ்ணுவின் சகோதரி என்பது சகலருக்கும் தெரிந்திருக்கிற அளவுக்கு ஸரஸ்வதி சிவசகோதரி என்பதோ, லக்ஷ்மி பிரம்மாவின் சகோதரி என்பதோ அதிகம் பிரசாரமாயிருக்கவில்லை.

மாயம் செய்வதை முக்கியமாகப் பெண்பாலாகவே கருதுவது மரபு. மகாவிஷ்ணுவிடத்தில் இந்த அம்சம் தூக்கலாக இருக்கிறது. அதனால்தான் அவர் அமிருதத்தைப் பங்கீடு பண்ணின போது மோகினியாக அவதாரம் பண்ணினார். இவர் அம்பாளின் பிரதி ரூபம் என்பதற்கு ரொம்பவும் பொருத்தமாக மோகினியைப் பரமேச்வரனே கல்யாணம் செய்து கொண்டிருக்கிறார். விஷ்ணு க்ஷேத்திரங்களில் ஜகத்பிரசித்தமாக இருக்கிறது திருப்பதி. வேங்கடரமண ஸ்வாமியைப் பார்த்தாலும் ரொம்ப அம்பாள் சம்பந்தமாக இருக்கும். அங்கே பெருமாளுக்குப் புடவை தான் உடுத்துகிறார்கள். சுக்ரவாரத்தில் அபிஷேகம் பண்ணுகிறார்கள்; மற்றப் பெருமாள் கோயில்களில் கருடன் இருக்கிற பல இடங்களில் இங்கு மட்டும் சிம்மங்கள் இருக்கின்றன. சிம்மம் அம்பிகையின் வாகனம்.

அம்பாளும், மகாவிஷ்ணுவும், பரமேச்வரனும் மூன்று ரத்தினங்கள். 'ரத்ன த்ரய பரீக்ஷா' என்றே ஸ்ரீ அப்பைய தீக்ஷிதர் ஒரு கிரந்தம் செய்திருக்கிறார். இந்த மூன்றும் ஒரே பரம சத்தியத்தின் மூன்று ரூப பேதங்கள் தான். அம்பாள் மற்ற இரண்டு பேரோடும் பிரிக்க முடியாமல் சம்பந்தப்பட்டிருக்கிறாள்— ஒருத்தருக்குப் பத்தினியாகவும், இன்னொருத்தருக்குச் சகோதரியாகவும் இருக்கிறாள். இந்த மூன்று மூர்த்திகளிடமும் உயர்வு தாழ்வு கற்பிக்காத பக்தி நமக்கு வேண்டும். எல்லாவற்றுக்கும் அடிப்படையாக இருக்கிற சத்தியம் (Truth) சிவம் என்றும், அதுவே பலவாகத் தெரிவதற்குக் காரணமான சக்தி (Energy) அம்பாள் அல்லது விஷ்ணு என்றும் புரிந்து கொண்டு பக்தி செலுத்த வேண்டும்.

ராஜாஜி சிந்தனை

தலைகீழ் சோஷலிஸம்!

சோஷலிஸத்தின் வெற்றிக்கு ஸ்விடன் தேசம் மிகச் சிறந்த உதாரணம் எனக் கூறுகிறார்கள். ஆனால் உற்பத்திக்குத் தனியார்த் துறையை ஸ்விடன் நம்பியிருப்பது போல் உலகில் வேறு ஒரு நாடு கிடையாது! தனியார்த் துறையின் நோக்கங்கள், செயல்முறை, நிர்வாக ஆற்றல் ஆகியவற்றில் நம்பிக்கை வைத்துள்ளது ஸ்விடன். அது மட்டுமல்ல; உற்பத்தியிலும் விநியோகத்திலும் தனியார்த் துறை எடுத்துக் கொள்ளும் சிரமத்துக்காக அது நியாயமான லாபம் பெறுவதை ஸ்விடிஷ் அரசு தவறாகக் கருதுவதில்லை. மேன் மேலும் ஊக்கமும் உற்சாகமும் அளிக்கிறது. யுகோஸ்லாவியாவிலும் இப்படியே என்பதை அதன் இந்தியத் தூதர் கூறியுள்ளார். நம் நாட்டின் சோஷலிஸமோ தலைகீழ் சோஷலிஸம்! - சுயராஜ்யா மார்ச் 19, 1966


சரித்திரம் பிறக்கச் செய்பவர்

"மாமல்லபுரம் பற்றிய கல்வெட்டுக்கள் கிடைக்கும் வரை, மாமல்லபுரத்துச் சிற்பங்கள் உருவாகக் காரணமாக இருந்தவர் பல்லவர்களே என்ற உண்மை யாருக்கும் நிச்சயமாகத் தெரியாது. 'மகாபலி என்றொரு அரசன் இருந்தான்...' என்கிற மாதிரி பல கட்டுக் கதைகள் நடமாடி வந்துள்ளன. 'மாமல்லபுரம்' என்ற சரியான பெயரே சமீப காலத்தில்தானே பரவலாகத் தெரிய வந்தது? அதற்கு முன்பெல்லாம் மகாபலிபுரம் என்ற பெயர்தானே வழக்கிலிருந்து வந்தது?" என்று கேட்கிறார், திரு நாகசாமி. தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத் துறை இயக்குனர் இவர்.

"ஏன் இப்போதும் பெருந்துகளில் அந்தப் பெயர்தானே காணப்படுகிறது?" என்கிறேன் நான்.

திரு. நாகசாமி தொடர்ந்து கூறுகிறார்: "மகேந்திரவர்ம பல்லவன் முப்பது ஆண்டு காலம் ஆட்சி புரிந்தான் என்றுதான் அண்மைக் காலம்வரை கருதப்பட்டு வந்தது. ஆனால் மகேந்திரவர்மன் காலத்து நடுகற்கள் கண்டுபிடிக்கப்பட்ட பின்தான் அம் மன்னன்





நாற்பது ஆண்டு காலம் ஆண்டான் என்பது உறுதியாகத் தெரிய வந்தது. கடைசியாகக் கண்டு பிடிக்கப்பட்ட இந்த நடுகல், வரலாற்றைச் சீராக்க உதவியுள்ளது. கல்வெட்டுக்கள், செப்பேடுகள், விக்கிரகங்கள், ஓலைச் சுவடிகள், பானை ஓடுகள் இவற்றின் மூலம் பல வரலாற்று உண்மைகளை நாம் அறிய முடிகிறது."



"தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத் துறையின் பணிகள் என்னென்ன என்று விளக்குகிறீர்களா?"


"புதைந்து கிடக்கும் வரலாற்றுச் சான்றுகளை அகழ்வாய்வு செய்து வெளிக் கொணர்தல், பழைய சின்னங்களைப் பாதுகாத்தல், நூல்கள் வெளியிடுதல், சிலைகள், சிற்பங்கள் இவற்றைப் படம் எடுத்து விளக்கமான அட்டவணை (Inventory) தயாரித்தல் — இம்மாதிரியான பணிகளில் ஈடுபட்டு வருகிறது இத்துறை. மத்திய அரசு தொல்பொருள் துறை தோன்றி 112 ஆண்டுகள் ஆகின்றன."

"மத்திய தொல்பொருள் ஆய்வுத் துறையும் இதே பணியைத்தான் செய்து வருகின்றதா? அப்படியென்றால் ஒரே துறையில் ஆய்வுகள் நிகழ்த்த மத்திய அரசும் மாநில அரசுகளும் செயல்பட வேண்டிய அவசியம் என்ன?"

"அனைத்திந்திய வரலாற்றுச் சிறப்புள்ள சின்னங்களைப் பராமரிக்கும் பணியினை மத்திய அரசின் ஆய்வுத் துறை மேற்கொண்டுள்ளது. அகில உலகப் புகழ் பெற்ற கோயில்கள், தொன்மைச் சின்னங்கள் — சான்றாக மாமல்லபுரத்துச் சிற்பங்கள், தஞ்சாவூர், கங்கை கொண்ட சோழபுரம் முதலிய வரலாற்றுப் புகழ் பெற்ற இடங்களைப் பாதுகாத்துப் பேணுதல் மத்திய ஆய்வுத் துறையின் கீழ் அமைந்துள்ளது. மற்றவைகளை மாநில ஆய்வுத் துறை கவனித்து வருகிறது. சான்றாக, கரூரில் ரோமானியப் பானை ஓடுகளை நாங்கள் அகழ்வாய்வு செய்து கண்டுபிடித்ததன் பயனாக ரோமாபுரிக்கும் தமிழ்நாட்டுக்குமிடையே நீண்ட நெடுங்காலத்துக்குமுன்பே வணிகத் தொடர்பு இருந்ததை ஊர்ஜிதம் செய்ய முடிகிறது. இதேபோல் கொற்கையில் கண்டுபிடிக்கப்பட்ட மௌரியர் காலத்துப் பானை ஓடுகளைக் கொண்டு அசோகன் காலத்திலேயே தமிழ்நாட்டுடன் அவர்களுக்கு இருந்த தொடர்பினை உறுதி செய்ய முடிகிறது. சங்க காலத்துச் சேரன் செங்குட்டுவனின் தலைநகராக வஞ்சிதான் இருந்திருக்கக்கூடும் என்பதற்கான ஆதாரங்களும் எங்கள் அகழ்வாய்வின் மூலம் தெரிய வருகிறது. தமிழ்நாடு

தொல்பொருள் ஆய்வுத்துறை 1961-ம் ஆண்டு தோன்றியது. இது தோன்றக் காரணமாக அமைந்தவர் திரு டி. என். ராமசந்திரன். அவர் 'ஸ்பெஷல் ஆபீச'ராக அரும் பணி ஆற்றியுள்ளார். முதல் இயக்குநராக அவருக்குப் பிறகு நான் பொறுப்பேற்றிருக்கிறேன்'' என்கிறார் திரு. நாகசாமி.

'மாமல்லபுரம்', 'சோழர் கலை' என்று இரு டாகுமெண்டரி திரைப்படங்கள் தயாரித்துள்ளனர். 'கல்வெட்டு' என்ற தலைப்பில் மூன்று மாதங்களுக்கொரு முறை தமிழில் ஒரு சஞ்சிகையும், ஆண்டுக்கொரு முறை ஆங்கில வெளியீடு ஒன்றும் இத்துறைக்கென அமைந்துள்ள சொந்த அச்சகத்தில் பதிப்பிக்கப் பெறுகின்றனவாம். வரலாறு, சம்ஸ்கிருதம், தொல்பொருளாய்வு முதலிய துறைகளில் எம். ஏ. பட்டம் பெற்ற ஆர்வமிக்க இளைஞர்களுக்கு இந்தத் துறையில் ஓராண்டுக் காலம் பயிற்சி அளித்து 'டிப்ளமோ' வழங்குகிறது, இத்துறையின் சார்பில் செயல்படும் பயிற்சி நிறுவனம். பயிற்சிக் காலத்தில் மாதம் ரூ. 125 உபகாரச் சம்பளமும் வழங்





கப் பெறுகிறதாம். 1973-ம் ஆண்டில் துவங்கப்பெற்ற இப் பயிற்சி நிறுவனம் எட்டுப் பேர்களுக்கு இத்துறையில் பயிற்சி அளித்துள்ளது. பயிற்சி முடிவில் அவர்களே ஆய்வுக் கட்டுரை (Thesis) எழுத வேண்டும். இது தவிர பள்ளி, கல்லூரி ஆசிரியர்களுக்குக் கோடை விடுமுறையில் ரூ. 50 உபகாரச் சம்பளம் வழங்கி 22 நாட்கள் இந்தத் துறையில் பயிற்சி அளித்து வருகிறார்கள்.''

''தஞ்சையில் அண்மையில் ஓர் ஆலயம் கண்டுபிடிக்கப்பட்டதாமே — அதுபற்றிக் கூறுகிறீர்களா?''

''விஜயாலய சோழன்தான் தஞ்சையை முதல் முதலாகச் சோழ நாட்டின் தலைநகராக் கினான். ஒன்பதாம் நூற்றாண்டு வரலாறு கூறும் இரு நடு கற்கள் கிடைத்தன. 'நிசும்ப சூதனி'யைப் பிரதிஷ்டை செய்து விஜயால



படங்கள்: 1. கொற்கை அகழ்வாங்கில் நிலத்துக்கு அடியில் கிடைத்த கட்டிடப் பகுதி. 2. காஞ்சிபுரத்துக்கருகில் கூழம்பந்தல் கிராமத்தில் முதல் இராஜேந்திர சோழன் எடுத்த கோயிலைப் பழுது பார்க்கும் பணி. 3. திரு நாகசாமி. 4. வடஆர்க்காடு மாவட்டம் எதிர்தனூர் என்னுமிடத்தில் கிடைத்த மகேந்திர பல்லவன் கால நடுகல். இதில் கள்ளர்கள் வீரனை வீழ்த்த அவனது நாய் அக்கள்ளர்களைத் துரத்தி வீரனின் அருகில் நின்றது. அதற்காக இந்நடு கல் எடுக்கப்பட்டுள்ளது. 5. ஒரு செப்பேட்டின் படம். 6. நிசும்பசூதனி.



கதையல்ல, சரித்திரம்!

பெரிய மரக் குதிரைக்குள் போர்வீரர்கள் ஒளிந்துகொண்டு எதிரியின் நகருக்குள் புகுந்து வெற்றி கொண்ட 'டிரோஜன்' யுத்தம் பற்றிக் கிரேக்க சரித்திரத்தில் படித்திருப்பீர்கள். அதே பாணியில் மாணிக்பூர் ராஜ்யத்தை சுஜாவுதீன் என்ற தளபதி வெற்றி கொண்ட வரலாறும் உண்டு. வியாபாரியைப் போல இரண்டாயிரம் ஒட்டகங்களுடன் தலைநகருக்குள் புகுந்தான் இந்தத் தளபதி. ஒவ்வோர் ஒட்டகத்தின் முதுகிலும் பெரிய ஒரு புறமும் பெட்டி இருந்தது. ஒவ்வொரு பெட்டியிலும் ஆயுதம் தாங்கிய இரண்டு வீரர்கள் ஒளிந்திருந்தார்கள். இப்படி நாலாயிரம் போர் வீரர்களைத் தலைநகருக்குள் ஒளிந்துக் கொண்டு போய் மாணிக்பூர் ராஜ்யத்தை வீழ்த்தினான் சுஜாவுதீன்,

யன் ஒரு கோயில் எழுப்பியதாக ராஜேந்திர சோழனின் செப்பேட்டின் மூலம் தெரிய வந்தது.

'தத: பிரதிஷ்டாப்ய நிகம்ப சூதனீம்
கரா கரைரர்ச்சித பாதபங்கஜாம்' என்ற சம்ஸ்கிருத சுலோகம் ராஜேந்திரனின் திருவாலங்காட்டுச் செப்பேட்டில் காணப்பட்டது. மன்னன் ஒருவன் பிரதிஷ்டை செய்த விக்கிரகம் என்றால் அது பிரும்மாண்டமான உருவம் படைத்ததாக இருத்தல் வேண்டும் என்ற ஊகம் வீண் போகவில்லை. திருமலை நாயகர் மீனாட்சிதாசனாக ஆட்சி புரிந்து வந்ததும், திருவனந்தபுரத்தில் ஆட்சி செலுத்திய மன்னர்கள் பத்மநாப சுவாமியின் பிரதிநிதியாக இருந்து ஆண்டு வந்ததும் பிரசித்தமல்லவா? பல்லவ மன்னர்கள் மகிஷாசுரமர்த்தினிக்குக் கோயிலெழுப்பி வழிபட்டு வந்துள்ளனர். அவ்வண்ணமே விஜயாலய மன்னன் நிகம்ப சூதனியின் பிரதிநிதியாக ஆட்சி புரிந்து வந்திருக்கிறான். ராஜேந்திரனின் செப்பேட்டில் கிடைத்த சுலோகம், தஞ்சைநகரில் கீழக் கோபுரவாயில் அருகிலுள்ள பிள்ளையார் கோயிலின் பக்கத்திலிருந்த நிகம்ப சூதனி கோயிலைக் கண்டுபிடிக்க உதவியது. (முன் பக்கத்திலுள்ள) நிகம்ப சூதனியின் புகைப் படத்தைப் பாருங்கள். எட்டுக் கைகளுடன் விளங்கும் தேவியின் உருவம் ஆறடி உயரம். ஒன்பதாம் நூற்றாண்டுச் சிற்பங்களுக்குரிய இலட்சணங்களை இதில் காண முடிகிறது. வடக்கேயும் தெற்கேயும் ஆண்ட மன்னர்களை முறியடிக்க வேண்டுமென்ற விஜயாலயனின் மன உறுதியைப் பிரதிபலிக்கிறது இந்த விக்கிரகம். ஒரு கலைப்பொருள் என்ற கண்ணோட்டத்தில் பார்த்தாலும் இதன் வேலைப்பாடுகளும் அமைப்பும் அற்புதமானவையே'' என்று விளக்குகிறார் திரு. நாகசாமி.

''தேவியின் காலடியில் இருப்பவர்கள் யார்?''

''சும்பன், நிசும்பன், சண்டன், முண்டன், ரக்தபீஜன் என்ற அசுரர்களின் உருவங்களே இவை. ரக்தபீஜன் வெட்டும்பொழுது தரையில் விழும் ஒவ்வொரு சொட்டு இரத்தத்திலிருந்தும் ஆயிரம் அரக்கர்கள் தோன்றுவார்கள் என்பது அவன் பெற்ற வரம். எனவே தேவி அவனை வெட்டும்போது, சாமுண்டியை அழைத்து அவன் உடலினின்றும் வெளிப்படும் குருதியைக் கபாலத்தில் ஏந்திக் குடித்து விடும்படி வேண்டினாள் என்பது புராண வரலாறு.''


''செப்பேடுகள் பொதுவாகத் தெரிவிக்கும் குறிப்புக்கள் என்ன வகையானவை?''

''மன்னர்கள் நேரிடையாகப் பிறப்பிக்கும் ஆணைகளை அதில் அப்படியே பொறிப்பார்கள். பழைய காலத்துச் செப்பேடுகள் ஓலைச் சுவடிகளின் வடிவிலேயே அதே அளவுள்ளவையாக இருந்தன. பின்னர் பெரிய அளவில் செப்பேடுகள் அமைந்தன. அரச பரம்பரை, அவர்கள் பெற்ற வெற்றிகளின் விவரங்கள் இவை செப்பேடுகளில் இடம் பெற்று வந்தன. மன்னரது ஆணைகளைத் தாங்கிய செப்பேடுகளில் அவர்களது இலச்சினையும் பொறிக்கப் பெற்றிருக்கும். வடமொழி, தமிழ் இரு மொழிகளிலும் மன்னரது உத்தரவுகள் செப்பேடுகளில் இடம் பெறுவதுண்டு. உதாரணமாக, ஒருவருக்கு நிலம் தானமாக அல்லது சன்மானமாக வழங்கப்பட்டால் அந்த நிலத்தின் அளவு, எல்லைகள் முதலிய விவரங்களைத் தமிழில் விரிவாகக் குறிப்பிடுவார்கள். செப்பேடுகளில், எந்தச் சந்தர்ப்பத்தில் யாருக்கு வழங்கப் பெற்றது என்ற விவரங்களும் காணப் பெறும்.''

''ஓலைச் சுவடிகள் உங்கள் துறைக்கும் பயன்படும் அல்லவா?''

''ஆமாம். சென்னைப் பல்கலைக்கழகத்தில் அவற்றைப் பாதுகாத்து ஆய்வுகள் நிகழ்த்தி வருகிறார்கள். ஓலைச்சுவடிகளைப் பாதுகாப்பது ரொம்பச் சிரமமான காரியம். முன்பெல்லாம் அவற்றின் மீது சந்தன எண்ணெய் தடவி வைப்பார்கள். பூச்சிகள் அரிக்காமல் இருக்க வேண்டி'' எனக் கூறும் திரு. நாகசாமி சரித்திரம் பிறக்க உதவும் பலருள் ஒருவர்.

— பேட்டி: 'பாணன்'




பச்சிள மேனியைக் காப்பதற்கே
பாப்பா காட்டும் வழி உமக்கே

ஜான்ஸன்ஸ்* பேபி பவுடர்—

மேனியிலே அதி நுட்பமான பகுதி- உங்கள் முகத்தின் சருமம்: பச்சிளம் தளிர் போன்ற அதனைப் பாதுகாக்கத் தக்க பவுடர் எது? பாப்பாவின் மேனியைக் காப்பாற்றும் பூப்போன்ற மென்மையான பவுடரே தேவை. மழமழ மென்மையோடு குளுமையாக வைத்திருப்பதற்கு — ஜான்ஸன்ஸ் பேபி பவுடர். எங்கெங்குமே, எழில்கொஞ்சும் இளம் செல்வியர் உபயோகிக்கும் பவுடர்.

பிறந்த நாளைப் பிஞ்சுக மென்மையோடு
உங்கள் மேனி மிளிரப் பேருதவி

*Johnson & Johnson**



* Trade Mark

லின்டாஸ்-(S). 4-140 TM




...அவளுக்கு மனங்குளிரும் மகிழ்ச்சியும் கிடைக்கிறது !

நிச்சயமாக, மபத்லால் க்ரீப் அளிப்பவை நேர்த்தியான துணிமணிகள்தான் !

AIYARS.M.457 TM

சரித்திர நாயகர்




வெண்பாப் போட்டிக்கு வந்து குவிந்த ஏராளமான பாடல்கள் எங்களைத் திணற அடித்துவிட்டன. அவற்றில் பெரும்பாலான வற்றைப் பிரசுரிக்க விருப்பமிருந்தும் இட வசதி இன்மையால் மிகச் சிறந்தவை என நாங்கள் கருதும் ஒன்பது பாடல்களை மட்டும் தேர்ந்தெடுத்து வெளியிடுகிறோம்.

- ஆசிரியர்

பொக்கைவாய்ப் புன்னகையும் பொய்யகன்ற பேரருளும்
சக்கையாய்ப் போன சருகுடலும் - எக்காலும்
பொன்னை விரும்பாத பொன்மனத்து காந்திஜியை
என்றுமவர் என்பேன் இசைந்து !

சண்முக. தாயுமானவன், பொன்மலை.



அடிமை நிலைமாற்றி அன்னையை எம்மை
அடிமை எனக்கொண்டான் அன்பால் - நடுநிலையில்
தன்னுரிமைச் சூரியனைத் தாயகத்தில் தோற்றுவித்தான் !
பொன்னேட்டில் பெற்றான் புகழ் !

மைதிலி ராகவன், திருக்கழுக்குன்றம்.



கால மணியாழின் கந்தர்வ கீதஒலி ;
ஞால மனிதரிடை நல்ஞானி - நீல
முகில்வண்ணன் பாதம் மறவாத ராஜாஜி
புகழ்வண்ண மன்றோ புகழ் !

' கவிதா ' - நா. குமாரன், கோவை.


அஞ்சாது நன்கருத்தை ஆள்வோர்க்குக் கூறியவன் ;
அஞ்சாது மக்களுக்குத் தொண்டுசெய்தோன் - நெஞ்சத்தால்
நிகரிலான் ; ''நீள்கதைகள்'' தந்தான், எளிதாக்கி ;
'' புதுநிருபன் '' என்பேன் புனைந்து !

எஸ். சுந்தர், சென்னை - 5.



முத்தமகன் ரத்தினத்தின் மூச்செல்லாம் நாட்டுக்கு !
சொத்தெல்லாம் நாட்டுக்கு ! சோர்ந்திலான் ! - சத்தியமாய்
நல்லுலகில் செத்தது நாட்டுடனே முன்வந்தான் !
இல்லையென வாழ்ந்தான் இவன் !

சிவ. கிருட்டிணன், கனியூர்.



எந்தையர் நாட்டின் இழிவாம் இனப் பகையை
முந்தையோர் கட்டும் விதிப்பயனைச் - சிந்தையிலே
விந்தையாய் நீக்கி விளக்கிப் பகுத்தறிவைத்
தந்தவர் தந்தைபெரி யார்.

' விநோதன் ' எ. அரங்கசாமி, திருநெல்வேலி.

அன்பால் அறிவால் அழகு தமிழ்ப் பேச்சால்
பண்பால் கவர்ந்திட்ட பாசமிகும் - அண்ணா !
தரித்திரம் நீக்கத் தமிழ் நாட்டார்க் குழைத்த
சரித்திர நாயகராம் சாற்று !

ஜி. கிருஷ்ணமூர்த்தி, பண்ணுருட்டி.



'' சிந்திக்கத் தூண்டும் சிரிப்பும் அரசியலும்
சந்திக்கும் நல்ல தனிநடையில் - விந்தையுடன்
நாவல் படைத்தே நமக்களித்த ' கல்கி 'யினைப்
பாவால் தொழுவோம் பணிந்து !

நெல்லை ஆ. கணபதி, சென்னை - 15.

காலத்தை வென்றுநிற்கும் காதைகள் செய்து வைத்தான்
சாலத் தமிழ்மொழிக்குத் தொண்டுசெய்தான் - ஞாலத்தே
பொன்னி உலவட்டும் பொன்றும் புகழுடையும்
'' பொன்னியின் '' புத்திரனைப் போற்று !

செல்வி கபஶ்ரீ, சென்னை - 5.

வெண்பா போட்டி முடிவு


நீல முகப்பு
955
உழைப்பு
சக்தி
பாதுகாப்பு
EVEREADY
TRADE MARK
FLASHLIGHT BATTERY
UNION CARBIDE
எவரெடி 955
அதன் விலைக்கு சிறந்த மதிப்பு அளிக்கிறது
உழைப்பு—சக்தி வீணாகிப்போவதில்லை. ஆதலால், நல்ல நீடித்த உழைப்பிற்கான கூடுதல் சக்தியைப் பெறுகிறீர்கள்.
சக்தி—விசேஷ உலோகத்தாலான அடிப்பாகம் பாட்டரிக்குப் பாட்டரி இடைவிடாத தொடர்பை நிச்சயப் படுத்தி அதனால் உண்டாகும் சக்தியனைத்தையும் வழங்குகின்றது.
பாதுகாப்பு—ஒன்றின்மேல் ஒன்றுயுள்ள தடிப்பான ஜாக்கெட் ஒழுகிச் செல்வதைத் தவிர்க்கின்றது—உங்கள் டார்ச்சையும் பாதுகாக்கின்றது.
UC 7954
எவரெடி
-உன்னதமானவைகளில் முதன்மையானது

சிவகாமியின் சபதம்

ஆறாம் அத்தியாயம்

பிக்ஷுவின் செய்தி

சக்கரவர்த்தியின் கட்டளையைக் கேட்டதும் கூடாரத்திலிருந்த பலர் உடனே வெளியேறினார்கள். ஒற்றர் தலைவனும் இன்னும் சிலரும் வெளியேறுவதற்குத் தயங்கிய போது புலிகேசி அவர்களைக் கோபத்துடன் பார்த்து, ''போங்கள்!'' என்று கர்ஜனை செய்யவே அவர்களும் போய் விட்டார்கள்.

தனித்து நின்ற குண்டோதரனைப் பார்த்து, புலிகேசி சாந்தமான குரலில், ''அப்பா நீ யார்? யாரிடமிருந்து வந்தாய்? அந்தரங்கச் செய்தி ஏதேனும் கொண்டு வந்திருக்கிறாயா?'' என்று கேட்டான்.

''ஆம் மகாப் பிரபு! பிக்ஷுவிடமிருந்துதான் வந்தேன். சேதி கொண்டு வந்திருக்கிறேன்!'' என்றான் குண்டோதரன்.

''அப்படியா! என்ன செய்தி கொண்டு வந்தாய்?'' என்று பரபரப்புடன் சொல்லிக் கொண்டே புலிகேசி சிம்மாசனத்திலிருந்து துள்ளிக் குதித்து எழுந்தான்.

''சீக்கிரம் சொல்லு! பிக்ஷு எங்கே இருக்கிறார்? சௌக்கியமாய் இருக்கிறாரா? ஏன் இத்தனை நாட்களாகச் செய்தி ஒன்றும் அனுப்பவில்லை? உன்னிடம் என்ன சொல்லி அனுப்பினார்?'' என்று புலிகேசி சரமாரியாகக் கேள்விகளை அடுக்கினான்.



குண்டோதரன் கண்களில் திடீரென்று கண்ணீர் பெருகிற்று. விம்முகின்ற குரலில் ''சத்யாச்ரயா! என் குருநாதர் காஞ்சியில் பாஷாண்டிப் பல்லவனுடைய சிறையில் இருக்கிறார்!'' என்றதும் புலிகேசி, ''ஆஹா நான் உயிரோடிருக்கும் போது பிக்ஷு சிறையில் இருப்பதா? என்ன அவமானம்! காவித் துணி அணிந்த பிக்ஷுவைச் சிறையில் இடும் அளவுக்கு மகேந்திர பல்லவன் அவ்வளவு நீசனாகி விட்டானா?'' என்று சீறினான்.

பிறகு, ''எல்லாவற்றையும் விவரமாகச் சொல்லு. பிக்ஷு எப்படிச் சிறைப்பட்டார்? நீ எப்போது அவரைப் பார்த்தாய்? என்ன செய்தி சொல்லியனுப்பினார்?'' என்று கேட்டான்.

குண்டோதரன் சொன்னான்: ''ஏழு நாளைக்கு முன்பு சென்ற வெள்ளிக் கிழமையன்று நான் அவரைப் பார்த்தேன். மதத் துரோகியும் குருத் துரோகியும் பாஷாண்டியுமான மகேந்திர பல்லவன் தனது இராஜ்யத்திலுள்ள புத்த பிக்ஷுக்களையெல்லாம் — பிடித்து அடைத்து வைத்திருக்கும் சுரங்க மண்டபத்துக்குள்ளே பிக்ஷுவைப் பார்த்தேன். மன்னர் மன்னா! முதலில் பிக்ஷு சொல்லியனுப்பிய செய்தியைத் தங்களிடம் சொல்லிவிடுகிறேன். அதுவரையில் இந்தப் பாழும் உயிருக்கு எதுவும் வந்து விடக்கூடாதே என்று எவ்வளவோ கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன். ஆகா! சென்ற ஏழு நாட்களில் இந்த ஏழைக்கு எவ்வளவு ஆபத்துக்கள் வந்தன. என் குருநாதருடைய செய்தியைத் தங்களிடம் சொல்லி விட்டேனானால், அப்புறம் இந்த அற்ப உயிருக்கு என்ன நேர்ந்தாலும் கவலைப்பட மாட்டேன். தங்களை எப்படியாவது நேருக்குநேர் தரிசித்து விட வேண்டுமென்று என்னவெல்லாமோ யுக்தி செய்தேன். தங்களைத் தரிசிக்க வேறு விதமாய் முடியாதென்று எண்ணிக் காஞ்சியிலிருந்து வந்த நம் வீரர்களிடம் வேண்டுமென்றே அகப்பட்டுக் கொண்டேன். பிரபு! பிக்ஷு தங்களிடம் சொல்லும்படியாக முக்கியமாக நாலு செய்திகளைச் சொல்லியிருக்கிறார். அவற்றைக் கேளுங்கள்.''

இத்தகைய பூர்வபீடிகையுடன் குண்டோதரன் புத்த பிக்ஷுவின் நாலு செய்திகளையும் வரிசைக் கிரமமாகச் சொல்லத் தொடங்கினான்.

முதலாவது செய்தி, ''மதுரைப் பாண்டியனை நம்ப வேண்டாம்'' என்பது. இந்த ஜயந்தவர்ம பாண்டியன்தான் பிக்ஷுவை மதுரையில் சிறைப்பிடித்து வைத்திருந்தவன். அச்சமயம் மகேந்திர பல்லவனுக்கும் ஜயந்தவர்மனுக்கும் ஏதேதோ அந்தரங்க ஓலைப் போக்குவரத்து நடந்தது. அவர்கள் இரண்டு பேரும் சேர்ந்து ஏதோ துரோகமாகச் சூழ்ச்சி செய்திருக்க வேண்டுமென்று பிக்ஷு கருதுகிறபடியால் பாண்டியனிடம் சர்வ ஜாக்கிரதையாக நடந்துகொள்ள வேண்டியது. அவனை முழுவதும் நம்பி எந்தக் காரியத்திலும் இறங்கி விடக்கூடாது.

இரண்டாவது செய்தி, கங்க நாட்டுத் துர்விநீதன் ஒரு பெரிய வஞ்சகத் துரோகி என்பது. துர்விநீதன்தான் பிக்ஷுவை மகேந்திரப் பல்லவனுக்குக் காட்டிக் கொடுத்து, காஞ்சியில் அவர் சிறைப்படுமாறு செய்தவன். புலிகேசியின் கண்ணில் மண்ணைத் தூவுவதற்காகப் பல்லவனுடன் சண்டை போடுவது போல் போட்டுவிட்டு, சைனியத்தோடு ஓடி ஒளிந்து கொண்டிருக்கிறான். புலிகேசி வாதாபிக்குத் திரும்பிப் போகாதபடி செய்து விட்டால், தன்னுடைய மருமகன் விஷ்ணுவர்த்தனன் சளுக்க சாம்ராஜ்யத்தின் ஏக சக்ராதிபதியாகி விடுவான் என்று கங்க நாட்டான் அந்தரங்க ஆசை கொண்டிருக்கிறான். சமயம்நேர்ந்தால் துரோகி துர்விநீதனுக்குத் தக்க தண்டனை விதிக்க வேண்டும்.

மூன்றாவது முக்கியமான விஷயம் பிக்ஷு தெரிவிக்கச் சொன்னது என்னவென்றால் மகேந்திர பல்லவன் ஹர்ஷவர்த்தனச் சக்கரவர்த்திக்கு ஏதோ இல்லாததும் பொல்லாததும் எழுதி ஓலை அனுப்பியதாகத் தெரிய வருகிறது. அதைப் பற்றிய உண்மையைத் தீர விசாரித்து உசிதப்படி செய்ய வேண்டும். மகேந்திர பல்ல



வன் குறைந்தது இன்னும் ஒரு வருஷத்துக்குக் கோட்டைக்குள்ளேயே கஷ்டமில்லாமல் இருக்க முடியும்; அவ்வளவு உணவுப் பொருள் சேகரித்து வைத்திருக்கிறான். இந்த நிலைமையில், காஞ்சி முற்றுகையை மேலும் நீடித்துக் கொண்டிருப்பது உசிதமா அல்லது மீண்டும் ஒருதடவை கோட்டையைக் கைப்பற்ற முயல்வது நல்லதா என்று யோசித்துத் தீர்மானிக்க வேண்டும்.

நாலாவது எல்லாவற்றிலும் முக்கியமாகப் புத்த பிக்ஷு சொல்லியனுப்பிய விஷயம் இது: உத்தராபதத்துச் சக்கரவர்த்தி ஹர்ஷவர்த்தனர் சிற்பங்கள் சித்திரங்கள் முதலிய கலைகளில் அதிகப் பற்றுள்ளவர். தென் பல்லவ இராஜ்யத்தில் அநேக இடங்



களில் சிற்ப சித்திரக் கலை மண்டபங்கள் இருக்கின்றன. மாமல்ல புரத்தில் மகேந்திர பல்லவன் ஹர்ஷவர்த்தனரை அழைத்துக் காட்டுவதற்காகவே அற்புத சிற்ப வேலைகளைச் செய்திருக்கிறான். இந்தச் சிற்ப வேலைகளுக்கு ஏதாவது சளுக்க வீரர்களால் கெடுதல் நேர்ந்ததாகத் தெரிந்தால், அதை மகேந்திர பல்லவன் தனக்குச் சாதகமாக உபயோகப்படுத்திக் கொள்வான். ஹர்ஷவர்த்தனருடைய விரோதத்துக்குச் சளுக்கர் குலம் ஆளாக வேண்டி நேரும். ஆகையால் பல்லவ நாட்டுச் சிற்பங்களுக்கோ சிற்பிகளுக்கோ சளுக்க வீரர்களால் எவ்விதக் கெடுதலும் நேராதபடி பார்த்துக் கொள்ள வேண்டும்.

மேற்கூறிய நாலு செய்திகளையும் தட்டுத் தடுமாறிச் சொல்லி விட்டு, ''என் குருநாதருக்கு நான் கொடுத்த வாக்கை நிறைவேற்றி விட்டேன். இனிமேல் என் உயிரைப் பற்றிக் கொஞ்சமும் கவலை இல்லை!'' என்று கூறி, குண்டோதரன் விம்மி விம்மி அழத் தொடங்கினான்.

''அடே! நீ என்னத்திற்காக அழுகிறாய்?'' என்று புலிகேசி கேட்டபோது, குண்டோதரன், ''ஐயா! சளுக்க சைனியம் என்றைக்குக் காஞ்சிக் கோட்டை மதிலைத் தாண்டி உள்ளே பிரவேசிக்கிறதோ, அன்றைக்கே சிறைப்பட்டிருக்கும் புத்த பிக்ஷுக்கள் எல்லோரையும் கழுவில் ஏற்றி விடுவதாக மகேந்திர பல்லவன் சொல்லியிருக்கிறானாம். இதைத் தங்களிடம் சொல்ல வேண்டாமென்று பிக்ஷு சொன்னார். ஆனாலும், தங்களிடம் சொல்லாமலிருக்க எனது மனம் கேட்கவில்லை. என் குருநாதர் நான் பிறந்து வளர்ந்த காஞ்சி நகரின் நாற்சந்தியில் கழுவில் ஏற்றப்பட்டுக் காக்கை கழுகுகளால் கொத்தப்படுவார் என்று நினைக்கும் போது, எனக்குத் தாங்க முடியாமல் அழுகை வருகிறது!'' என்றான்.

சற்று நேரம் ஆழ்ந்த சிந்தனையில் இருந்துவிட்டுப் புலிகேசி குண்டோதரனைப் பார்த்து, ''நீ எப்படிப் பிக்ஷுவைச் சந்தித்தாய்? எப்படிக் கோட்டைக்கு வெளியே வந்தாய்?'' என்று கேட்க, குண்டோதரன் திருப்திகரமான மறுமொழி அளித்தான். பிக்ஷுவின் யோசனைப்படி தான் பல்லவ ஒற்றர் படையில் சேர்ந்திருப்பதாகவும், அதனால் காஞ்சிக் காராகிருகத்தில் அடைக்கப்பட்டிருக்கும் புத்த பிக்ஷுக்களுடன் பேசித் துப்பு அறிவதற்காகத் தன்னை நியமித்திருந்ததாகவும், அதிர்ஷ்டவசமாகப் பாண்டியனுக்கு ஓலை கொண்டு வரும் வேலை தனக்குக் கிடைத்ததென்றும், கோட்டைக்கு வெளியே வருவதற்கு இரகசியச் சுரங்க வழி இருக்கிறதென்றும், அந்த வழியாகத் தான் வந்ததாகவும், பாண்டியனிடம் ஓலையைச் சேர்ப்பிக்கும் எண்ணமே தனக்குக் கிடையாதென்றும் கூறினான்.

அதன்மேல் புலிகேசி, ''திரும்பிப் பிக்ஷுவிடம் போய்ச் செய்தி சொல்ல உன்னால் முடியுமா?'' என்று கேட்டான்.

''பிரபு! திரும்பிச் செல்வது என் உயிருக்கு அபாயம். இருந்தாலும், இந்த உயிரைப்பற்றி இனிமேல் எனக்கு என்ன கவலை? தாங்கள் போகச் சொன்

பஜாஜ் லைட்டிங் போட்டி



ரூ. 50,000 மதிப்புள்ள பரிசுகள் பெறுங்கள்.

DE-150-TAM

இங்கே வெட்டுக

நீங்கள் செய்யவேண்டியது:

- கீழ்க்கண்ட ஆறு வாக்கியங்கள் சரியா தப்பா என்று தீர்மானித்து, பக்கத்திலுள்ள கட்டத்தில் இவ்வாறு ✓ குறி இடவும்.
- பஜாஜ் லைட்டிங் பற்றி 10 வார்த்தைகளுக்கு மேற்படாமல் ஆங்கிலம் அல்லது இந்தியில் மட்டுமே ஒரு விளம்பர வாக்கியம் (slogan) எழுதுக.
- முழு நுழைவுத் தாளை அனுப்பவேண்டிய முகவரி: 'பஜாஜ் லைட்டிங் போட்டி', தபால் பை எண் 10153, பம்பாய்-400 001.
- உங்கள் நுழைவுத் தாள் எங்களுக்குக் கிடைத்ததும், பஜாஜ் லைட்டிங் பொருட்களுக்கான 10% கழிவுக் கூப்பன் உங்களுக்கு அனுப்பப்படும்.

நுழைவுக் கட்டணம் இல்லை
பங்குபெறும் அனைவருக்கும்
பஜாஜ் லைட்டிங் பொருட்களுக்கான
10% கழிவுக் கூப்பன்!

இங்கே வெட்டுக

வாக்கியங்கள்	சரி	தப்பு
1. கடையில் ஃப்ளூரஸெண்ட் ட்யூபுகளைக் காட்டிலும் சாதாரண பல்புகளே அதிக சிக்கனமானவை.		
2. பஜாஜ் பல்புகளும் ஃப்ளூரஸெண்ட் ட்யூபுகளும் உலகின் சிறந்த லாம்புகளுக்கு ஈடானவை.		
3. 230V மெயின்ஸ் சப்ளையில் 230V பல்பு உபயோகித்தாலே அதிக பட்ச திறனைப் பெறலாம்.		
4. பஜாஜ் நைட் லாம்பு ஒரு மணி நேரம் எரிந்தால் ஜீரோ பவர் செலவழிகிறது.		
5. உட்புறம் வெண் பூச்சு கொண்ட பஜாஜ் லாம்புக்கு 'மில்கி ஒயிட்' என்று பெயர்.		
6. பஜாஜ், லைட்டிங் துறையில் மட்டுமே ஈடுபட்டுள்ளார்கள்.		

ஆங்கிலம் அல்லது இந்தியில் மட்டுமே விளம்பர வாக்கியம் எழுதுக

கொட்டை எழுத்துக்களில் தெளிவாக எழுதுக:

பெயர் -----------------------------------

முகவரி -----------------------------------

ஆண்/பெண் ------------ வயது ------------

பரிசுகள்:

2 முதல் பரிசுகள்—பஜாஜ் ஸ்கூட்டர்
4 2-வது பரிசுகள்—பஜாஜ் குக்கிங் ரேஞ்ச்
20 3-வது பரிசுகள்—பஜாஜ் பஜார் டீலக்ஸ் டேபிள் ஃபேன்
100 பரிவுப் பரிசுகள்—பஜாஜ் டீலக்ஸ் பிரெஷர் குக்கர் 5.5 லிட்.
600 பஜாஜ் நைட் லிட் லாம்புகள்—முதலில் கிடைத்த 600 நுழைவுத் தாள்களுக்கு

விதிகள்:

- பஜாஜ் எலெக்ட்ரிகல்ஸ் லிமிடெட்டின் ஊழியர்கள், வியாபாரிகள், அவர்களது விளம்பர ஏஜென்ஸிகள் மற்றும் உறவினர்கள் நீங்கலாக இந்தியாவிலுள்ள அனைவரும் இப் போட்டியில் பங்கு பெறலாம்.
- ஒரு நபர் ஒரு நுழைவுத் தாள் மட்டுமே அனுப்ப உரிமை உண்டு.
- தபாலில் தவறிய, சேதமான அல்லது தாமதித்த நுழைவுத் தாள்களுக்கு நாம் பொறுப்பேற்க முடியாது.
- சிறந்த வாக்கியத்தைத் தேர்ந்தெடுப்பதில் நீதிபதிகளின் தீர்ப்பே முடிவானது. அது பற்றி எவ்வித கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்ளப்பட மாட்டாது.
- வெற்றி பெற்றவர்கள் தபாலில் அறிவிக்கப்படுவர்.

முடிவு தேதி: 31 அக்டோபர் 1974

பஜாஜ் -1938 முதல் ஒளித் துறையில் ஒப்பற்றவர்கள்

கதையல்ல, சரித்திரம்!

ஒரே ஒரு வீரன் இறக்கும்வரை போலியான யுத்தம் ஒன்று நிகழ்ந்தது. அந்த வீரனும் உண்மையாக வீரம் காட்டி இறக்கவில்லை; கிளம்பினாலும் அஜீரணத்தினாலும்தான் அவன் இறந்தான்! மராத்தா சேனையின் தளபதி தாஜ் நிராஸ், சதாரா மாகாணத்தின் தளபதி ஷாஹூ. இருவரும் 1708ல் மோதினார்கள். போரின் முடிவு தாஜ் நிராஸுக்குச் சாதகமாக இல்லை. சரணடைவதைத் தவிர வேறு மார்க்கம் இல்லை. ஆனால் தம் நாட்டு மக்களுக்கு அளித்த வாக்குறுதியைக் காப்பாற்றப் போராடாமல் சரணடைய அவருக்கு விருப்பம் இல்லை. ஆகவே, பொய்யாக, போலியான ஒரு போரை நிகழ்த்தினார்; இது ஆறு நாட்கள் — ஒவ்வொரு நாளும் இருட்டியதும் யுத்தம் நிறுத்தப்படும்; மறு நாள் காலை மறுபடியும் தொடரும் — நடந்தது. ஆறாம் நாள் ஒரு மராத்திய வீரன் கிளம்பினால் இறந்தான். யுத்தமும் நின்றது. தாஜ் நிராஸும் ஷாஹூவிடம் சரணடைந்தார்.



னால் போகிறேன்'' என்றான் குண்டோதரன்.

''ஆம், அப்பா! நீ கட்டாயம் திரும்பிப் போக வேண்டும். போய், பிக்ஷுவிடம் இன்னும் பத்து நாளைக்குள் காஞ்சிமா நகரில் அவரை நானே நேரில் பார்ப்பதாகச் சொல்ல வேண்டும். எது நேர்ந்தாலும் என்ன கேள்விப்பட்டாலும் அவர் கொஞ்சமும் கலங்க வேண்டாமென்றும், எல்லா விவரங்களையும் நேரில் சொல்லுவதாகவும் கூற வேண்டும். உன்னால் முடியுமா?'' என்று புலிகேசி கேட்டான்.

பிக்ஷுவைப் பத்து நாட்களில் நேரில் பார்க்கப் போவதாகப் புலிகேசி சொன்னவுடன், குண்டோதரனுக்கே உண்மையில் தூக்கி வாரிப் போட்டது. அவன் முகத்திலும் கண்களிலும் நாம் என்றும் கண்டிராத ஆச்சரியத்தின் அறிகுறி காணப்பட்டது!

* * *

மேற்கூறிய சம்பாஷணை நடந்து ஒரு வாரத்திற்குப் பிறகு, காஞ்சிமா நகரின் தெற்குக் கோட்டை வாயிலையும் மதிலையும் காவல் புரிந்த வீரர்கள் எல்லாம் குண்டோதரனைப் போலவே ஆச்சரியக் கடலில் மூழ்கினார்கள். ஏனெனில், அந்தக் கோட்டை வாசலுக்கு எதிரே, அகழிக்கு அக்கரையில், வராகக் கொடி பிடித்த தூதவர்கள் இருவர் குதிரைமேல் நிராயுதபாணிகளாக வந்து நின்று, தாங்கள் கொண்டு வந்திருந்த கொம்பை வாயிலே வைத்து, 'பூம்' 'பூம்' 'பூம்' என்று ஊதினார்கள். அவர்களுடைய தோற்றமும், அந்தக் கொம்பின் முழக்கமும் அவர்கள் சமாதானத்தை நாடி வந்திருக்கும் புலிகேசியின் தூதர்கள் என்பதைக் காட்டின.


'ஆஹா! இதென்ன விந்தை! வாதாபிச் சக்கரவர்த்தியா சமாதானத் தூது அனுப்பியிருக்கிறார்? இது கனவா நனவா?' என்று காஞ்சிக் கோட்டையைக் காவல் புரிந்த பல்லவ வீரர்கள் அளவில்லா வியப்பை அடைந்தார்கள். நம்ப முடியாத அந்த அதிசயச் செய்தியானது, அதி சீக்கிரத்தில், மந்திராலோசனை மண்டபத்தில் இருந்த மகேந்திர பல்லவரைச் சென்றடைந்தது.

(தொடரும்)



பாம்பே
டையிங்கின்
எழில் விளக்கம்
எண்ணற்ற வண்ணக்
குவியல்களிலே
மூழ்கித் திளையுங்கள்.
பல நிறங்களிலும்
புத்தம் புதிய டிசைன்
களிலும் பாம்பே
டையிங்கின் ஸூப்பர்
ஃபைன் பாப்ளின்,
லான், கெம்ப்ரிக்
மற்றும் பாலியெஸ்டர்/
காட்டன்ப்ளெண்டு
கள். பாலியெஸ்டர்
மற்றும் காட்டன்
டெனிம்களில் கவர்ச்சி
கரமான 20 சாயல்கள்
காணத்
தெவிட்டாத
அரிய விருந்து!
பாம்பே டையிங்
BD. 7211

மேடை நாடகம் சரித்திரம்;
ஒப்பனை நாடக விசித்திரம்!





வரலாற்று நாயகர்களாக ஒரு கலைச்சேவகன்

சிவாஜி கணேசன்

'நாடக மேடையிலும் திரைப் படத்திலும் பல சரித்திர கதாபாத்திரங்களாகத் தோன்றியுள்ளீர்கள். அந்த அனுபவங்களைக் கல்கி நேயர்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும்' என்று கேட்டுக் கொண்டோம். உடனே நடிகர்திலகம் மகிழ்ச்சியுடன் சம்மதமளித்து இந்தக் கட்டுரையைத் தயாரித்தளித்தார்.

தொடர்கதை இலக்கிய "துருவ நட்சத்திரம்"

கடந்த கால வரலாற்றைக் கதையாக வழங்குவதென்பது எளிய செயலன்று. அதிலும் அதனைச் சுவைபடத் தொகுப்பதென்பது சுலபமான காரியமன்று. காலத்தை நிர்ணயிப்பதிலிருந்து கதாபாத்திரத்தைப் பரிமளிக்க வைக்கும்வரை கதாசிரியர்கள் பாடு பெரும் பாடுதான். இத்தனைக்கும் பிறகு, அதிலே கருத்துக்களும் இழையோட வேண்டும்.

ஆம்!

அமரர் கல்கியின் படைப்புக்கள் வாசகர்கள் வட்டத்திலே புதிய வரலாற்றையே படைத்தன.

'அடுத்த இதழ் என்று மலரும்' எனப் பல்லாயிரக் கணக்கான வாசகர்களை அவருடைய எழுத்தாற்றல் ஏங்க வைத்தது. தொடர்ந்து படிக்கத் தூண்டும் தொடர் கதைகளை அவர் வகுத்துரைத்தது போல் அவ்வளவு அழகாக எவரும் வகுக்க முடியாது போயிற்று என்று துணிந்து கூறலாம்.

சிவகாமி சபதத்தில் அந்தப் புலிகேசி! அடடா...! நேரில் பார்த்த மாதிரியே இருக்கிறது. புல்லரிக்க வைக்கும் புலமை அது. ஆவல் கொள்ள வைக்கும் நாவல் அது. அந்த மாபெரும் புதினப் பேராசிரியனின் படைப்புக்கள் ஒன்றில் நானும் பங்கு பெற்றேன்.

'கள்வனின் காதலி'யில் முத்தையன்!

ஒருவிதத்தில் பார்க்கப் போனால் அதுவும் சரித்திரக் கதைதான்! முத்தையன் என்ற





பெயர் மாறியிருந்தாலும் அந்தக் கள்வன் வாழ்ந்ததும் கடமையே கண்ணுயிருந்த ஓர் இன்ஸ்பெக்டரின் துப்பாக்கிக் குண்டுக்கு இரையானதும் உண்மை நிகழ்ச்சியே. சுந்தாவின் ''பொன்னியின் புதல்வர்'' இதனை மேலும் விளக்கிச் சொல்லும் என நம்புகிறேன். அந்தக் கள்வனும் இன்ஸ்பெக்டரும் சரித்திரத்தில் இடம் பெறாமல் போகலாம். ஆனால் சரித்திர புருஷர் கல்கி படைத்த கள்வனின் காதலி நாவல் இலக்கிய உலகில் சரித்திரம் சமைத்த ஒன்று.

எனவே முத்தையனாக நடித்ததில் பெருமிதம் கொண்டு உரிமையோடு அமரரின் ஆற்றலை உளமாறப் புகழ்ந்து பாராட்டி நன்றி செலுத்துகிறேன்.

களம் கண்ட கவிஞன்

★ கோவூர்கிழார் சங்ககாலப் புலவர். அவர் யாத்த 'கொற்றவள்ளை', மழபுல வஞ்சி' எனும் பாடல்கள் வீரனுக்கு வேட்கையூட்டும். எதிரிகளுக்கோ காலனைக் காட்டும். போரினைப் புகழ்ந்த அவர், அதனை அடியோடு வெறுத்து அமைதியைப் புகட்டப் புறப்பட்டார்.

இளமையில் கொண்ட கொள்கைகள் முதுமையில் பக்குவமாவதைப் போல் அவர் கதையானது. சங்க இலக்கிய வரலாற்றைக் கதையாகக் கவிஞர் தஞ்சை வாணன் கவிதை வடிவில் எழுத அதை மேடை ஏற்றிக் காண்பித்தேன். என் குழுவிலுள்ள ஒவ்வொரு நடிகருக்கும் சங்கத் தமிழ் கற்பித்தேன் எனலாம். அக்காலத் தமிழை அப்படியே கையாண்டோம். எடுத்துக்காட்டாக, விதவையைக் ''கைம்பெண்'' என்றே கூறுவோம். கஜானாவை ''ஆவணக்களரி'' என்போம். ஓலை தாங்கியைப் ''பட்டோலைப் பெருமான்'' என்போம். தமிழ் மக்களே வியந்த தனித் தமிழ் இலக்கிய நாடகமிது. ஆனால் ஒருசில ஏடுகள் ''கடினத் தமிழ்'' என்றன.

தமிழகத்து வரலாற்றைத் தனித்தமிழில் காட்டாது வேறு ''நைநு'' மொழியிலா காட்டுவது? அந்தக் ''கோவூர்க் கிழார்'' என் இதயத்தில் கொலு வீற்றிருக்கும் இன்பத் தமிழ் இலக்கியப் பாத்திரம்.

சங்க காலத்தில் இலக்கியம்தானே வரலாறு!

தெய்வத் தமிழ் தந்த திருநாவுக்கரசர்

★ 'ஒரு நாமம் ஒரு வடிவம் ஒன்றுமில்லாத' ஆண்டவனுகத் தோன்றுதல் கூடும். ஆனால் அடியவராகத் தோன்றுதல் கூடுமோ? அப்பர்! ஜகத்துக்கே வழிகாட்டிய சமயக் குரவர். உழவாரப்படை ஏந்தி மக்கட் தொண்டு புரிந்த மகான்.

அறிவு முதிர்ந்து ஞானம் முற்ற முற்றக் கனிந்து அடங்கிய கற்பகத் தரு. சிற்பிகள் செதுக்கிய சிலைகள் உள்ளன. ஓவியர் தீட்டிய சித்திரங்கள் உள்ளன. எனினும், 'அடியவர் என்பார் இங்ஙனமே' என எடுத்துக்காட்ட எவருளர்? இப்படி எண்ணியபோது கண்ணில் தோன்றியவர் ''காஞ்சிப் பெரியவர்''. எளிய பொலிவும், இனிய தோற்றமும், அருள் நிறை பார்வையும், அறிவு நிறை பேச்சும் அனைவரையும் அடிமை கொள்ளச் செய்வனவாகும்.

அடியாராக வேடம் புனையவும் எடுத்துக்காட்டாக ஓர் அடியாரே கிடைத்தது என் பாக்கியமே. அவர்தம் ஆசி எனக்கு என்று முண்டு. காஞ்சிப் பெரியவரைக் கண்முன் நிறுத்தியே ஒப்பனை பூண்டு வேடமணிந்தேன்.

முத்தமிழ் வளர்த்த மும்முடிச் சோழன்

★ தேசம் பல வென்று திசை எட்டும் புகழ் மணக்கத் தெய்வத் திருக்கோயில் கண்ட திருவுடைய பேரரசன் ராஜ ராஜ சோழன்.

திருமறைகளை வகுத்துத் திரம் பாடச் செய்தவன். அருங்கலைகளைப் போற்றி அணி செய்த அருளாளன். புலவர்கள் போற்றப் புகழுடன் பொலிந்த புலிக் கொடியோன். சோழன், வளவன், மறவன், எம் முன்னோன்.

புகைப்படங்கள் உதவி: பிலிம் நியூஸ் ஆனந்தன்







எத்துணை உயர்ந்த சரித்திர நாயகன்! எவ்வளவுதான் முயன்றாலும் அவனை முழுமையாகச் சித்திரித்துக் காட்ட முடியுமா? பட்ட பாட்டுக்கும் எடுத்துக்கொண்ட பிரயாசைக்கும் கிடைத்த ஒத்துழைப்புக்கும் அளவே இல்லை. ரசிகர்கள் அளித்த ஆதரவுக்கும் குறைவில்லை. என்றாலும் இன்னும் கூடச் சிறப்பாகச் செய்திருக்கலாம் என்ற எண்ணம் எனக்குண்டு. அதுதானே கலை வளர்ச்சிக்கு ஆதாரம்?

'சாம்ராட்' அசோகன்

★ இளமையிலேயே ஏகச் சக்ராதிபதியாக முடிசூட நினைத்த ஏந்தல். முனைந்து போரிட்ட முதற் போரிலேயே முழு வெற்றியும் பெற்ற முடிமன்னன். வெற்றிச் செருக்கிலே நிகழ்ந்த விளைவுகளைக் கண்டு வேதனையால் மனம் திருந்தி அமைதியறங் காக்க அன்பு வழியில் நின்று அகிலத்தையே ஆண்ட அரசன். புத்த நெறியைப் போதித்து மக்களுக்கு உற்ற நன்மைகள் புரிந்த உத்தமன். நாடாண்ட மன்னர்களிலே நானிலம் போற்ற வரலாற்றிலே வாழ்த்தப்படுகின்ற வாய்மையாளன். இன்றும் நம் தேசியக் கொடியில் அவன் சக்கரம் இருக்கிறது. நோட்டு, நாணயங்களில் அவன் இலச்சினை இருக்கிறது.

கால வெள்ளத்தை நீந்தி அவன் புகழ் பெறக் காரணமா யிருந்தது கலிங்கப் போர். அது அவன் அறிவுக் கண்களைத் திறந்தது. ''கிளைமாக்ஸ்'' காட்சி மட்டும் நடித்துவிட்டேன். கதையை அமைத்துக் கொண்டிருக்கிறேன். அசோகன் வாளேந்தும்போது நான் வல்லரசனாக விளங்குவேன். அதை விட்டெறியும்போது நான் புத்தனாகிறேன். இச்சையின் உச்சியில் இருப்பவன் துறவியின் தூய்மையை அடையும்போது அது தத்துவப் படைப்பாகிறது. சிங்கப்பூர் மக்கள் சென்ற ஆண்டு கண்டனர். இந்திய மக்கள் இவ்வாண்டு காணலாம்.

வீரபாண்டியக் கட்டபொம்மன்

★ ''கறந்த பாலையும் காகம் குடியாது, கட்டபொம்முதுரை பேரைச் சொன்னு''

''பாஞ்சாலங் குறிச்சி எல்லைக்குள்ளே போனு பாஞ்சி விரட்டுண்டா குள்ள முயல்''

பிஞ்சுப் பருவத்திலே நான் கேட்ட அஞ்சா நெஞ்சன் கதையிது. திருவிழாக் காலங்களிலே நான் தெருவிலே கேட்ட பாடலிது.

பாடலல்ல கதை என்பது பருவம் வர வரத் தெளிவாயிற்று. கதையல்ல வரலாறென்பது காலம் வரவரக் கண்முன் நின்றது.

இருட்டிலே ஒலித்த அது எல்லோர் முன்னிலையிலும் ஜொலித்தது. நாடகமாயிற்று.

மேடையிலிருந்து திரைக்கும் சென்றது. திரைக்குச் சென்றதும் திரைகடலையும் கடந்து ஆசிய ஆப்பிரிக்கக் கண்டத்து அரும் பெரு நடிகனென்ற பட்டத்தையும் எனக்குத் தந்தது. விடுதலை வீரனின் வரலாற்றை வையலுலகுக்குத் தந்தது. விழுப் புகழை எனக்குத் தந்தது. கயத்தாற்றிலே கட்டபொம்மனுக்குச் சிலை! கற்கோட்டை வேறு கட்டப்படுகிறது! இளமையில் நான் கண்ட கனவு, இதயக் கோட்டையில் குடியேறி இன்று எங்கு போயிருக்கிறது பாருங்கள்! முதல் முழக்கமிட்டவனாக மூலைக்கு மூலை முழக்கமிட்ட அந்தப் பாத்திரத்தை நான் எந்தக் காலத்திலும் மறவேன்.

மகாகவி பாரதியார்

★ தெய்வத் தமிழ்ப் பாடல்களால் தேசபக்தியை மூட்டிய தீரர் மகாகவி பாரதியார். வீர சுதந்திரம் வேண்டி நின்ற தீவிரவாதி. அவர்தம் நிமிர்ந்த நெஞ்சும் நேர்கொண்ட பார்வையும் உயர்ந்த லட்சியத்தைக் கொண்டவை. ''உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதினும் அச்சமில்லை'' என்ற அமரகவி அவர்.

அந்த மிடுக்கும், துடிப்பும், விவேகம் சுடர் விடும் விழிகளும் கொண்டு — அவராவதென்றால் எவரால் முடியும்!

குமரி முதல் இமயம் வரை ஒருமைப் பாட்டைப் பாட்டினால் வளர்த்து எட்டுத் திக்கும் இந்தியாவின் பெருமையைக் கொட்டி முழக்கிய வீரகவி.

தனக்குப் பின்னும் 'புரட்சிக் கவி' எனப் பாரதி தாசனைத் தந்து பரம்பரை கண்ட பாவலன்.

கற்கண்டு சொற்கொண்டு என்னைக் கவியுள்ளத்தில் பதித்தவன். கப்பலோட்டிய தமிழன் புகழையும் கவிதை ஏட்டிலே நிறைத்தவன்.

கப்பலோட்டிய தமிழன்
வ. உ. சிதம்பரம் பிள்ளை

★ படித்ததுண்டு. ஆனால் பார்த்ததில்லை, கட்டபொம்மனை. எனவே ஒப்பனையும் நடிப்பும் உருவகம் தந்தன. செக்கிழுத்த செம்மல் சிதம்பரம் பிள்ளை அப்படியா?

நம்மோடு வாழ்ந்தவர். நம் காலத்திலேயே பரம்பரை கண்டவர். ஆங்கிலேயனை எதிர்ப்பதே சாத்தியமில்லாமல் மறைமொழியாகத் தேசபக்தியை வளர்த்தபோதே பலரைச் சிறைக் கோட்டத்துக்குள் தள்ளினார்கள். ஆங்கிலேயனை எதிர்த்து வாதிட்டார். தேசபக்தியைத் தூண்டிச் சாதித்தார். அதுமட்டு

மல்ல. அவன் வணிகத்திலே அவனுடன் போட்டி போட்டார். சரி நிகராகத் தோன் றிச் சுதேசக் கப்பலோட்டினார். துணிவின் எல்லை இது.

அவராக நான்... முடிகிற காரியமா இது? முயன்றேன். ''தந்தையைக் கண்டேன்'' என்று தனயனே கூறினார். நான் தேறினேன். ஆம்! வ. உ. சி. சுப்பிரமணியம் அவர்களின் பாராட்டும், தேசபக்தர்களின் ஒப்புதலும் என் லட்சிய நிறைவுக்குச் சான்றாயின. அவருடன் பழகிய முதியவர்கள் பலர் என்னை அரவணைத்துக் கொண்டனர். தியாக, தீபமாகச் சுடர்விட்ட வ. உ. சி.யின் பாத்திரம் காங்கிரஸ் மகாசபைக்கு ஒரு கலங்கரை விளக்கம். நான் செய்த பேறுகளிலெல்லாம் தலையாய பேறு. அத்தலைமகனாக உணர்வொன்றி நடித்தது.

மராட்டிய சுயராஜ்ய வீரன் சிவாஜி

★ நான் மிக மிக இளைஞனாக இருந்த போதே, மிக மிக அறிஞராக இருந்த அண்ணா அவர்கள் எழுதிய 'சிவாஜி கண்ட இந்து ராஜ்ய'த்தில் மராட்டிய வீரன் சிவாஜி வேடமணிந்து நடித்தேன். தலைமை தாங்கிப் பேசிய தந்தை பெரியாரவர்கள் ''சிவாஜி'' என்ற சிறப்புப் பட்டத்தை என் பெயரோடு இணைத்தார்கள். ஏகோபித்த பாராட்டுப் பெற்று அது என் பெயருடன் இன்று இரண்டறக் கலந்து விட்டது. அதற்குப் பிறகு நீண்ட இடைவெளி.

மராட்டிய மலை அடுக்கங்களில் அவன் கட்டிய கோட்டைகளையும் கைப்பற்றிய கற்கோட்டங்களையும் நேரில் சென்று, அறிந்து வந்துள்ளேன். கர்ண பரம்பரைக் கதைகளையும், வரலாற்றுக் குறிப்புக்களையும் நிறையக் கேட்டிருக்கிறேன். அவற்றுள் உண்மையும் கற்பனையும் கலந்துள்ளன. எதை ஏற்பது, எதைத் தவிர்ப்பது என்பதுகூட தீர்மானிக்க முடியவில்லை. இதற்கு ஏன் இவ்வளவு முயற்சி என்கிறீர்களா? என் பெயரோடு இணைந்ததல்லவா! அதில் சிறு பிழை இருக்கலாமா? அதனால்தான்.

ஒருசில திரைப் படங்களில் தோற்றப் பொலிவு தந்திருக்கிறேன். முழுக் கதை கூறவில்லை. சமீபத்தில் பம்பாய் 'டெலிவிஷ'னுக்காக ''சத்ரபதி சிவாஜி'' என்ற படத்தில் (பத்து நிமிடம்) தனி நடிப்பு மூலம் (Mono Acting) தாய்ப் பாசம், தேசபக்தி, குருபக்தி, கருணை, சாந்தி, மித்ர பாசம் முதலிய குணநலன்களைச் சித்திரித்துள்ளேன்.

மராட்டிய சுயராஜ்யத்துக்காகப் பாடுபட்டு, அந்நிய மத ஆதிக்கத்தை அடியோடு வெறுத்து, கொரில்லாப் போர் மூலமும், ராஜதந்திரத்தாலும், இடத்தை வைத்துக் காரியத்தைச் சாதித்துக்கொள்ளும் நுண்ணறிவாலும் வானளாவப் புகழ்பெற்ற வரிப் புலி அல்லவா அவன்?

நாடகமாக முழுமை பெறும் நாளை எல்லோரும் ஆவலோடு எதிர்பார்க்கின்றனர். முயன்று கொண்டிருக்கிறேன்.

இவையன்றி, பகத்சிங், திருப்பூர் குமரன், ஜஹாங்கீர், சாக்ரடீஸ், ராஜேந்திர சோழன், ஐந்தாம் ஜார்ஜ் எனத் தோன்றி நடித்துள்ளேன். இனித் தொடர்வது எத்தனையோ. என் கடன் கலைப் பணி செய்வதே.



கதையல்ல, சரித்திரம்!

எந்த விதமான தாக்குதலையும் சமாளித்துத் தலைநிமிர்ந்து நின்ற ஒரு கோட்டையைச் சாதாரண ஒரு பட்டத்தைப் பறக்க விட்டுக் கைப்பற்றிய கதை விசித்திரமானது. புனே அருகே சாக்கன் நிலையில் உள்ள கோட்டையை 1662ல் மொகலாய தளபதி ஷாயிஸ்த கான் முற்றுகையிட்டார். சிவாஜியோடு மோதிய அதே ஷாயிஸ்த கான்தான். சாக்கன் கோட்டையும் சிவாஜியின் ஆட்சிக்கு உட்பட்டிருந்ததுதான். ஆயிரம் அடி உயரம் உள்ள மலையின் மீது கட்டப்பட்ட கோட்டை சாக்கன். ஷாயிஸ்த கானினால் இந்தக் கோட்டையைக் கைப்பற்ற முடியவில்லை. உளவாளிகள் மூலம் கோட்டையில் வெடி மருந்துக் கிடங்கு இருக்கும் இடத்தை அறிந்தார் மொகலாய தளபதி. ஷாயிஸ்தகான் பட்டம் விடுவதில் ரொம்பக் கெட்டிக்காரர். ஒரு பெரிய பட்டத்தைத் தயாரித்தார். அதன் வாலில் வெடி மருந்து தடவப்பட்ட திரியை இணைத்தார். இது ஊதுவத்தி போல மெதுவாக எரியும்படி செய்யப்பட்டது. குறி தவறாமல் பட்டத்தை இயக்குவதில் வல்லவரான தளபதி, வெடி மருந்துக் கிடங்கின்மேல் பட்டத்து வாலைக் கொண்டு பற்றவைத்தார். இதற்குச் சில துரோகிகளும் உடந்தையாக இருந்தனர். வெடி மருந்துக் கிடங்கில் தீப்பிடித்தால் கேட்கவா வேண்டும்? தகர்க்க முடியாத கோட்டை தகர்ந்தது. கோட்டையைப் பாதுகாத்து நின்ற மராட்டிய வீரர்கள் வானிலே தூக்கி எறியப்பட்டார்கள்.


"மொரமொரப்பாகவும் அதிமெல்லியதாகவும் வடாம் தயாரிக்கும் இரகசியம்,

பிரவுன் & போல்ஸன்

கார்ன்:ப்ளவர்"

என்கிறார் திருமதி லட்சுமி சர்மா, 'ஸோரெண்டோ', மவுண்ட் ப்ளஸண்ட் ரோடு, பம்பாய்-6.






பிரவுன் & போல்ஸன் கார்ன்:ப்ளவர் சமோசா, பட்டீஸ் ஆகியவற்றை அதிமெல்லியதாகவும், மொரமொரப்பாகவும் ஆக்குகின்றது. (இரண்டு கோப்பை சாதா மாவுக்கு 1 டேபிள் ஸ்பூன் அளவு போதுமானது.) குழைவான சுவைமிகு சூப், கிரேவி ஆகியவற்றைக் கெட்டியாகத் தயாரிக்க உதவும். பிரவுன் & போல்ஸன் கார்ன்:ப்ளவர் இளங் குழந்தைகள், நோயாளிகள் ஆகியோருக்குத் தெம்பு தரவும் ஆரோக்கியமூட்டவும் சிறந்தது. அருமையான பொருள்களிலிருந்து மிகுந்த கவனத்துடன் பக்குவப்படுத்தப் பட்டதால் கார்ன்:ப்ளவர்களில் மிகவும் சிறந்தது, பிரவுன் & போல்ஸன். அட்டைப் பெட்டிகளிலும் கிடைக்கிறது.

கார்ன் ப்ராடக்ட்ஸ்
தேர்ந்தெடுத்த
பரிசு – பெற்ற
பக்குவ முறை

வடாம்

தயாரிக்க உதவுவது
பிரவுன் & போல்ஸன்
கார்ன்ஃப்ளவர்



பக்குவ முறை :

1 கோப்பை பிரவுன் & போல்ஸன் கார்ன்ஃப்ளவர்
6 கோப்பை தண்ணீர்
1 முதல் 1½ கோப்பை மோர்
4-5 பச்சைமிளகாய்
சிறிது பெருங்காயம்
1 மேசைக் கரண்டி (தலைதட்டிய அளவு)
உப்பு (அல்லது சுவைக்கு ஏற்ற அளவு.)

1 தண்ணீரைக் கொதிக்க விடவும். அடுப்பின் சூட்டைக் குறைக்கவும். பிரவுன் & போல்ஸன் கார்ன்ஃப்ளவரை மோருடன் கலக்கவும். தண்ணீர் சேர்க்கவும். நன்கு கிளறவும். அத்துடன் உப்பு, பெருங்காயம் மற்றும் அரைத்த மிளகாயைக் கூட்டவும். சில நிமிடங்கள் கொதிக்க விடவும். பின்னர் கலவையைக் குளிர விடவும்

2 பிறகு சுத்தமான போலிதீன் தாளை வெய்யிலில் பரப்பவும். அதன் மீது ஒரு மேசைக்கரண்டியளவு கலவை-யிலிருந்து எடுத்து ஊற்றவும். இவ்யாறே ஒவ்வொரு மேசைக்கரண்டியாக கலவை முழுவதையும் தாளின் மீது இடைவெளி விட்டு ஊற்றவும். மாலை வரையில் வெய்யிலில் காயட்டும். மறு நாள் காலை தாளிலிருந்து வடாம் பிரித்து எடுத்து, பெரிய தட்டில் புரட்டிப் போடவும். முற்றிலும் காயும் வரையில் இரண்டொரு நாட்களுக்கு வெய்யிலில் நன்கு உலர விடவும்.

3 காற்றுப்புகா டப்பாவில் வடாம் எடுத்து வைக்கவும். தேவைப்படி எண்ணையில் பொரிக்கவும். வாணலியில் எண்ணெயை விட்டு சூடாக்கி, வடாம் பொரிக்கவும். பழுப்பாக மாறும் முன்பு வடாம் பொரித்து எடுக்கவும்.

உங்கள் சமையல் உன்னதமாய் இருக்க உயர்ந்த சாமானையே உபயோகியுங்கள்.

கார்ன் பிராடக்ட்ஸ் கம்பெனி (இந்தியா) பிரைவேட் லிட்.
ஸ்ரீநிவாஸ் ஹவுஸ், எச். சோமானி மார்க்,
பம்பாய் - 400 001,

OBM-0621A TM

கதையல்ல, சரித்திரம்!

1875 — பரோடா சமஸ்தானத்துக்கு அடுத்த வாரிசு இல்லை. பிரிட்டிஷ் அரசாங்கம், இறந்த மகாராஜாவின் மனைவி அவர் தம் விருப்பப்படி ஒரு பிள்ளையைத் தத்து எடுத்துக்கொள்ள அனுமதித்தது. ராணிக்கு உறவில் ஒருவரை இளவரசராக்க விருப்பமில்லை. பரோடாவை அடுத்த கிராமப்புறங்களிலிருந்து சிறுவர்களைக் கொண்டு வரச்செய்து அவர்களிலிருந்து ஓர் ஏழையை இளவரசராக்க நிச்சயித்தார். போலீஸ் கிராமங்களை வளைத்துக் கல்வி அறிவில்லாத இளம் கிராமத்து இளைஞர்களைக் கொண்டு வந்து நிறைத்து விட்டது. அரண்மனையில் மகாராணி ஜமுனா பாய் அந்தக் கிராமப்பையன்களுக்கு ஒரு பரீட்சை வைத்தார். சாப்பாட்டுப் போட்டி! கிராமத்துப் பையன்கள் உயர்ந்த உணவையோ சாப்பிடும் நாகரிக முறைகளையோ அறியாதவர்கள். அவர்களோடு தானும் அமர்ந்து உணவருந்தினாள் ராணி. அது தமாஷான காட்சி. ஆனால் ஒரே ஓர் இளைஞன் ராணி எதை எப்படிச் சாப்பிடுகிறாள் என்று கவனித்து அதன்படியே தானும் சாப்பிட்டான். அவன் வயது பன்னிரண்டு. பெயர் கோபால் ராவ். தோற்றத்தில் மற்றவர்களைப் போலத்தான் அநாகரிகமாக இருந்தான். ஆனால் உன்னிப்பாகக் கவனிப்பதில் வல்லவனாக இருந்தான். ராணியாரின் செயல்களைப் பார்த்து அதே போல் நாகரிகமாகச் சாப்பிட்டான். அதனால் பரோடாவின் மகாராஜாவாகும் பாக்கியம் கிடைத்தது. மூன்றாவது கெய்க்வார் சாயாஜி ராவ் என்ற பட்டப் பெயருடன் 64 வருடங்கள் பரோடாவை அரசாண்டான் இந்தப் பட்டிக்காட்டு ஏழை!



□

ராயல துர்க்கத்தை ஆண்ட பொம்மல நாயக்கர் தம்முடைய வீரர்களுக்குப் பத்து நாட்களுக்கு ஒருமுறை ஊதியம் கொடுத்து வந்தார். யுத்த காலத்தில் இதை இவர் அவர்களுக்கு எப்படி அனுப்புவார் தெரியுமா? அறுநூறு அடிகளுக்கு அப்பால் போர்க்களத்தில் இருப்பார்கள் வீரர்கள். கோட்டை மீதுள்ள பீரங்கியினுள் நாணயங்கள் கொண்ட பையை வைத்து அதை வெடிக்கச் செய்வார். பணப் பை அவருடைய வீரர்களின் மத்தியில் போய் விழும். சம்பளப் பட்டுவாடா நடைபெறும்!



□

ஜஹாங்கீருடைய கஜானாவில் தான் உலகிலேயே யாரிடமும் இல்லாத விலைமதிப்பற்ற நவரத்தினக் கற்களின் குவியல் இருந்தது.

279,450 காரட் மதிப்புடைய மிக உயர்ந்த வைரங்கள்.

2,235,600 காரட் மதிப்புடைய அற்புதமான நல் முத்துக்கள்.

372,600 காரட் மதிப்புடைய ரூபி (சிவப்பு ரத்தினக் கற்கள்).

931,500 காரட்டுள்ள மரகதம் (பச்சை நிறம் காட்டும் உன்னதக் கற்கள்).

186,300 காரட்டுக்கான ஜேடு (Jade) என்ற ஒருவகைக் கல்.

இவற்றின் மதிப்பு உத்தேசமாக 250 மில்லியன் டாலர்களுக்கும் அதிகமாகும். இவர் தம் செல்வத்தைக் காரட் கணக்கில் அளவிடுவதில்லை. மணங்குக் கணக்கில் தான் அளவிடுவார்!

தொகுப்பு: கௌசிகன்





கம்பருக்கு எஞ்சிய பிள்ளை

நா. பார்த்தசாரதி

கவியரசர் கம்பர் தமது மாளிகை முற்றத்தில் உலாவிக் கொண்டிருந்தார். மனம் நிம்மதி இழந்திருந்தது. சோழன் தன்னுடைய மகன் அம்பிகாபதியின் மேல் கடுஞ் சீற்றம் கொண்டிருக்கிறான் என்பது கம்பருக்குத் தெரிந்து விட்டது. இளமைத் துடுக்கிலே அம்பிகாபதி சோழனின் அருமை மகள் அமராவதியைக் காதலிப்பதும் அமராவதி அவனிடம் மனம் மயங்கிப் பழகுவதும் கம்பருக்குத் தெரிந்திருந்தன. 'இளங் கன்று பயமறியாது' என்பது போல் அம்பிகாபதி நடந்து கொண்டிருந்தான்.

''சோழ சக்கரவர்த்தி தங்களைக் காண வருகிறார்'' — என்று வேளையில்லாத வேளையில் காவலன் வந்து கூறியபோதே கம்பருக்கு அதைப்பற்றி உள்ளூறச் சந்தேகம்தான்.

இராம காதையைக் காப்பியமாகச் செய்து கொடுத்த தன் மேல் சோழ மன்னனும், சோழ நாடும், மக்களும் வைத்திருக்கிற மதிப்பெல்லாம் அம்பிகாபதியின் சிறுபிள்ளைத்தனமான காரியத்தால் போய் விடுமோ என்று பயந்தார் அவர்.

கவிச்சக்கரவர்த்தியின் உள்ளம் கவலையால் புழுங்கியது. சிந்தனை ஓடவில்லை. அம்பிகாபதியிடமும் அழகுக்குக் குறைவில்லை. அரசகுமாரியாயிருந்தும் அமராவதி அவனிடம் மயங்கக் காரணங்கள் இருந்தன. 'என் மகன் தன் அழகாலும் அவளை மயக்குவான்! தன்னுடைய சொற்களின் அழகாலும் அவளை மயக்குவான். எத்தனையோ அரசகுமாரிகள் சாதாரணமான கவிகளிடம் கூட அடிமைகளாக இருக்கத் தவித்திருக்கிறார்கள். என் மகனோ கவிகளில் அழகானவன்! அழகானவர்களிலே கவிஞன். இது இப்படி நேர்ந்தது இயல்பே. ஆனால் இது சோழனுக்கும் எனக்கும் உள்ள நட்பைக் கெடுத்து விடும். சோழன் எனக்குப் பெரிய அந்தஸ்தைக் கொடுத்துத் தன் அரண்மனையில் தனக்கு இணையாக வசிக்க வசதியளித்திருக்கிறான். ஆனாலும் என் மகனின் காதலுக்கு அந்தப் பெருமையை அவன் தர விரும்பவில்லை என்று தெரிகிறது.'

கம்பர் இப்படி எண்ணிக் கொண்டிருந்த போதே காவலர்கள் கட்டியங்கூற அரசன் மாளிகைக்குள்ளே நுழைந்து அவருக்கு எதிரே வந்து விட்டான்.

''இந்த மனோரம்மியமான மாலை வேளையில் கவிச்சக்கரவர்த்தியின் தனிமையில் குறுக்கிட வந்திருக்கும் இந்த ஏழைக் கொற்றவனைப் பொறுத்தருள வேண்டும்.''

''சோழச் சக்கரவர்த்திகள் குறுக்கிடக் கூடாத எந்தத் தனிமையும் என்னை மகிழ்வித்து விட முடியாது...''

''ஆம்! இப்போதெல்லாம் உங்களையும், என்னையும் போல் முதியவர்கள் தான் தனிமையில் மகிழ்கிறோம். இளைஞர்கள், தனிமையைச் சபிக்கிறார்கள்.''

''இளைஞர்கள் தனிமையைச் சபிக்கலாம், அரசே! ஆனால் தனிமையைச் சபிக்கிறவர்கள் எல்லாருமே இளைஞர்கள் ஆகிவிட முடியாது...''

''அப்படியில்லை, கவிச்சக்கரவர்த்தி! கவிகள் தனிமையைக் காதலிப்பதன் மூலம் சரஸ்வதி கடாட்சம் பெற முடியும். சரஸ்வதி கடாட்சத்துக்குப் பதில் பெண்களின் கடாட்சத்துக்கு அலைகிற இளங் கவிகளே இப்போது அதிகமாயிருக்கிறார்கள்...''

''சரஸ்வதியும் ஒரு பெண்தான் அரசே!''

''காமுகர்கள் ஒருபோதும் சரஸ்வதியால் கவனிக்கப்படுவதில்லை.''

''காமத்தையும் காதலையும் வரையறுப்பதற்குச் சோழச் சக்கரவர்த்திகளின் அளவுகோல் என்னவோ?''

''தனக்கு எட்டாத உயரத்திலுள்ள பெண்ணைக் கண்டு தவித்து ஆசைப்படும் ஒவ்வோர் ஆணும் காமுகன்தான் என்பது என் கருத்துக் கம்பரே!''

''உலகினர் கற்பிக்கும் உயர்வு தாழ்வுகள் காதலைப் பாதிப்பதில்லை. நமக்குப் பிடிக்காத காதல்களுக்குச் சில வேளைகளில் அந்தக் காதலர்களின் சம்மதம் இன்றியே நாமாகக் காமம் என்று அவசரப்பட்டுப்பெயர் சூட்டி விடுகிறோம்.''

— கம்பர் சற்றே சூடாகத்தான் மறுமொழி கூறியிருந்தார். சோழ மன்னன், சுற்றி வளைத்துத் தன்னிடம் எதைப் பற்றிப் பேச முற்படுகிறான் என்பது அவருக்குப் புரிந்தது. அவன் அதைச் சுற்றி வளைத்துப் பேசியது மட்டும் அவருக்கு ஆத்திரமூட்டவில்லை. தன் ஒரே மகன் அம்பிகாபதி அமரா

வதியையும், அமராவதி அம்பிகாபதியையும் காதலிக்கிற மனங்கள் இணைந்த காதலைக் காமம் என்று சோழன் கூறியதைக் கம்பர் வெறுத்தார். தன் மகன் மேல் உயிரையே வைத்திருக்கும் அமராவதியைப் பற்றி எதுவுமே சொல்லாமல் தன் மகனை மட்டுமே காமுகன் என்று சோழன் குற்றம் சாட்டியது அறவே கம்பருக்குப் பிடிக்கவில்லை.

அவர் சொல்லியதைக் கேட்டுச் சோழனும் வாளா இருந்து விடவில்லை. "இந்தக் கணமே என்னோடு புறப்பட்டு வந்தால் கூட எது காதல் எது காமம் என்பதைக் கவிச்சக்கரவர்த்திகளுக்கு நான் நேருக்கு நேர் காண்பித்து விட முடியும். கவிச்சக்கரவர்த்தி என்னோடு அரண்மனைச் சோலை வரை இப்போதே வர முடியுமா?"

"போகலாம்! வாருங்கள்...." கம்பர் சோழ மன்னனைப் பின்தொடர்ந்தார்.

அரண்மனைத் தோட்டத்தில் ஒரு பூஞ்செடி மறைவில் கம்பரை அழைத்துச் சென்று, "அதோ பாருங்கள்" என்று கோபமாகச் சுட்டிக் காட்டினன் சோழன். அவன் சுட்டிக் காட்டிய திசையில் அம்பிகாபதியும், அமராவதியும் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

"இராவணனின் காமத்தால் விளைந்த கொடுமையைச் சித்திரிக்கும் மாபெரும் காவியத்தை நீங்கள் பாடியிருக்கிறீர்கள்... உங்கள் மகனே....?"

—இந்த உவமையைக் கம்பர் இரசிக்கவில்லை. ஆனாலும் பதறாமல் சோழனைக் கேட்டார் அவர் :

"அரசே! இதில் எது காமம்?"

"உம்முடைய மகன் அரசகுமாரியை நிறுத்தி வைத்துப் பேசிக் கொஞ்சிக் கொண்டிருப்பது பின் என்னவாம்?"

"அரசகுமாரி என் மகனை நிறுத்தி வைத்துப் பேசிக் கொஞ்சிக் கொண்டிருப்பதாக நான் சொன்னால்...?"

"அது சாத்தியமில்லை கம்பரே!"


"ஏன் சாத்தியமில்லை? என் மகன் காதலித்தால் அது காமம். அரசகுமாரி காதலித்தால் அது காதல். விநோதமான வாதம் தான் அரசே!"

"விநோதம் எதுவும் இல்லை கம்பரே! நான் கூறுவது தான் உண்மை. அதோ பாருங்கள்! உங்கள் மகன் ஒரு காமுகனைப் போல் அரசகுமாரியின் இடையையும் நடையையும் புகழ்ந்து பாடிப் பிதற்றுகிறான்..."

—என்று சோழன் கூறிய சமயத்தில்,

"இட்ட அடி நோவ எடுத்தஅடி கொப்புளிக்க
வட்டில் சுமந்து மருங்கசைய"

என்று அம்பிகாபதி பாடத் தொடங்கியிருந்தான். அப்போது தோட்டத்துக்கு வெளியே தெருவில் கொட்டிக் கிழங்கு விற்கும் பெண் ஒருத்தி, "கொட்டிக் கிழங்கோ கொட்டிக் கிழங்கு!" — என்று கூவி விற்றுக் கொண்டு



வந்தான். கம்பர் சமயோசிதமாகத் தன் மகன் தொடங்கிய பாடலின் பின் இரண்டடியை —

— கொட்டிக்
கிழங்கோ கிழங்கென்று
கூறுவாள் நாவில்
வழங்கோசை வையம் பெறும்

என்று தாமே பாடி முடித்தார். பாடி முடித்ததோடு நிற்கவில்லை. அரசனிடம் சொன்னார்: "சக்கரவர்த்தி! என் மகன் உமது மகளைப் பாடினான் என்று ஏன் நினைத்து வருந்துகிறீர்கள்? அதோ தெருவில் கொட்டிக் கிழங்கு விற்றுக் கொண்டு வரும் பெண் எவ்வளவு அழகாக இருக்கிறாள்? அவளைத்தான் அவன் பாடினான் என்று வைத்துக் கொள்ளுங்களேன்..."

"கவிச்சக்கரவர்த்தி என்ன சொன்னாலும் நான் ஏற்க மாட்டேன். காமத்தின் கொடுமை ஈரேழு பதினான்கு புவனங்களிலும் பெரிய வீரனாகிய இராவணனைச் சீரழித்தது என்று காவியம் எழுதிய உங்கள் மகன் அம்பிகாபதி காமுகனே என்று நான் சபை நடுவே நிரூபித்து விட்டால்....?"

"இப்படி அடிக்கடி என் மகன் காமுகன் என்று கூறிவிடுவதன் மூலம் சோழச் சக்கரவர்த்திகள் என்னை அதிகம் அவமானப்படுத்தி விட்டதாக நினைத்தால் அது தவறு..."

"தவறில்லை! நாளை என் சபை நடுவே என் மகள் அமராவதி சர்வாலங்கார பூஷிதையாக எதிரே வந்து இருப்பதைப் பார்த்தபடி அவளைப் பற்றி ஒரு வார்த்தை கூடப் பாடாமல் இறைவனைப் பற்றிப் பாரமார்த்திகமாக நூறு பாடலை உம் மகன் அம்பிகாபதி பாடி விட்டால்தான் அவன் காமுகனில்லை என்பதை நான் ஏற்க முடியும்..."

"எப்படியோ அவனைச் சோதிக்க அல்லது தண்டிக்க உங்களுக்கு இது ஒரு வியாஜம்— அப்படித்தானே?"

"வியாஜமோ இல்லையோ? உமக்குச் சம்மதமா?"

"சோழ மன்னா! இதில் எல்லாம் நான் கலங்கி அழிந்து விட மாட்டேன். என் மூத்த பிள்ளைக்குப் பெயர் இராமாவதாரக் காவியம். இளைய பிள்ளைதான் அம்பிகாபதி என்பது ஞாபகம் இருக்கட்டும்!"

"சோதனைக்குச் சம்மதம்தானே?"

"சம்மதம்...."

"நாளைக் காலை அரசவை கூடியதும் உம்முடைய மூத்த பிள்ளையாகிய இராமாவதாரக் காப்பியம் உமக்கு அளித்த புகழோடும் இளைய பிள்ளையாகிய அம்பிகாபதி உமக்கு அளிக்க இருக்கும் நீங்காப் பழியோடும் உம்மை அவையில் எதிர்கொள்வேன்..."

"சோழச் சக்கரவர்த்திகள் என்னுடைய இராமாயணத்தை மதிக்க முடிகிறது. ஆனால் என் மகனுடைய காதலை மதிக்க முடியாமல் போகிறது —"

"அது காதலா, காமமா என்பதே நாளைக்குத்தான் முடிவு செய்யப்பட வேண்டும், கம்பரே!"

"அதை முடிவு கட்டக் காதலிப்பவர்களை வேறெவருக்கும் உரிமை இல்லை."

"அதையும்தான் பார்த்து விடலாம்!" அரசன் ஆத்திரத்தோடு கம்பருக்கு விடை கொடுத்தான். கம்பர் தம்முடைய மாளிகைக்குத் திரும்பினார். அதன்பின் சிறிது நேரத்துக்கெல்லாம் அம்பிகாபதி வந்தான்.

கம்பர் அவனைக் கூப்பிட்டு இரைந்தார்.

"நீ அரசகுமாரியைக் காதலிப்பதனால் சோழனும் நானும் விரோதிகளாக நேர்கிறது மகனே! நான் பெற்ற இரண்டு குழந்தைகளில் இராமாயணம்தான் என் பெயரைக் கடைசிவரை காப்பாற்றும் போலிருக்கிறது!"

"தந்தையே! அவள் சோழன் மகள் என்பதால் நான் அவளைக் காதலிக்க முடியாதா? அல்லது நான் கம்பர் மகன் என்பதால் அவள் என்னைக் காதலிக்கக் கூடாதா?"

"உலகம் பொல்லாததடா மகனே!"

"ஜனகன் வில்லை முறித்த ராமனுக்குச் சீதையை மாலையிட வைத்த கதையின் கவிஞர் அப்பா நீங்கள்! தமிழ் அகத்திணைக் காதலைச் சீதாப்பிராட்டிக்கும், இராமனுக்குமே அளித்த தாங்களா எங்களை மறுப்பது?"

"நான் மறுக்கவில்லை. அரச கோபம் சீறுகிறது. அவன் மறுக்கிறான். குமுறுகிறான். உன்னைக் காமுகன் என்கிறான் மகனே!"

"காதல் புரியாதவர்களுக்கு உலகில் எல்லாமே காமம் தான் அப்பா!"

"மகனே! உனக்குக் காதலும் காமமும் புரிவதை விட உலகமும் அதன் அதிகார ஆணவ சக்திகளும் இப்போது புரிய வேண்டியது அவசியம். நீ காதலை இழக்கப் போகிறாயா, அல்லது நான் உன்னை இழக்கப் போகிறேனா என்பது தெரியவில்லை. நாளை அரசவையிலே சோழன் உனக்கு ஒரு சோதனை வைக்கப் போகிறான்—"

"என்ன சோதனை அப்பா அது?"

கம்பர் சோதனையை விவரித்தார்.

"இதுதானா? நூறு பாட்டு மட்டும் என்ன? ஆன்மிக விஷயமாக ஆயிரம் பாட்டும் பாடவும் நான் சித்தமாக இருக்கிறேன் அப்பா..." என்றான் அம்பிகாபதி.

கம்பர் இதற்கு மறுமொழி கூறவில்லை. அம்பிகாபதியின் புலமையைப் பற்றி அவருக்கு நம்பிக்கை இருந்தது. என்றாலும் அவர் மனம் ஏனோ இனம் புரியாமல் கலங்கியது.

அதிரூபவதியான அமராவதியை எதிரே பார்த்துக் கொண்டே நூறு பாரமார்த்திகப் பாடல் பாடி முடிக்கும் நிபந்தனையில் தோற்றால் அம்பிகாபதி கொலைக்களத்தில் தலை வேறு உடல் வேறாகச் சிரச்சேதம் செய்யப் படுவான் என்று அரச கட்டளை வேறு எச்சரித்தது. அவர் புகழுக்காகப் பெற்ற பிள்ளை இராமாயணம். பாசத்துக்காகப் பெற்ற பிள்ளை அம்பிகாபதி. கம்பருடைய மனம் தவித்தது.

இரவோடு இரவாக ஒரு தோழிப் பெண்ணின் மூலம் அமராவதி அம்பிகாபதிக்குச் சேதி சொல்லி அனுப்பினாள்.

"ஆருயிர்க் காதலரே! கலக்கம் வேண்டாம். நீங்கள் ஒவ்வொரு பாட்டைப் பாடி முடித்ததும் நான் சைகை செய்கிறேன். என் சைகை முடிந்து நான் 'பூர்த்தியாயிற்று' — என்பதற்கு அடையாளம் காட்டியதும் நீங்கள் பாடுவதை





கண்ணு, நாம
ஓடோனில்
உபயோகிக்கிறோம்

ஓடோனில் துர்நாற்றங்களை உடனடியாக அழிக்கிறது. பாத்ரூம் போன்ற இடங்களைத் தூய்மையாகவும் நறுமணத்துடனும் வைக்கிறது.

ஓடோனில் பல்வேறு நறுமணங்களில் கிடைக்கின்றன. ஓடோனில் வகைவகையான அளவுகளில், தினுசுகளில், டப்பாக்களில் கிடைக்கின்றன.

பல்சாரா
நலமான வாழ்க்கைக்கு
நவீனமான வசதிகள்

BALSARA பல்சாரா & கம்பெனி (பிரை.) லிட்.

CHAITRA-BLS-6 TAM REV.

காயங்களால் தொற்று நோய் பரவக்கூடும்



புதிய பாண்டு-எய்ட்* பிராண்ட் டிரஸ்ஸிங்

பயன்படுத்தி அவற்றைப் பாதுகாருங்கள். காயங்களை விரைவில் ஆற்ற இப்போது மெர்க்கியூரோக்ரோம் மருந்து கலக்கப்பட்டுள்ளது.





உங்கள் குழந்தைகளின் வாழ்வில் தூசியும் அழுக்கும் எங்கும் இடம் பெறுகின்றன. ஆனால் அவை இடம் பெறக் கூடாத இடம் ஒன்று உண்டு—அதுதான் திறந்த காயம்.

எல்லா சிறிய வெட்டுக் காயங்கள், சிராய்ப்புகளை ஆற்றுவதற்கு புதிய பாண்டு-எய்ட்* டிரஸ்ஸிங் உபயோகியுங்கள். இப்போது அதில் மெர்க்கியூரோக்ரோம் மருந்து கலக்கப் பட்டுள்ளது. இந்த திறமையான ஆண்டிசெப்டிக் மருந்து பிளாஸ்டர் சருமத்துக்கு இதமளித்து, காயங்களை ஆற்ற உதவுகிறது. புதிய பாண்டு-எய்ட்* டிரஸ்ஸிங் பயன்படுத்திப் பாதுகாப்பது விவேகமாகும்.

எப்பொழுதும் புதிய பாண்டு-எய்ட்* டிரஸ்ஸிங்குகள் கைவசமிருக்கட்டும்.

A Johnson & Johnson product

*TRADEMARK © J & J

OBM-3173 TM

கதையல்ல, சரித்திரம்!

இலங்கையைப் பதினெட்டாம் நூற்றாண்டில் அரசாண்ட மன்னர் மஹாதிஸா மஹா நாகா என்பவர் நிர்மாணித்த புத்த விஹாரம் அம்பதாலா பகோடா. மக்கள் கதம்ப நதியிலிருந்து கோயிலுக்குச் செல்லும் பாதை நெடுகிலும் ரத்தினக் கம்பளத்தை விரித்து வைத்தார் இவர்! நதியிலிருந்து கோயில் இருந்த தூரம் ஏழு மைல்கள்! புத்த தேவனை வழிபட வருவோர் தூய்மையான பாதங்களோடு விஹாரத்துக்கு வரவேண்டும் என்பதற்காகவே இந்த ஏற்பாடு!



நிறுத்தி விடலாம்'' — என்று கூறியனுப்பியிருந்தாள் அவள்.

''நூறு பாட்டு இறைவனைப் பாடி முடித்து வெற்றி பெற்றதும் என்னைக் காமுகன் என்ற அந்த அரசனுக்கு எரிச்சலூட்டுவதற்காகவாவது அமராவதியின் அங்க லாவண்யங்களைப் புகழ்ந்து பாடுவேன். இதை அவளிடம் போய்ச் சொல்லு'' என்று வந்த அவள் தோழியிடம் பதில் கூறி அனுப்பினான் அம்பிகாபதி. காதலிக்கப்படுகிறவள் தன் மகள் என்பதனால் அவளைக் காதலிப்பவர்களைக் காமுகனாக நினைக்கும் சோழன் மேல் கோபம் வந்தது அவனுக்கு.

மறுநாள் அரசவை கூடியது. ஒட்டக்கூத்தர், கம்பர் முதலிய பல புலவர்கள், அமைச்சர் பிரதானிகள் குழுமினர். அரசன் முன்னிலையில் அமராவதியை எதிரே பார்த்தபடி நிபந்தனைப்படி இறைவன் விஷயமாகப் பாடலானான் அம்பிகாபதி. மிகவும் கவனமாகப் பரமனைப் பற்றிய பாடல்களை அவன் பாடிக் கொண்டே வந்தான் — பாடல்கள் வேதாந்த முதிர்ச்சியோடு இருந்தன. 'இவனையா காமுகன் என்று சொன்னேம்' என எண்ணி அரசனே வருந்தும்படி அவ்வளவு சிறப்பான பாரமார்த்திகப் பாடல்களை அம்பிகாபதி அப்போது பாடினான்.

கவனமாக எண்ணி வந்த அமராவதி நூறாவது பாடலை அவன் பாடியதும் 'பூர்த்தியாயிற்று' — என்பதற்கு அடையாளமாகக் குறிப்பைக் காட்டி விட்டாள்.

அதுவரை கட்டுப்பாடாக ஆன்மிக விஷயத்தைப் பாடி வந்த அம்பிகாபதி திடீரென்று அதை நிறுத்தி விட்டு அமராவதியின் தோற்ற அழகை வர்ணித்துப் பாடத் தொடங்கினான்.

அவ்வளவுதான். ஒட்டக்கூத்தர் புயலாகச் சீறி எழுந்தார்.

''அம்பிகாபதி பாடிய பாடல்களில் முதல் பாட்டுக் காப்பிய மரபுப்படி காப்புச் செய்யுள் ஆகி விடும். காப்புச் செய்யுள் தவிர நூறு பாட்டு இறைவனைப் பற்றி இருக்க வேண்டும் என்பது அரசனின் நிபந்தனை— அப்படியே தொண்ணூற்றொன்பது பாடல்களே பாடப்பட்டுள்ளன — நூறாவது பாட்டுச் சிற்றின்பப் பாட்டாகி விட்டது. அம்பிகாபதி நிபந்தனையில் தோற்றான்!''

இதைக் கேட்டு மகாகவியாகிய கம்பர் அந்த அவையில் நெடுமரம் சாய்வது போல் மூர்ச்சித்து விழுந்தார்.

அவருடைய மூர்ச்சை தெளிந்தபோது அம்பிகாபதியின் குருதி கொலைக் களத்தை நனைத்த செய்தி தெரிவிக்கப்பட்டது. புத்திர சோகத்தால் அனலிடைப்பட்ட புழுவெனத் துடித்தார் கம்பர். வெந்த புண்ணில் வேலெறிவது போல் பொறாமைக்கார ஒட்டக்கூத்தர்,

''கம்பரே! இனி உமக்கு நீரே அடிக்கடி கூறிக் கொள்வது போல் உமது மூத்தபிள்ளையான இராமாயணம் தான் கொள்ளி போட வேண்டும்'' என்றார். கம்பர் ஆத்திரப்படவில்லை.

அடங்கிய — ஓய்ந்த குரலில் நிதானமாக ஒட்டக்கூத்தருக்கு மறுமொழி கூறினார்:

''கூத்தரே! நான் காவியத்தில் எழுதிய தசரதன் தன்னுடைய மகன் காட்டுக்குப் போனான் என்று கேட்டதுமே அது பொறுக்காமல் உயிரையே விட்டு விட்டான். அந்தக் கதாபாத்திரத்தைப் படைத்து அதைக் காவியமாக எழுதிய நானோ என் மகன் சுடுகாட்டுக்குப் போனான் என்று கேட்ட பிறகும் உயிரை விடாத கல்நெஞ்சனாக இன்னும் இருக்கிறேன். தசரதனைப் போல் மகன் துயர் கண்டு இறக்க முடியவில்லையே என்னால்....?

''பரப்போத ஞாலம் ஒருதம்பி ஆளப்
பனிமதியம்
துரப்போன் ஒருதம்பி பின்தொடரத்
தாறும் அன்னையுடன்
வரப்போன மைந்தர்க்குத் தாதைபொறுத
உயிர் மாய்த்தனன் நெஞ்சக
உரப்போ எனக்கு இங்கு இனி
யாருவமை உரைப்பதற்கே?''

இதைக் கேட்டபோது கவிதை என்ற தலைச்சன் பிள்ளை கம்பரிடம் எஞ்சியிருக்கும் வரை அவரை எந்தப் புத்திர சோகமும் வீழ்த்தி விட முடியாதென்று ஒட்டக்கூத்தருக்குத் தோன்றியது. அந்தக் கவியாற்றலுக்காகவும் சேர்த்துக் கம்பர் மேல் பொறாமைப்படுவதைத் தவிர ஒட்டக்கூத்தரால் அப்போது வேறெதுவும் செய்ய முடியவில்லை.

மாதந்தோறும் சேமிக்கும் ரூ. 10 எப்படி ரூ. 414 ஆக மாறுகிறது என்பதைப் பாருங்கள்...



நீங்கள் மாதம் ரூ. 10 வீதம் 36 மாதங்கள் சேமித்தால், ரூ. 360 மட்டுமே சேர்க்க முடியும். ஆனால் ஸ்டேட் பாங்க் ரெக்கரிங் டெபாசிட் திட்டத்தில் இந்தத் தொகை ரூ. 414 ஆக வளர்ந்திருக்குமே!

நீங்கள் ஒழுங்காகச் சேமிக்க உதவுகிறது இத்திட்டம். அத்துடன் உங்களுக்கு இதில் கூட்டு வட்டியும் கிடைக்கிறது. ஆகவே கொஞ்சம் கொஞ்சமாக நீங்கள் சேமிக்கும் பணம் காலவடைவில் ஒரு பெருந்தொகையாக மாறுவதை நீங்களே காணலாம். மேலும் சேமிக்கும் பழக்கம் ஒரு நல்ல எதிர்காலத்திற்கு அடிகோலுகிறது.

இன்றே சேமிக்கத் தொடங்குங்கள். நாடெங்கும் 3000க்கும் மேற்பட்ட ஸ்டேட் பாங்க் அலுவலகங்கள் உள்ளன. இவற்றில் ஏதேனும் ஒன்றில் கணக்கைத் தொடங்கி, மாதம் ரூ. 5, ரூ. 10, ரூ. 20... இவ்விதமாக ரூ. 1,000 வரை 12, 24, 36, 48 அல்லது 60 மாதங்களுக்கான திட்டத்தில் பணம் சேர்க்கலாம்.

கிடைக்கும் வட்டி விகிதங்களை அட்டவணையில் காண்க. அருகாமையிலுள்ள ஸ்டேட் பாங்க் அலுவலகத்திற்கு இன்றே வருகை தந்து பணத்தைச் சேமிப்பதோடு வருவாயையும் பெருக்குங்கள்!

அதுவே ஸ்டேட் பாங்க் ரெக்கரிங் டெபாசிட் திட்டத்தின் விந்தை!

ரெக்கரிங் டெபாசிட்—முழுமை அடையும்போது கிடைக்கும் மொத்தத் தொகை

மாதத் தவணை ரூ.	12 மாதங்கள் ரூ.	24 மாதங்கள் ரூ.	36 மாதங்கள் ரூ.	48 மாதங்கள் ரூ.	60 மாதங்கள் ரூ.
5	63	130	207	289	378
10	125	261	414	577	757
15	188	391	620	866	1,135
20	250	521	827	1,155	1,513
25	313	652	1,034	1,444	1,891
30	376	782	1,241	1,732	2,270
35	438	912	1,447	2,021	2,648
40	501	1,043	1,654	2,310	3,026
45	564	1,173	1,861	2,599	3,404
50	626	1,304	2,068	2,887	3,783
60	751	1,564	2,481	3,465	4,539
70	877	1,825	2,895	4,042	5,296
80	1,002	2,086	3,308	4,620	6,052
90	1,127	2,346	3,722	5,197	6,809
100	1,252	2,607	4,135	5,775	7,565

ஸ்டேட் பாங்க்

AIYARS-S. 463 REV. TM

ரோமாபுரி பாண்டியன்



முரசொலியில் ஆரம்பமாகி முத்தாரத்தில் தொடர்ந்து குமுதத்தில் முடிந்த முதல்வரின் சரித்திர நாவலுக்குக் கல்கியில் விமரிசனம்!

இந்தக் கதை கிறிஸ்து சகாப்தத்துக்கு முந்தைய காலத்தைச் சூழ்நிலையாகக் கொண்டு பின்னப்பட்டது. அந்தக் காலத்திலேயே தமிழ் நாட்டுக்கும் ரோமாபுரிக்கும் தொடர்பு இருந்ததற்கான சான்றுகள் உள்ளன. ஆயின் விரிவான சரித்திர ஆதாரங்கள் கிடையாது. இருக்கிற மிகக் குறைந்த ஆதாரங்களைக் கொண்டு திரு மு. கருணாநிதி எழுநூறு பக்கங்களுக்கும் அதிகமான ஒரு சரித்திர நவீனத்தைப் புனைந்திருக்கிறார் என்பதைக் காணும்போது அவரது கதை சொல்லும் ஆற்றலை வியக்கிறோம்!

இந்த ஒரு நவீனத்தைப் படித்து முடிக்கும் போது இரண்டு நவீனங்களைப் படித்து முடித்த உணர்ச்சி ஏற்படுகிறது. கரிகாலனை ஒழித்துக் கட்ட வேண்டும் என்று தீராப் பகைமை வளர்த்துக் கொண்டு, கானகத்தில் மர மாளிகையில் தங்கிச் சூழ்ச்சிகள் பல செய்யும் வேளிர் குடித் தலைவன் இருங்கோவேளின் முடிவு வரை சுமார் நானூறு பக்கங்கள் ஒரு கதையாக அமைகிறது. பிறகு செழியன் பாண்டி நாட்டுக்குத் திரும்பி ரோமாபுரிக்குத் தூதுவனாகச் சென்று வருவது ஒரு கதையாக அமைந்திருக்கிறது.

இருங்கோவேளைக் கடும் விரோதியாகவும்—வில்லனாகவும் — கருதி அவனது சூழ்ச்சிகளை முறியடிக்கப் புலவர் காரிக் கண்ணனார் மகள் முத்துநகை, ஆண் வேடம் தரித்துக் கொண்டு போவதைப் பார்க்கும்போது காரசாரமான திடுக்கிட வைக்கும் சூழ்ச்சி வலைகளும் திட்டங்களும் எதிர்பார்த்து ஏமாற்றம் அடைகிறோம். முத்துநகை மாறுவேடத்தில் வீரபாண்டி என்ற பெயரோடு வரும் இருங்கோவேளிடமே காதல் களியாட்டங்களில் ஈடுபடுவதும், முத்துநகை உண்மையிலேயே ஆண் என்று நம்பும் இருங்கோவேளின் தங்கை தாமரை அவள் மீது காதல் கொள்வதுமாகக் கதை எப்படியோ வளர்கிறது.

இரண்டாவது கதைப் பகுதியில் பாண்டி மன்னன் பெருவழுதி தன் வரலாற்றைக் கூறுமிடத்து, தான் ஒரு கைம்மையுற்ற பெண்ணிடம் கூடா நட்பு கொண்டு பெற்ற பிள்ளையே செழியன் என்று கூறுகிறார். அப்பெண்ணை, மணந்துகொள்வதாக வாக்குறுதி அளித்துக் கடைசியில் கைவிட்டுவிட்டான் பாண்டி மன்னன் பெருவழுதி. இத்தகைய பண்பு பாண்டி மன்னனுக்கு எவ்வகையிலாவது ஏற்றம் அளிக்குமா?

கொற்கையில் ஒரு கடையில் மாகதி மொழியில் பெயர்ப் பலகை இருந்ததாம். உடனே ஒரு கிளர்ச்சி எழுந்ததாம், வேற்று மொழி தமிழ்நாட்டில் புகுத்தப்படுகிறது என்று! தமிழ் நாட்டு மொழிக் கிளர்ச்சியை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கொண்டு போயிருக்கிறார். அதே போல் மாநில சுயாட்சிப் பிரச்னையும் அலசப்படுகிறது. இவையெல்லாம் ஆசிரியர் இவ்விஷயங்களில் தீவிரக் கருத்துக்கொண்டவர் என்ற காரணத்துக்காகப் புகுத்தப் பட்டுள்ளதாகத் தெரிகிறதே யொழிய பிரதான கதைக்குச் சம்பந்தப்படாத விஷயங்களாகவே தோன்றுகின்றன.

புத்த சமணச் சண்டைகளை ஓர் அத்தியாயத்தில் ஆசிரியர் அலசுகிறார். இவ்விரு சமயங்களின் நுட்ப வேறுபாடுகளை எவ்வளவு நன்றாக அறிந்திருக்கிறார் என்பது புலனாகிறது.

அதேபோல் அந்நாளைய ரோமாபுரி வாசிகளின் கேளிக்கையாட்டங்களையும் ஆட்சி முறையையும் லாகவமாக ஆசிரியர் கூறுவதைப் படிக்கும்போது மெய்சிலிர்க்கிறது.

"கடவுளை நாம் நம்புகிறோமா என்பதைவிடக் கடவுள் நம்மை நம்பும் அளவுக்கு நாம் நாணயமானவர்களாக, நச்செண்ணங்கள் இல்லாதவர்களாக, கருணை மிகுந்தவர்களாக, கடமையிலிருந்து வழுவாதவர்களாக நடந்து கொள்கிறோமா என்று சிந்தித்துச் செயலாற்ற வேண்டும்!"

இப்படிப் பல இடங்களில் கருத்துச் செறிவு மிக்க உரையாடல்களைப் பார்க்கலாம்.

ஆனால் கதாபாத்திரங்கள் பெரும்பான்மையோர் வேஷம் கட்டிக் கொண்டு ஆட்டம் போடுவதில் மிகுந்த ருசியுள்ளவர்களாக இருக்கிறார்கள். அத்தனை பேரும் வேஷம் கட்டிக்கொள்வதால்தான் கதை எழுநூறு பக்கங்களுக்கு வர முடிகிறது. எனினும், கதை படிக்கச் சிறிதும் அலுப்புத் தட்டவில்லை.

இதற்கு முக்கிய காரணம் கலைஞரின் அழகும் உணர்ச்சியும் தெளிவும் கொண்ட தேன் தமிழ் நடை. இரண்டாவது சம்பவங்களை அடுக்கடுக்காகப் புனைந்து செல்லும் திறன்.

பாத்திரப் படைப்புகளில் குறைபாடுகள் இருப்பினும் "ரோமாபுரிப் பாண்டியன்" சரித்திர நவீன இலக்கியத்தில் முக்கிய இடம் பெற்றுவிடுகிறது.

—எஸ்.வி.எஸ்.

பிரசுரம்: தமிழ்க் கனி பதிப்பகம், சென்னை. விற்பனை உரிமை: பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை-1. விலை: ரூ. 25.00

பொன்னியின் புதல்வர்

சுந்தா

4. பிறந்தகாலம்

ஆட்டிப் படைத்திடும் காலத்தையே
ஆட்டிப் படைப்பவர் உண்டு!



இந்த வரலாற்றில் ''பொன்னியின் புதல்வர்'' எனப் பெயர் பெற்றுள்ள கிருஷ்ணமூர்த்தி, பொன்னுவின் புதல்வராய்ப் பிறந்தவர். பொன்னு என்பது அவருடைய தந்தை ராமசுவாமி அய்யரின் செல்லப் பெயர். பொன்னு என்று பெரியவர்களும், பொன்னுவையர் என்று சிறியவர்களும் அவரைக் கூப்பிடுவதுண்டு. அவர் பக்கத்து மணல் மேடு கிராமத்தின் கர்ணமாய் இருந்த காரணத்தால் கணக்கையர் என்ற பெயரும் அவருக்கு உண்டு. புத்தமங்கலம் அக்கிரகாரத்தில் அவர் வசித்த சொந்த வீட்டுக்கும் கணக்கையர் வீடு என்றே பெயர்.

தென் வரிசையின் நடு மத்தியில் மற்ற வீடுகளைப் போலவே ஓட்டடுக்கு வீடு அது. முகப்பில் ஒரு பக்கம் பெரிய திண்ணை! இன்னொரு பக்கம் சிறிய திண்ணை. இரண்டுக்கும் ஊடே நடந்து நிலைப்படியைக் கடந்தால் ரேழி. அதற்கு அப்பால் முற்றமும், தாழ்வாரமும், பட்டாசாலையும் அடங்கிய முன் கட்டு. முன்கட்டுக்கும் பின்கட்டுக்கும் இடையே வலப்பக்கத்தில் சமையல் அறை. குளியல் முற்றமும் கொட்டிலும் அடங்கிய பின்கட்டைத் தாண்டிச் சற்றே குனிந்து சென்றால், மாட்டுக் கொட்டில், கிணற்றடி, தோட்டம். பெரும்பாலும் தென்னைகளால் நிறைந்த தோட்டத்தின் வரம்பிலிருந்து பார்த்தால், நெடுகிலும்வயல்கள் வயல்கள், வயல்கள். அருகிலும், தொலைவிலும், மாந்தோப்புக்கள் தென்னந் தோப்புக்கள், பனங் கூடல்கள், மூங்கில் புதர்கள்.

பொன்னுவையர் என்ற ராமசாமி அய்யரின் தந்தையின் பெயர் வேதப்ப அய்யர். நிலச்சுவான்தாராக மட்டுமே யிருந்த அவர் வழியே, பத்து ஏக்கரா நன்செய், புன்செய் நிலங்கள் பொன்னுவையருக்குக் கிடைத்தன. அந்த நிலங்களின் விளைச்சலையும், கர்ணம் உத்தியோகத்தில் கிடைத்த பத்து ரூபாய்ச் சம்பளத்தையும் கொண்டு பொன்னுவையர் சிக்கனமாகக் குடித்தனம் நடத்தி வந்தார்.

பெரிய திண்ணையிலோ, முன் தாழ்வாரத்திலோ ராமசாமி அய்யர் பழுப்புத் தாள்களைப் பரப்பிக் கொண்டு, கணக்கு வேலைகளைப் பார்ப்பார்; வெட்டியானுடன் வயல்காடுகளுக்குச் சென்று வரப்புக்களை அளப்பார். மணல் மேட்டில் கிராமமுனிசிப்பின் சாவடிக்குப் போய் வருவார். மற்ற நேரங்களில் எல்லாம் அவர் ஆசார சீலத்துடன் நித்





திய கர்மானுஷ்டானங்களிலும் பூஜையிலும் ஈடுபட்டிருப்பார்.

ரேழிச் சுவரில் அமைந்த ஒரு பெரிய பிறையே அவருடைய இல்லத்து ஆலயம். படங்களும் விக்கிரகங்களும் நிறைந்த அந்தப்பிறையின் முன்னிலையில் அவர் அமர்ந்து நெடுநேரம் பூஜையும் பஜனையும் செய்வார். இரவு நேரங்களில் பெரிய திண்ணையில் உட்கார்ந்து, ராமாயணம், பாரதம், பாகவதம், பக்த விஜயம் முதலிய நூல்களை வாசித்து இடையிடையே விளக்கம் கூறுவார். அவர் வீட்டுத் திண்ணைகளிலும், எதிர் வரிசைத் திண்ணைகளிலும் கிராம மக்கள் குழுமியிருந்து, அவருடைய இனிய சாரீரத்தில் இசையுடன் குழைந்து வரும் புண்ணிய கதைகளைக் கேட்பார்கள். கர்ணம் வேலையினால் அவருக்கு இருந்த செல்வாக்குடன், பக்திமான், பாகவதர் என்ற மரியாதையும் சேர்ந்து கொண்டது.



அந்தக் காலத்து வழக்கப்படி மிகச் சிறிய வயதிலேயே அல்லாமல், இருபதாவது வயதிலேதான் ராமசாமி அய்யருக்குக் கல்யாணம் ஆயிற்று. வீட்டுக்கு வந்த மனையாள் அவருடைய சாந்த குணத்துக்கும் ஆசார ஒழுக்கத்துக்கும் ஏற்றவளாக இருந்தாள். ஆனால் அவர்கள் நெடுநாட்கள் சேர்ந்து வாழக் கொடுத்து வைக்கவில்லை. அவள் ஒரு பெண் குழந்தையைப் பெற்றுவிட்டு, பேறு காலத்தில் நேர்ந்த நோயினால் இறந்து போனாள். இளம் வயதில், அப்படிப்பட்டதொரு சந்தர்ப்பத்தில் பொன்னுவையருக்கு உண்டான துக்கம் அவரை மிகவும் வாட்டி வதைத்தது.

ஏற்கெனவே வேதப்ப அய்யரின் புத்திரருக்கு ஏற்ப வேதாந்த விசாரத்தில் ஈடுபட்டிருந்த அவர், துக்கத்தை மறப்பதற்காக, முன்னிலும் அதிகமாய்க் கடவுள் வழிபாட்டில் லயிக்கலானார்.


பிறந்த குழந்தைக்கு, தம் தாயாரின் பெயரான மங்களம் என்பதைச் சூட்டினார் பொன்னுவையர். அந்தக் குழந்தையைப் பாதுகாத்து வளர்ப்பதற்காக, உறவினர்களின் வற்புறுத்தலால் சிறிதுகாலத்துக்குப் பிறகு இரண்டாம்தாரம் கொண்டார். கொண்ட தாரத்துக்கு அவருடைய குல தெய்வத்து அம்மனின் பெயரே வாய்த்திருந்தது. மூத்தாளைப் போலவே நற்குணவதியாய் இருந்த தையல்நாயகி, அவளுடைய மகளைத் தன் மகள்போலவே வளர்த்து வந்தாள்.

மங்களத்துக்கு ஏழு வயதாகியிருந்த போது தையல்நாயகிக்கு முதல் பிள்ளை வேங்கடராமன் பிறந்தான். அதற்கு மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, இந்த வரலாற்றின் நாயகன்கிருஷ்ணமூர்த்தி விகாரி ஆண்டு, ஆவணி 25-ஆம் தேதி, சனிக்கிழமை ஸ்வாதி நட்சத்திரத்தில் பிறந்தான் — கிறிஸ்து சகாப்தப்படி, 1899, செப்டம்பர் ஒன்பதாம்தேதி.

கிருஷ்ணமூர்த்திக்குப் பிறகு அடுத்தடுத்து இரண்டு தங்கைகள், அப்புறம் ஒரு தம்பி, கடைக்குட்டி ஜகதீசன்.







★ பிறந்த வீடும் அதிலே பூஜையும் பிறையும். இ[illegible] தம்பி ஜகதீசன்; வலதுபுறம் அண்ணா வேங்கட[illegible]

★ கிருஷ்ணமூர்த்தியின் பிறப்பு வளர்ப்பு [illegible] அத்தியாயத்தில் மூன்று பெரியோர்களின் [illegible] குறிப்பிட வேண்டியதாகும்.

★ பாரதியார் பிறந்த வீட்டை அடைந்தோம்... இந்த [illegible] பாரதியார் பிறந்தார் என்று சொன்னார்கள்.

★ உரக்குரைவான அவன் உள்ளி உள்ளிம் [illegible] முலவ்வதுகன்றி அகன்றியர் என்று செல்வமாக் [illegible]

★ ....சுடர் விளக்கைக் கிருஷ்ணமூர்த்தி [illegible] செல்வான்....

அம்மாவின் மடியிலும், அக்காளின் இடுப்பிலும் அண்ணனின் பாதுகாப்பிலும் வளர்ந்தான் கிருஷ்ணமூர்த்தி. அப்பாவுக்கு, அவருடைய அனுஷ்டானங்களுக்கும் அலுவல்களுக்கும் இடையே, அவனைக் கொஞ்சிக் கொண்டாட நேரம் இராது. ஆனாலும் அவர், ''இத்தனூண்டுப் பயலாய்'' அவன் குறுக்கும் நெடுக்கும் குடுகுடுவென்று ஓடுவதைக் கண்டு மகிழ்வார். வெகு சீக்கிரமே அவன் பேசப் பழகி, மழலையில் பொழிந்து தள்ளுவதைக் கேட்டு வியப்பார்.

வேங்கடராமன் ஐந்து அல்லது ஆறு வயதுச் சிறுவனாய் இருந்தபோது, தம்முடன் சேர்ந்து பஜனை செய்யப் பழகுவதற்காக, அஷ்டபதி, கிருஷ்ண லீலா தரங்கிணி முதலியவற்றை ராமசாமி அய்யர் அவனுக்குச் சொல்லிக் கொடுத்தார். அப்போது கிருஷ்ணமூர்த்தி தானாகவே அண்ணனுடன் உட்கார்ந்து, அவனுக்கு முன்னால் அவற்றை மனப்பாடம் செய்து ஒப்பித்து எல்லாரையும் வியக்க வைத்தான். அவனுக்கு முறைப்படி அட்சராப்பியாசம் செய்து, அரிச்சுவடியும் கணக்கும் சொல்லிக் கொடுத்த சுவாமிநாத அய்யர் என்பவரும், அவன் எதையும் நொடிப் பொழுதில் கற்றுக் கொண்டதைக் கண்டு ஆச்சரியப்பட்டு, தம் வியப்பை அவனுடைய பெற்றோரிடமும் மற்றவர்களிடமும் அடிக்கடி தெரிவிப்பார்.

வாத்தியார் சுவாமிநாத அய்யர் முதலில் மணல்மேட்டில், சாவடிக் குளத்துக்கு அருகேயிருந்த சவுக்கண்டியில் பள்ளிக்கூடம் நடத்தினார். அண்ணனும் தம்பியும் அங்கே போய்ப் படித்துவிட்டு வந்தார்கள். ஒருநாள் அவர்களுக்கு நேர்ந்த ஒரு விபத்து காரணமாக, அவர்களுடைய தந்தை, புத்தமங்கலத்திலேயே பள்ளிக்கூடத்தை நடத்தும்படி சுவாமிநாத அய்யரைக் கேட்டுக்கொண்டார். அப்படியே சிறிது காலம் அவர் வீட்டுக்கு எதிர் வீட்டுத் திண்ணையில் பள்ளிக்கூடம் நடந்தது. பின்னர் அந்தக் கிராமத்துக்குப் புதிதாய்க் குடிவந்து, கணக்கையர் வீட்டுக்குப் பக்கத்து வீட்டில் வசிக்கத் தொடங்கிய அய்யாசாமி அய்யர் என்பவர், அந்தப் பள்ளிக்கூடத்தை ஏற்று நடத்தினார். அதே பள்ளிக்கூடம், மீண்டும் மணல்மேட்டுக்காரர்கள் கேட்டுக் கொண்டதன் பேரில், அந்தக் கிராமத்துக்குப் பெயர்ந்து, பாண்டுரங்கன் பள்ளிக்கூடம் என்ற பெயரில் இயங்கலாயிற்று.

அய்யாசாமி அய்யரும் கிருஷ்ணமூர்த்தியின் கற்கும் ஆற்றலையும், ஞாபகசக்தியையும் வயதுக்கு மிஞ்சிய அறிவையும் கண்டு பாராட்டி, அவை மேலும் பெருக உதவி செய்தார்.

கிருஷ்ணமூர்த்திக்கு எட்டு வயதாகியிருந்தபோது, அவனுக்கும் அண்ணனுக்கும் பொன்னுவையர் பிரம்மஉபதேசம் செய்தார். நாலு நாட்களிலேயே, சந்தியா வந்தனம், மாத்தியானிக மந்திரங்கள் எல்லாம் அவனுக்கு மனப்பாடம் ஆகிவிட்டன. அண்ணனும் எல்லாவற்றையும் விரைவிலேயே கற்றுக் கொண்டான். ஆனாலும், தன்னைவிடத் தம்பிக்கு அறிவு அதிகம் என்பதை அவன் ஒப்புக் கொண்டு அவனைப் பாராட்டிப் பெருமை அடைந்தான்.

தம்முடன் கூட, தம் குமாரர்கள் சிரத்தையுடன் சந்தியாவந்தனமும் பஜனையும் செய்வதைக் கண்டு பொன்னுவையர் மகிழ்ச்சி அடைந்தார். அவர்களைச் சமய சிரோமணிகளாய் ஆக்க வேண்டும் என்ற ஆசையில், யஜுர் வேதத்தின் மத்திய பாகமாய் உள்ளதும், பரமேசுவரனுடைய மகிமையை ஓதுவதுமான ருத்ர ஜபத்தை ஒரு சாஸ்திரிகள் மூலம் கற்பித்தார். அந்த ஜபத்தைச் சுமார் முப்பது பாடங்களிலேயே கிருஷ்ணமூர்த்தி கற்றுக்கொண்டான். அவன் அதைக் கோயிலில் சுவாமிக்கு அபிஷேகம் நடக்கும்போது சிரத்தையுடன் சொல்வதுண்டாம்.

தகப்பனார் திண்ணையிலிருந்து புராணக் கதைகள் சொல்லும்போது, சிறுவன் கிருஷ்ணமூர்த்தி சில சந்தேகங்களை எழுப்பிக் கேள்வி கேட்பான். சின்னப் பையனின் அதிகப்பிரசங்கித்தனம் என்று அதைப் பொன்னுவையர் கருதாமல், தக்கபடி பதில் கூறுவார். அவ்வளவு புத்திசாலித்தனமாய்க் கேள்வி கேட்கத் தோன்றியதை மெச்சுவார்.

பண்டிகை நாட்களில் பஜனையின் கடைசியில் திவ்யநாம சங்கீர்த்தனம் முடிந்ததும், சுடர் விளக்கைக் கிருஷ்ணமூர்த்தி கையிலேந்தி நர்த்தனம் செய்வான். சதங்கை கிலுகிலுக்க அவன் ஆடும் அழகை, உற்றார் ஊரார் மெச்சக் கண்டு, தந்தையும் அவனை மெச்சி வாழ்த்துவார்.

அப்போதெல்லாம் பொன்னுவையர் என்ன நினைத்திருப்பார்? பையன் கெட்டிக்காரன் என்பதை விட, பக்தி சிரத்தை உள்ளவன் என்பதையே மேலாக நினைத்திருப்பார். தம்மைப் போலவே அவனும் மூன்று காலம் அனுஷ்டானங்கள் செய்து கொண்டு ஓர் ஆசாரப் பிராமணனாய் இருப்பான் என்றுதான் நினைத்திருப்பார். இன்னும் சில ஆண்டுகளில் அவன் தெய்வபக்தியைத் தேசபக்தியாய் மாற்றிக் கொள்வான் என்பதையோ, அந்தப் புதிய


அசலான ஸிங்கர்*

ஊசிகளில் மட்டுமே

ஸிங்கரின்

பெயர் உள்ளது.

ஸிங்கர்* பெயர் உள்ளதா என்று பார்த்தே ஊசிகளை வாங்குங்கள். அவைதாம் அசலானவை. தவிரவும், 50 லட்சம் தையல்களுக்கும் அதிகமாக சிறப்பாக தைக்கின்றன. ஸிங்கர்* ஊசியின் முனை 'மைக்ரோஃபினிஷ்' செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஊசியும் அமைப்பில் ஒரு சீராக, தரமுயர்ந்தது. தொல்லையற்றது. நம்பகத்துடன் உழைக்கிறது. வெவ்வேறு வகையான தையல்கள் மற்றும் சித்திரத் தையல்களுக்காக பல்வேறு நம்பருள்ள ஊசிகள் கிடைக்கின்றன. அவற்றை எந்த மெஷினிலும் எளிதில் பொருத்தலாம்.



இந்தியாவெங்கும் கிடைக்கிறது.

SINGER® SEWING MACHINES

ஸிங்கர் அளிப்பவை சிறந்த பொருட்களே

தயாரிப்பாளர்கள்:

ஸிங்கர்-டிவிஎஸ் லிமிடெட், மதுரை

வர்த்தக விவரங்களுக்கு தொடர்பு கொள்க:

ஸிங்கர் ஸ-ஊயிங் மெஷின் கம்பெனி,

207, டி. என். ரோடு, பம்பாய்-400 001

*ஸிங்கர் கம்பெனியின் டிரேடு மார்க்



நேற்றுவரை குழந்தைகளுக்குக் கிடைக்காதது
இன்று உங்கள் குழந்தைக்கு—
புதிய
டெண்டெர் கேர்
பேபி பவுடர் மென்மையான சருமத்திற்கென சரியாக பஃப்பர் செய்யப்பட்டது
உங்கள் குழந்தைக்கு அன்பும், ஆதரவும்—டெண்டெர் கேர்!
NEW
COLGATE
tender care
BABY POWDER
For comfort & protection
MADE IN INDIA
மென்மையான சருமத்திற்கென சரியாக பஃப்பர் செய்யப்பட்டது. உங்கள் அன்பும், ஆதரவும்தான் உங்கள் குழந்தைக்குக் கிட்டும் பெரும் பேறு. எதிலுமே மிகச் சிறந்தவற்றைத்தானே உங்கள் குழந்தைக்குத்தருகிறீர்கள்.
இதோ, உங்கள் அன்புக்கு ஒரு புதிய சின்னம்—டெண்டெர் கேர். புதிய பேபி பவுடர் இன்றைய விஞ்ஞான வளர்ச்சி தரும் பரிசு. நேற்று வரை வந்த பஃப்பர் செய்யப்படாத பவுடர்கள் குழந்தையின் மேனியைப் புண்படுத்தக் கூடும். ஆனால் புதிய டெண்டெர் கேர் சரியாக பஃப்பர் செய்யப் பட்டது. குழந்தையின் சருமம் சிவந்து போய் சில நேரங்களில் லேசாக புண்படுவது கூட உண்டல்லவா? இதெல்லாம் நேராமல் உங்கள் குழந்தையை டெண்டெர் கேர் பாதுகாக்கிறது. அதன் நீரேற்ற வியர்வை உறிஞ்சும் சக்தி உங்கள் குழந்தையை எப்போதும் வசதியாக, மகிழ்ச்சியுடன் இருக்கச் செய்கிறது.
பட்டுப் போன்ற டால்க், மிதமான நறு மணம்—எல்லாமே அதில் கவனமாக சேர்க்கப் பட்டுள்ளன. உங்கள் குழந்தைக்காக. அதை 'டெண்டெர் கேர்' என்று அழைப்பதே அதனால்தானே.
CTC.G.I.TM

பக்தியினால் சிறைவாசம் செய்வான் என்பதையோ, பிராமண ஆசாரங்களைவிடுத்துத் தீண்டத் தகாதவரைத் தீண்டி, அவர்களுடன் சமபந்தி போஜனம் செய்வான் என்பதையோ, அவர்களுடைய ஆலயப் பிரவேசத்துக்காகப் பிரசாரம் செய்வான் என்பதையோ அவர் நினைத்திருக்க முடியாது. ஒரு பத்திரிகையாளனும், இலக்கியப் படைப்பாளனும்ப் புகழ் சூடப் போகிறான் என்பதையும் அவர் எதிர்பார்த்திருக்க முடியாது.

பையனின் அனாசாரச் செயல்களால் உண்டாகும் வேதனையையோ, இலக்கியப் புகழால் உண்டாகும் ஆனந்தத்தையோ சிறிதும் எதிர்பார்க்க முடியாத போதே, பூணூல் வைபவம் நடந்த ஆறும் மாதமே, பொன்னுவையர் காலமானார்.

அவருடைய பிரிவும் அழுகையும் புலம்பலும், குடும்பச் சங்கடங்களும், அண்ணனையும் தம்பியையும் பெரும் துன்பத்துக்கு உள்ளாக்கின; அதே சமயம் அவர்களை அவை முன்னிலும் அதிகமாய்ப் பிணைத்தும் வைத்தன.

தாயாரைத் தேற்றவும், குடும்பப் பொறுப்பை ஏற்று நடத்தவும், அவருடைய சகோதரர்கள் வந்தார்கள்.

தந்தையை இழந்து தவித்த அண்ணனையும் தம்பியையும், பக்கத்து வீட்டு அய்யாசாமி அய்யரும் அவருடைய பத்தினி அபயாம்பாளும் தேற்றி, அவர்களுடைய துக்கத்தைக் குறைத்தார்கள். குழந்தைப் பேறில்லாத அவர்கள், வேங்கடராமனையும், கிருஷ்ணமூர்த்தியையும் சொந்தப் பிள்ளைகள் போல் பாவித்துக் கொண்டாடினார்கள். ''ஒரு பிள்ளைகூட இல்லையே என்று ஏங்கிக் கொண்டிருந்தோம்; ஒன்றுக்கு இரண்டாக, ராம லக்ஷ்மணர்கள்போல் கிடைத்தீர்கள்'' என்று அவர்கள் சொல்வார்களாம்.

கிருஷ்ணமூர்த்தியின் வீட்டுக்கு இடது பக்கத்தில் அவர்களுடைய வீடு இருந்தது. ரயில்வே ஸ்டேஷன் மாஸ்டராய் இருந்து, உரிய காலத்துக்கு முன்பே ஓய்வுபெற்ற அய்யாசாமி அய்யருக்கு, ராமசுவாமி அய்யர்தான் அந்த வீட்டை வாங்கிக் கொடுத்திருந்தார். அதோடு, பலரிடம் சிபாரிசு செய்யச் சொல்லி, மணல்மேட்டுக் கிராமத் தபால் நிலையத்தின் பொறுப்பும் அவருக்குக் கிடைக்கும்படி செய்திருந்தார். தபால் வேலைகள் போகப் பாக்கி நேரத்தில் பள்ளிக்கூடம் நடத்தும் ஏற்பாட்டையும், அதற்கான வசதிகளையும் அவரே செய்து கொடுத்திருந்தார்.

இரண்டு வீடுகளுக்கும் ஊடேயுள்ள சுவரில், கம்பி இல்லாச் சாளரம் — சாரைப் பிறை — ஒன்று உண்டு. அதன் வழியே ஒரு வீட்டுக்காரர்கள் பக்கத்து வீட்டுக்காரர்களுடன் பேசிக் கொள்ளலாம்; சிறு சிறு சாமான்களைக் கொடுத்து வாங்கலாம். அந்தப் பிறையின் வழியே அய்யாசாமி அய்யரோ அவருடைய மனைவியோ கிருஷ்ணமூர்த்தியை அடிக்கடி கூப்பிட்டுக் கொண்டே யிருப்பார்கள். தம் வீட்டில் பண்ணும் தின்பண்டங்களை அவனைக் கூப்பிட்டுக் கொடுப்பார்கள். பூஜை செய்ததும் நைவேதனம் கொடுப்பார்கள். அவர்கள் பூஜித்தது பகவான் கிருஷ்ணமூர்த்தி; அவருடைய நைவேதனத்தைச் சிறுவன் கிருஷ்ணமூர்த்தி புசிப்பதை ஆசையுடன் பார்த்து மகிழ்வார்கள். அய்யாசாமி அய்யர் தாம் வணங்கிய கண்ணனுக்கு ராஜப்பா என்று பெயர் வைத்திருந்தார். அந்தப் பெயர் சொல்லியே சில வேளைகளில் அவர் பக்கத்து வீட்டுப் பையனைக் கூப்பிடுவதுண்டு. உயரக் குறைவான அவன் உன்னி உன்னிப் பிறை வழியாய்ப் பார்க்க முயல்வதைக் கண்டு, ''அகஸ்தியர்'' என்றும் அவனைச் செல்லமாய்க் குறிப்பிடுவதுண்டு.

இரண்டு வீடுகளிலும் இப்படிச் செல்லப் பிள்ளையாய் இருந்த கிருஷ்ணமூர்த்தியின் பிறப்பு வளர்ப்பு பற்றிய இந்த அத்தியாயத்தில், மூன்று பெரியோர்களின் பிறப்பைப் பற்றியும் குறிப்பிட வேண்டியதாகும். அந்த மூவரும், கிருஷ்ணமூர்த்திக்கு முன்னே, வெவ்வேறு காலங்களில், வெவ்வேறு ஊர்களில் பிறந்தவர்கள்.

அந்த மூவரில் முதலாவதாகக் கல்கியை ஆளாக்கியவர், அவருக்குப் பதினேழு ஆண்டுகளுக்கு முன்னால், எட்டயபுரத்தில் பிறந்தவர். அவருடைய பிறப்பைப் பற்றியும், மற்ற இருவரின் பிறப்பைப் பற்றியும் கல்கியே சொல்லட்டும்:

எட்டயபுரம் வீதிகளில் நடந்து போகையிலேயே எனக்கு என்னவோ செய்தது. ''இந்த வீதிகளின் வழியாகப் பாரதியார் எத்தனையோ நாள் நடந்து போயிருப்பார் அல்லவா? இந்தத் தெருப் புழுதி யெல்லாம் அவர் மேலும் பட்டிருக்கும் அல்லவா?'' என்று நினைத்தபோது, பாரதியாரோடு புதிய உறவு ஏற்பட்டு விட்டதாக எனக்குத் தோன்றியது....

சந்து பொந்துகளின் வழியாகச் சென்று கடைசியில் பாரதியார் பிறந்த வீட்டை அடைந்தோம். வீட்டு வாசலில் ஒன்றுக்குமேல் ஒன்று உயரமான இரண்டு விசாலமான திண்ணைகள் இருக்கின்றன. மேல் திண்ணையின் ஓரத்துச் சுவரில், ஒரு குறுகலான வாசற்படி காண்கிறது. அதற்குள்ளே இருந்த அறையில்தான் பாரதியார் பிறந்தார் என்று சொன்னார்கள். ஆகா! பிறந்த குழந்தை

''குவா குவா'' என்று அழுதபோது, அந்தக் ''குவா'' சத்தத்தில் தேச வெறியும், தமிழ்ப் பண்பும் பொங்கித் ததும்பும் அழகிய தமிழ்ப் பாடல்கள் எல்லாம் அடங்கியிருக்கின்றனவென்று யாருக்குத் தெரிந்திருக்கப் போகிறது?

(கல்கி இதழ் 8-10-1944)

பாரதியாரை நான் கண்ணால் பார்த்ததில்லை. ஆனால் அவரையே எனது பரம குருநாதராகக் கொண்டிருக்கிறேன். எனக்குத் தேசபக்தி ஊட்டியவர் பாரதியார். தாய்மொழிப் பற்றை அருளியவர் பாரதியார். கவிதை இன்பம் துய்க்கும் ஆற்றலை அளித்தவர் பாரதியார். ரஸிகர்களின் நட்பாகிய பெரும் பாக்கியத்தைத் தந்தவர் பாரதியார்.

(சுதந்திரச் சங்கு 9-9-1931)

பாரதியார் ஊட்டிய தேசபக்தியினால் எந்த மகானைக் கல்கி தெய்வமெனக் கொண்டாடினாரோ, அவருடைய பிறப்பைப் பற்றி, கற்பனைத் தம்பிக்குச் சொல்லுகிற பாவனையில்:

1869 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 2ம் தேதி உன் நினைவில் என்றென்றைக்கும் இருக்க வேண்டும். அந்தத் தேதியிலேதான் மாந்தருக்குள் தெய்வமான மகாத்மா காந்தி அவதரித்தார்.

தம்பி! நான் சொல்வதைத் தவறாக எண்ணிக்கொள்ளாதே! பிறக்கும்போதே காந்திஜி மகாத்மாவாகப் பிறந்துவிடவில்லை. உன்னையும் என்னையும் நாட்டிலுள்ள எல்லோரையும் போல், அவரும் பிறக்கும்போது சாதாரணக் குழந்தையாகத்தான் பிறந்தார். அப்படிப் பிறந்த குழந்தை மாநிலத்துக்கு ஒரு தலைவராகவும் மனித குலத்துக்கு ஒரு வழிகாட்டியாகவும் பிற்காலத்தில் ஆகப்போகிறது என்று அப்போது யாரும் எண்ணவில்லை; குழந்தையின் பெற்றோரும் அவ்விதம் நினைக்கவில்லை.

இந்தியாவின் படத்தைப் பார்! குஜராத் எனப்படும் கூர்ஜரத்துக்கு மேலே கத்தியவார் என்று இருக்கிறதல்லவா? இந்தப் பிரதேசத்திலேதான் முன்னொரு சமயம் ஸ்ரீ கிருஷ்ண பகவான் வட மதுரை நகரை விட்டு வந்து துவாரகை என்னும் புதிய தலைநகரை அமைத்துக்கொண்டார். எதற்காகத் தெரியுமா? ஸ்ரீ கிருஷ்ணன் மதுரையின் மன்னராயிருந்த போது ஓயாமல் பொல்லாத பகைவர்களுடன் யுத்தம் செய்ய வேண்டியிருந்தது. ஸ்ரீ கிருஷ்ண பகவானுக்கு யுத்தம் போதும், போதும் என்று ஆகி விட்டது. ''யுத்தமும் வேண்டாம்; மதுரை ராஜ்யமும் வேண்டாம்'' என்று சொல்லி விட்டு ஸ்ரீ கிருஷ்ண பகவான் உற்றார், உறவினர் நண்பர்கள், பிரஜைகள், சேனாவீரர்கள் எல்லோரையும் அழைத்துக் கொண்டு கத்தியவாருக்கு வந்து விட்டார்...

கத்தியவார் கடற்கரையில் ஸ்ரீ கிருஷ்ண பகவான் துவாரகை நகரைக் கட்டிக்கொண்டார். இதனால்தான் துவாரகாபுரி ஆலயத்திலுள்ள கண்ண பெருமானுக்கு 'ரணசோட் நாதர்' என்ற திருநாமம் வழங்கி வருகிறது. (ரண — யுத்தம்; சோட் — விட்ட; நாதர்— பெருமான்.) பல்லாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு அதே கத்தியவார் பிரதேசத்திலே தான், ''யுத்தம் வேண்டாம்!'' என்று உபதேசித்த காந்தி மகானும் பிறந்தார். அவர் பிறந்த ஊருக்குப் போர்பந்தர் என்று பெயர்.

(மாந்தருக்குள் ஒரு தெய்வம்-பாகம் 1 அத்தியாயம் 1)

காந்தி மகாத்மாவுக்கு அடுத்தபடியாக, சில சமயங்களில் அவருக்கு இணையாக, வேறு சில சமயங்களில் அவரைவிட அதிகமாக, தமது அறிவுடனும் உணர்ச்சியுடனும் கலந்தவராய், ஒருவரைப் போற்றினார் கல்கி. தமக்கு இருபது ஆண்டுகளுக்கு முன்னால் நிகழ்ந்த அவருடைய பிறப்பைப் பற்றி;

இமயத்தையும் இலங்கையையும் எல்லையாகக் கொண்ட பாரத தேசத்தில் ஏழு லட்சம் கிராமங்கள் இருக்கின்றன. இந்த ஏழு லட்சம் கிராமங்களில் ஒரு கிராமம் எத்தனையோ காலமாகத் தவம் செய்து வந்தது. பாரத நாடு போற்றுவதற்குரிய தலைசிறந்த புதல்வர் ஒருவரைப் பெற்றெடுக்க வேண்டும் என்னும் கோரிக்கையை மனத்தில் கொண்டு தவம் செய்தது...சேலம் ஜில்லாவில் ஒசூர் என்னும் சிறு பட்டணத்துக்கு அருகில் உள்ளது அந்தக் கிராமம்... கிராமத்தின் தவம் ஒரு நாள் நிறைவேறியது. மேற்படி கிராமத்தில், வைஷ்ணவ வைதிக குடும்பத்தில், புனர்வசு நட்சத்திரம் கூடிய சுப தினத்தில் ஒரு குழந்தை பிறந்தது...

''இராஜகோபாலன்'' என்று குழந்தைக்குப் பெயரிட்டார்கள். அத்துடன் குடும்பத்துக்குரிய பரம்பரைப் பட்டப் பெயரும் சேர்ந்து பிற்காலத்தில் ''சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்'' என்று ஆயிற்று.

(நாட்டுக்கு ஒரு புதல்வர்—முதற் பாகத் தொடக்கம்)

தாய், தந்தை, உடன் பிறந்தோர், ஊரார், அய்யாசாமி அய்யர் தம்பதி முதலானோர் கிருஷ்ணமூர்த்தியின் ஆரம்ப வாழ்க்கையைப் பாதித்தார்கள் என்றால், இந்த மூவரும், இளமைப் பருவம் முதல் இறுதி வரை, ஒருவர்பின் ஒருவராய், நேர்முகமாயும் மறைமுகமாயும் பாதித்தார்கள். கல்கியின் வாழ்க்கை எப்படி அமைந்ததோ அப்படி அமைந்ததற்கும், அவருடைய செயல்களும் சாதனைகளும் எவ்விதமாய் இருந்தனவோ அவ்விதமாய் இருந்தமைக்கும், இவர்களே பெரிதும் காரணமாவார்கள்.

(தொடரும்

ஆக்ரா நகரின் மீது வெள்ளைத் துணியைப் போர்த்தியதைப் போலப் பனியிலே நிலவொளி உறைந்து கிடந்தது. அதீதமான அமைதி. மக்கள் ஆழ்ந்த உறக்கத்திலிருந்தார்கள் — ஒரே ஒருவரைத் தவிர. அவர் அமைதியாக உறங்கி எட்டு வருடங்களாகின்றன. படுக்கையின் சுகம், தூக்கத்தின் இன்பம் இதற்கெல்லாம் இலக்கணம் வகுக்கும் வகையில் வாழ்க்கையை அணு அணுவாக அனுபவித்தவர்தான் அவர். ஆனால் கடந்த சில ஆண்டுகளாக அவர் முன்பு அனுபவித்த இன்ப வாழ்க்கைக்கு எதிர்மாறான வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு விநாடியும் ஒரு யுகமாகத் தோன்றுகிறது. அங்கம் அங்கமாக அவர் உடலும் உள்ளமும் சித்திரவதைக்குள்ளாகின்றன.

அதோ மறுபடி ஆரம்பமாகிவிட்டது.

தம்...தம்...தும்...தும்...தம்...தம்...

அவர் நெற்றிப் பொட்டு நரம்புகள் புடைத்துத் துடிக்கின்றன. இதயத் துடிப்பு வேகமாகிறது. உடலிலே ஓராயிரம் ஊசிகளைக் குத்துவது போன்ற வேதனை. உடலை முறித்துக் கொண்டு படுக்கையில் உருள வேண்டும் என்ற வெறி, பலங் கொண்ட மட்டும் உரக்க வாய்விட்டு 'ஹோ' என்று கத்தி ஓலமிட வேண்டும் போல ஒரு தவிப்பு. ஆனால் அந்த வகை எண்ணங்களையெல்லாம் செயலாக்க உடலில் தெம்பில்லை. நரக வேதனை என்கிறார்களே, அது இப்படித்தான் இருக்குமோ?

மன்னிப்பு

கௌசிகன்



துவண்ட உடல், தொய்ந்த உள்ளம். எரியும் கண்கள் மூட மறுக்கின்றன. மூளை வெடித்துச் சிதறிவிடுவது போலத் தாங்க முடியாத வலி, தவிப்பு. 'தாங்க முடியாமலா இத்தனை அவஸ்தைகளையும் இந்த உடல் தாங்கிக் கொண்டிருக்கிறது? அவஸ்தைகளை, வேதனைகளை, துன்பத்தை உடல் தாங்கிக் கொள்ளுவதற்கான தெம்பூட்டும் மருந்துகளுடன் காலையில் வந்துவிடுவான் அந்தப் பாவி ஹகீம். வைத்தியனா அவன்? கொலைகாரன்! என்னிடம் எத்தனை சலுகைகளைப் பெற்றிருக்கிறான்? எப்படியெல்லாம் அவனுக்கு வெகுமதிகளை வாரி வழங்கியிருக்கிறேன்? அதையெல்லாம் மறந்து விட்டுக் கொடியவனான 'என் மகனுக்கு உடந்தையாக... இந்தச் சித்திரவதைகளினால் என் சித்தம் கலங்காதிருக்கவும் உயிர் பிரியாதிருக்கவும் வைத்தியம் செய்ய வருகிறான்....'

காதைத் துளைத்து, சிந்தனையைத் திருடி, அமைதியையும் உறக்கத்தையும் குலைத்துக் குதறியெடுக்கும் அதே ஒலி... தம்...தம்..

அழ வேண்டும் போலிருந்தது. ஆனால் அழ முடியவில்லை. அழும் வயதுமில்லை அவ

ருக்கு. ஆயாசம் தாங்காமல் திரும்பிப் படுத்தார். விரட்டி வரும் அந்த ஒலியைக் கேட்கக் கூடாதென்று தலையணையை இழுத்து மடக்கிக் காதுகளை மூடிக் கொண்டார். அப்போது அதன் ஒலி அதிகமாகியது. அது பிரமைதான். ஆனாலும் தாங்க முடியாமல் ஈனசுரத்தில் அரற்றினார்.

மிக உயர்ந்த கட்டிலின், உன்னதமான படுக்கையில் பள்ளியறையிலே பன்னீரும், அத்தரும் அகிற்புகையும் கமகமக்க ஒய்யாரமாக உல்லாசமாகப் படுத்துக் களித்தவர் தான் அவர். மொகலாய சாம்ராஜ்யத்தின் பொற்காலத்துக்கு உரியவர் பின் எப்படி வாழ்ந்திருப்பார்? புகழ்பெற்ற மயிலாசனத்தை உருவாக்கி அதில் அமர்ந்து இந்துஸ்தானத்தை ஆண்டவர் எத்தனை மகிமையோடு இருந்திருப்பார்? இன்றோ, ஆண்டிப் பரதேசியைப் போல அரண்மனையிலே அடைத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதியாகக் கிடக்கிறார். தம் சொந்த மகனாலேயே இப்படிச் சிறை வைக்கப்பட்டுச் சிறுமையுற்றிருப்பவர் ஷாஹன்ஷா ஷாஜஹான்தான்.

சாம்ராஜ்யாதிபதியாக வேண்டும் என்ற தன் ஆசைக்குத் தடையாக இருந்த உடன் பிறந்த சகோதரர்களையெல்லாம் கொன்றுதன் குறிக்கோளை அடைந்தவன் ஔரங்கஸேப். அரசுரிமைப் போரிலே மூத்த மகன் தாராவுக்காகப் போராடியதற்காக மட்டும் ஷாஜஹானைச் சிறை வைக்கவில்லை ஔரங்கசீப். தன் முன்னேற்றப் பாதையிலே முட்டுக்கல்லாக இருந்து தொல்லை தரக் கூடாது என்பதற்காகவுமே அவரை அரண்மனைக்குள்ளேயே சிறைப் பறவையாக்கி வைத்தான். அந்த நிலையிலும் தந்தை நிம்மதியாக வாழ்ந்துவிடக் கூடாதென்று சித்திரவதை போன்ற பலவிதமான தொல்லைகளுக்கு உள்ளாக்கினான். சகோதரர்களைப் போலத் தந்தையைக் கொல்ல விரும்பவில்லை ஔரங்கஸேப். அந்தச் செயல் மக்களுக்குத் தன் மீது வெறுப்பை வளர்க்கும் என்பதை அறிந்தவன். ஆகவே தந்தை ஷாஜஹானுக்குக் கொஞ்சம் கொஞ்சமாக விஷம் கொடுத்து அவர் வாழ்நாளைக் குறைக்கும் காரியத்தை ஆஸ்தான ஹக்கிம் ஒருவரிடம் ஒப்படைத்திருந்தான்.

தந்தையின் முனகல் கேட்டுத் தன் படுக்கையிலிருந்து எழுந்து வந்தாள், ஜஹானாரா. தந்தையின் புண்பட்ட மனதுக்கு ஆறுதல் அளிப்பதற்காக, அவர் அருகிலேயே இருப்பதற்காகத் தன்னுடைய சுகங்களையெல்லாம் தியாகம் செய்துவிட்டுத் தன்னைத் தானே அங்கு சிறைப்படுத்திக் கொண்டிருப்பவள் ஜஹானாரா. ஷாஜஹானின் இரு புதல்வி





க்ளுள் மூத்தவள். தந்தையின் அன்புக்குப் பாத்திரமானவள்.

காதுகளை மூடி அழுத்திக் கொண்டிருந்த தலையணைகளை விலக்கி மன்னரின் நெற்றியை இதமாக வருடினாள் ஜஹானாரா. ஷாஜஹான் கண் திறந்தார். இன்று தனக்காகக் கண் கலங்குவது அவள் ஒருத்திதான் என்பதை எண்ணிய போது அவர் கலங்கிய கண்கள் கனத்தன. படுக்கையிலிருந்து நிமிர்ந்து தலையணையில் சாய்ந்தபடி அமர்ந்து கொண்டார். சாளரத்தின் வழியே பார்வையை வெளியே விரட்டினார். இந்த எட்டு வருஷங்களாக அவருக்கு இதம் தரும் ஒரே காட்சி அங்கே, அந்தச் சாளரத்துக்கு அப்பால் தொலைதூரத்தில் இருந்தது. பாலேடாகப் படிந்திருந்த நிலவிலே குளித்தபடி சிரித்துக் கொண்டிருந்தது; அவர் பார்த்துப் பார்த்து நிர்மாணித்த பளிங்கு மாளிகை தாஜ்மஹால்.

'தம் தம்' என்ற சத்தம் கட்டடத்தின் அடியில் உள்ள பாதாள அறையிலிருந்து மூர்க்கமாக முன்னைவிட வேகத்துடன் தொடர்ந்தது. மும்தாஜின் நினைவிலே மூழ்கியிருந்த ஷாஜஹானை இப்போது அந்த நாராச ஒலி பாதிக்கவில்லை.

ஆலம்பனா ஔரங்கசீப் அவளைக் காண விரும்புவதாக ஜஹானாராவிடம் வந்து சொன்னாள் பணிப் பெண்.

மொகலாயப் பேரரசின் பேராற்றல் மிக்க ஷாஹன்ஷா ஔரங்கசீப் அமர்ந்திருந்த அந்த அறைக்குள் அத்தர் மணம் சூழ்ந்தது. அதை அடுத்து ஜஹானாராவும் வந்தாள்.

"சகோதரி உன் தகப்பனார் தூங்கினாரா? அவர் உடல் நலம் எப்படி இருக்கிறது?" என்று கேட்டான் ஔரங்கசீப்.

ஜஹானாரா சில விநாடிகள் மௌனமாக இருந்தாள். அவன் எதற்காக வந்திருக்கிறான் என்று அவளுக்குத் தெரியும். அவனுடைய இந்தக் கேள்வி அர்த்தமற்றது என்பதையும் அவள் அறிவாள்.

"தம்பி! தந்தை தூங்கிவிடக் கூடாது என்பதற்காகத்தானே இரவெல்லாம் அப்படி இடியோசையைக் கட்டடத்தில் எழுப்புவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறாய்? அப்பா தூங்கியிருக்க மாட்டார். துடிதுடித்துத் துவண்டு போயிருப்பார் என்று உனக்குத் தெரியாதா?"

"அவர் தூக்கத்துக்குப் பங்கம் விளைவிக்க வேண்டும் என்று எந்த ஏற்பாட்டையும் நான் செய்யவில்லை பதறாதே. அவர் அரண்மனையின் இந்தப் பகுதியில் இருக்கிறார் என்பதற்காக மாமூலான சில அரசாங்க அலுவல்களை நிறுத்த முடியுமா? இந்தக் கட்டடத்தில் ஏதோ பழுதுபார்க்க வேண்டும் என்று கூறினார்கள். அனுமதி அளித்தேன். அதனால் ஏற்பட்ட...."

"ஔரங்கசீப்! அப்பா இந்த சாம்ராஜ்யத்தில் எத்தனையோ உன்னதமான கட்டடங்களை எல்லாம் உருவாக்கியுள்ளார். காலத்தை வென்று நின்று அவை அவர் புகழ் பரப்பப் போகின்றன. அப்படிப்பட்ட கட்டடங்களெல்லாம் பகல் வேளையில்தான் நிர்மாணிக்கப்பட்டன. ஆனால் உன்னுடைய ஆட்சியில் பழுதுபார்க்கப்படுவதுகூட இரவு வேளையில்தான் நடத்தப்படுகிறது. தந்தையிடம் நீ காட்டும் அளவுக்கு மீறிய வெறுப்பையும், அலட்சியத்தையும் அவரை நீ சில வேளைகளில் அவமானப்படுத்துவதையும் என்னால் தாங்க முடியவில்லை.

"அவர் கொஞ்ச நாள் முன்பு உன்னிடம் ஒரு பக்கீரைப் போலத் தம் காலணி தேய்ந்து அறுந்துவிட்டது என்றும், வேறு காலணி அனுப்பி வைக்கும்படியும் கேட்ட போது நீ எத்தனை அகம்பாவமாகப் பதில் கூறினாய்? 'புதிய பாதுகைகள் அனுப்ப முடியாது, அறுந்த அவைகளையும் நீங்களேதான் தைத்துக் கொள்ள வேண்டும். அதற்கான உபகரணங்களை அனுப்பி வைக்கிறேன்' என்றாயே, அதைக் கேட்ட போது என் நெஞ்சம் வெடித்தேவிட்டது தம்பி!"

ஒரு முன்னோடியின் தோற்றம்— பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிட்.

ரூபாய் 10 கோடி அங்கீகரிக்கப்பட்ட மூலதனத்தோடும், ரூபாய் 6.96 கோடி செலுத்தப்பட்ட மூலதனத்தோடும் 1954ல் பெங்களூருக்கருகிலுள்ள ஜாலஹள்ளியில் பி இ எல் நிறுவப்பட்டது. 1956ல் இங்கே இரண்டு வகைக் கருவிகள் தயாரிக்கப்பட்டன— எச் எஃப் மீடியம் பவர் கம்யூனிகேஷன் டிரான்ஸ்மிட்டரும் அதன் துணை ரிசீவரும். மொத்தம் ரூபாய் 5 லட்சம் பெறுமானமான கருவிகள் தயாரிக்கப்பட்டன. அப்போது தொழிலாளர்களின் எண்ணிக்கை 1000.

ஆனால் இன்றோ எலக்ட்ரானிக் சாதனங்கள், உறுப்புகள் தயாரிப்பில் ஒரு பெரும் பங்கை வகிக்கும் அளவில் வளர்ந்திருக்கிறது. பி இ எல் ஆறு தனி தயாரிப்புப் பிரிவுகள் உள்ளன. மொத்தம் 15,000 தொழிலாளர்கள் பணி புரிகின்றனர்.

ராடார் பிரிவு: தயாரிப்புகள்— ஃபயர் கன்ட்ரோல் ராடார்கள், ஃபீல்ட் ஆர்ட்டிலரி ராடார்கள், ஸர்வேலன்ஸ் ராடார்கள், நாவிகேஷனல் ராடார்கள், ஸேர்ச் அன்டு லெவல் கன்ட்ரோல் ராடார்கள், செகண்டரி ஸர்வேலன்ஸ் ராடார்கள், 'எல்', 'எஸ்', மேலும் 'எக்ஸ்' பாண்ட்களில், தரை படை, கப்பற் படை, மற்றும் மெடீரோலாஜிகல் துறைகளுக்கு ஸ்டார்ம் வார்னிங் ராடார்கள், விஜயந்தா டாங்குக்கு கன் கன்ட்ரோல் சாதனங்கள்.

மேலும் இஸிஐஎல் கம்பெனியாருக்கு துணை ஒப்பந்தத்தில் கம்ப்யூட்டர்களும், டிஜிடல் கருவிகளும் தயாரித்தளிக்கின்றனர். டேடா டிஸ்ப்ளே கன்சோல்களும், டேடா ப்ராஸஸிங் சாதனங்களும் தயாராகின்றன.

ஹை பவர் செய்தித் தொடர்பு, ஒலிபரப்பு சாதனப் பிரிவு: தயாரிப்புகள்— 1 கிலோவாட், 10 கிலோவாட், 100 கிலோவாட் மீடியம் வேவ் ஒலிபரப்பு டிரான்ஸ்மிட்டர்கள், டெலிவிஷன் நிலைய சாதனங்கள், டிரான்ஸ்மிஷன் சாதனங்கள், ஒலிபரப்பு தேவைக்கான கான்சோல் டேப் ரிகார்டர்கள், டேப் டெக்குகள், 100 வாட் எஸ்எஸ்பி டிரான்ஸ் ரிசீவர்கள், நாட்டின் இராணுவத் தேவைக்கும் மற்ற தேவைகளுக்கும், நிலையானபோதும், நகரும்போதும் இயங்கவல்ல 400 வாட், 1 கிலோவாட், 5 கிலோவாட் எஸ்எஸ்பி கம்யூனிகேஷன் டிரான்ஸ்மிட்டர்கள்.

லோ பவர் செய்தித் தொடர்பு, சாதனப் பிரிவு: தயாரிப்புகள்— அண்மை தூர செய்தித் தொடர்பு சாதனங்கள்: வாக்கி-டாக்கி, நிலத்திலிருந்து வானோடு தொடர்பு, இவை போன்றவை. ஒரு கப்பலிலிருந்து மற்றொரு கப்பலோடும், கப்பலிலிருந்து கரையோடு தொடர்பு கொள்ளவும், வான விமானங்களுக்கேற்றதுமான செய்தித் தொடர்பு சாதனங்கள் மற்றும் மல்டி சேனல் ரேடியோ ரிலே சாதனங்கள்— எச்எஃப், விஎச்எஃப், யூஎச்எஃப் வகைகளில்.

எலெக்ட்ரான் ட்யூப் பிரிவு: ரேடியோ, டெலிவிஷன், தொழில்களுக்குத் தேவையான ரிசீவிங் வால்வுகள், இன்டிகேட்டர் ட்யூபுகள், டிவி பட ட்யூபுகள், செய்தி தொடர்பு, தொழில், ஒலிபரப்பு இவைகளுக்கான ட்ரான்ஸ்மிட்டிங் ட்யூபுகள்; செராமிக் ட்யூபுகள், வேபட்ரான்கள், தைராட் ரான்கள், மாக்னட்ரான்கள் மேலும் வாக்கம் கபாஸிடர்கள், மருத்துவ தொழிலுக்கான எக்ஸ்-ரே ட்யூபுகள், ராடார்களுக்கும் மற்ற சாதனங்களுக்கும் தேவையான விஷுர்டிக்கள் இவையெல்லாம் இப்பிரிவில் தயாரிக்கப்படுகின்றன.

செமி கண்டக்டர்கள் பிரிவு: ஜெர்மேனியம் டிரான்ஸிஸ்டர்கள், டயோடுகள், ஸிலிகான் டிரான்ஸிஸ்டர்கள், டயோடுகள், ஸ்விட்சிங் டிரான்ஸிஸ்டர்கள், ஜெனர் டயோடுகள், ஃபீல்ட் எஃபெக்ட் டிரான்ஸிஸ்டர்கள், டார்லிங்டன் இரட்டைகள் இன்டக்ரேடட் ஸர்க்யூட்டுகள், ஹைபிரிட் மைக்ரோ ஸர்க்யூட்டுகள் முதலியன இப்பிரிவில் தயாரிக்கப்படுகின்றன.

பாஸிவ் காம்போனன்ட்கள்: ஆஸிலேடர்கள், கடிகாரங்கள், வடிகட்டிகளுக்கான ஃபீஸோ மின் கிரிஸ்டல்கள்; அல்ட்ராஸோனிக் தேவைகளுக்கும் மற்ற தேவைகளுக்கும் க்வார்ட்ஸ் எலிமென்ட்கள், நுண்ணிய தட்டுக்களாகவும், ப்ளாக்கட்டுக்களாகவும் மைகாவிலும், செராமிக்கிலும் கபாஸிடர்கள்.

விமானப் பாதுகாப்பு ராடார் ஸிஸ்டங்களையும், மைக்ரோவேவ் செய்தித் தொடர்பு சாதனங்களையும் தயாரிப்பதற்கென்றே பி இ எல் உத்தரப்பிரதேசத்திலுள்ள காஜியாபாத்தில் நிறுவிய தொழிற்சாலையில் இப்பொழுது உற்பத்தி துவங்கி விட்டது.

1973-74ல் பாரத் எலக்ட்ரானிக்ஸின் ஏற்றுமதி 1.9 கோடியை எட்டியது. ஜப்பான், ஹாங்காங், தாய்லாந்து, சிங்கப்பூர், நேப்பாளம், பூடான், சிக்கிம் ஆகிய ஆசிய தேசங்களுக்கு பாரத் எலக்ட்ரானிக்ஸ் தயாரிப்புகள் கணிசமான அளவில் ஏற்றுமதி செய்ததுடன், பிரிட்டன், அமெரிக்கா, கனடா மேற்கு ஜெர்மனி இன்னும் பல நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்துள்ளது.

கடந்த 20 வருடங்களில் கிடைத்த அனுபவத்திலும் தொழில் நுட்பத்திறன் வளர்ச்சியிலும் பி இ எல் இப்போது தன்னுடைய சுய சக்தியைக்கொண்டே முன்னேறக்கூடிய கட்டத்தை அடைந்திருக்கிறது. பி இ எல் பொறியியல் பிரிவிலும் அபிவிருத்தி பிரிவிலும் உள்ள இருநூறுக்கும் மேற்பட்ட நன்கு தேர்ந்த பொறியியல் நிபுணர்கள், பல்வேறு செய்தித் தொடர்பு சாதனங்களையும் அவைகளின் தனித் தனி உறுப்புக்களையும் சுயமாகவே தயாரிக்கும் பணியில் தங்கள் திறனை மேலும் மேலும் காட்டி வருகிறார்கள்.

பி இ எல் வருங்காலத்தை தன்னம்பிக்கையோடு எதிர்நோக்குகிறது

'56ல் முன்னோடி... இன்று முன்னணியில்

பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிட்

பெங்களூர்•காஜியாபாத்

(ஒரு இந்திய அரசாங்க ஸ்தாபனம்)


சிந்தால்
வாக்குறுதி...
* புதுமை இன்றித
நறுமணம்
* துர்நாற்றத்திலிருந்து
சிறந்த பாதுகாப்பு
CINTHOL
Godrej
CINTHOL
DEODORANT AND COMPLEXION SOAP
...சிந்தால் மட்டுமே நிறைவேற்றக்கூடியது.

மர்ம முடிச்சு!

உள்ளூரில் உங்களுக்குத் தெரிந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் அல்லது டி. எஸ். பி. இப்படி யாராவது இருக்க வேண்டுமே ? அவர்களைப் பேட்டி கண்டு அவர்கள் சாமர்த்தியமாக விடுவித்த ஒரு மர்ம முடிச்சு பற்றியும் குற்றவாளி எவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டுக் கைதானன் என்பது பற்றியும் கல்கியில் அரைப் பக்கத்துக்கு மேற்படாத வகையில் சுருக்கமாக எழுதி அனுப்புங்கள். பிரசுரமாகும் பேட்டிக் கட்டுரைகளுக்குப் பரிசு உண்டு. முடிவு தேதி: ஆகஸ்டு 31-ந் தேதி. கடிதப் போக்குவரத்து கிடையாது. பிரசுரமாகாத கட்டுரைகளைத் திருப்பி அனுப்புவதற்கில்லை. உறையின் மேல் ''மர்ம முடிச்சு'' என்று குறிப்பிடவும்.

''இதில் நெஞ்சம் வெடிக்கும்படியாக எதுவுமே இல்லையே சகோதரி. என்னுடைய பழுதுபட்ட உடைகளைக்கூட நானேதான் தைத்துக் கொள்ளுகிறேன் என்று தெரியுமா, உனக்கு? நம் புனித நூலான குரானின் கொள்கைப்படி வாழ்பவன் நான்.''

''தெரியுமே! நீ உன்னுடைய செயல்கள் எல்லாவற்றுக்குமே நம் மதத்தின் பாதுகாப்பைத் தேடிக் கொண்டுவிடுகிறாய். நம் மதத் தலைவர்களால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளின்படி ஆட்சி நடத்துபவன் என்ற நல்ல பெயரும் உனக்குக் கிடைத்து விட்டது. உண்மையான முஸ்லிமாக வாழும் முகலாய மன்னர் என்று உன்னை இஸ்லாமிய உலகமே போற்றிப் புகழுகிறது!'' சகோதரனின் கொடிய செயல்களைக் குத்திக் காட்டும் வகையில் பூடகமாகப் பேசினாள் ஜஹானாரா.

''அதனால்தான் கேட்கிறேன் சகோதரி; தந்தையின் மன்னிப்பை எனக்கு எப்படியாவது நீ வாங்கிக் கொடுக்க வேண்டும் என்று. அப்பாவின் அந்த மன்னிப்பு எனக்குக் கிடைக்கவில்லையானால் அல்லாவின் வெறுப்புக்கு ஆளானவனாகிவிடுவேன். பஹன்! நீ மனம் வைத்தால், என் சார்பாக நீ வேண்டினால், தந்தையின் மன்னிப்பு எனக்கு நிச்சயமாகக் கிடைக்கும். நீ கேட்டு அவர் எதையும் மறுத்ததில்லை.''

ஜஹானாரா சகோதரனையே மௌனமாகப் பார்த்தாள். 'எத்தனை நயவஞ்சகமான நடிப்பு? கொடுமையின் எல்லையை மீறிய இம்சைகளைச் செய்துவிட்டு இப்படிக் கேட்கவும் முடிகிறதே, இவனால்? ஊராரை ஏமாற்றலாம். உலேமாக்களை நம்ப வைக்கலாம் — தான் உண்மையான முஸ்லிம் என்று. ஆனால் மனச்சாட்சி? அது இருந்தால் இவன் இப்படி ஒரு வேண்டுகோளை என்னிடம் கேட்டு வருவானா? அவள் சிந்தனை ஓட்டத்தை ஔரங்கசீப்பின் குரல் கலைத்தது.

''சகோதரி, என்ன யோசிக்கிறாய்?''

''ஒன்றுமில்லை... இரவு வேளையில்கூட நிம்மதியாகத் தூங்க அனுமதிக்காத உனக்கு அவர் எப்படித் தம் மன்னிப்பைத் தருவார்? அது போதாதென்று நீ அனுப்பி வைக்கும் அந்த ஹக்கீம் கொடுக்கும் தொல்லைவேறு...''

''அப்பாவின் அன்புக்குப் பாத்திரமானவராயிற்றே அந்த வைத்தியர்? தந்தையின் உடலுக்கும் உள்ளத்துக்கும் இதம் அளிக்கும் வகையில் சிகிச்சை அளிக்கவேதான் அவரை அனுப்பி வைத்தேன்.''

ஜஹானாராவினால் சிரிக்காமலிருக்க முடியவில்லை. எத்தனை சமத்காரமான பேச்சு?

''அப்பா மயிலாசனத்தில் வீற்றிருந்த போது அவரிடம் மதிப்பும் மரியாதையும் காட்டியவர் அந்த ஹக்கீம் என்பது உண்மைதான். ஆனால் இன்று அந்த இருக்கையில் இருப்பவருக்கு உண்மையாக உழைப்பது அவர் கடமை அல்லவா? அதனால்தான் ஷாஜஹான்ஷா ஔரங்கசீப் அவர்கள் காட்டும் அலட்சியத்தைவிட அதிகமாகக் காட்டுகிறார் அந்த வைத்தியர் தம் மாஜி அரசரிடம். மகனிடம் அவமானப்படுவதைவிட இந்த மாற்றானிடம் படும் அவமானத்தைத் தந்தையினால் தாங்கவே முடியவில்லை.''

ஔரங்கஸேப் எழுந்துவிட்டார். ''அப்படியா? நான் அந்த ஹக்கீமை விசாரிக்கிறேன்.'' விடைபெற்றார் மொகலாயமன்னர்.

ஔரங்கஸேப்பின் அரண்மனையில் ஓர் அந்தரங்கமான அறை. ஹக்கீம் விசாரணைக்காக நிறுத்தப்பட்டிருந்தார். ஷாஹன்ஷாவின் கண்களிலே கோபம் ஜ்வலித்தது.

''என் கட்டளையை நிறைவேற்றாதவர்களுக்குக் கிடைக்கும் வெகுமதி தெரியுமா?''

மௌனம்.

''வருடங்கள் எட்டாகப் போகின்றன. இன்னும் மன்னர் ஷாஜஹானுக்கு மரணம் சம்பவிக்கவில்லை. மெள்ள மெள்ள அவர் உயிரைக் குடிக்கும் வகையில் விஷத்தை உடலில்— செலுத்துவதாக ஒப்புக் கொண்ட நீ, எத்தனை துன்பங்களையும் ஏற்றுக் கொண்டு ஆரோக்கியமாக வாழ்வதற்கு அவருக்குக் காய கல்பம் செய்து கொடுத்துக் காப்பாற்றி வருகிறாயா? ஏன் பதில் சொல்லாமல் மௌனம் சாதிக்கிறாய்?''

மீண்டும் மௌனமே அந்த வயோதிகரான ஹக்கீமின் பதிலாக இருந்தது. தலை குனிந்தபடி நின்ற அவர் உடல் சற்றே தள்ளாடியது.

''பேச மாட்டாயல்லவா? உன்னைப் பேச வைக்க என்னால் முடியும். உன் சொத்துக்கள் நாளை சூறையாடப்படும். உன் மனைவி மக்களின் உடல்களைக் கழுகுகள்.....'' ஔரங்ஸேப்பின் ஆத்திரமான கர்ஜனை சட்டென்று நின்றது. ஹக்கீம் தடுமாறிக் கீழே சரிந்தார். உருண்டது அவர் உடல் தரையில். அவர் கண்கள் குத்திட்டு நிலைத்து விட்டன.



கதையல்ல, சரித்திரம்!

□ சுற்றுலா சுற்றுலா என்று இன்றைக்குப் பிரமாதப்படுகிறதே, இதை இந்தியாவை ஆண்ட ஷெர்ஷா அன்றைக்கே பிரமாதப் படுத்திவிட்டார். உல்லாசப் பிரயாணிகளை உத்சாகப்படுத்த நாட்டில் ஏராளமான சத்திரங்களை நெடுஞ்சாலைகள் தோறும் கட்டினார். பிரயாணிகள் இந்த விடுதிகளில் எத்தனை நாட்கள் வேண்டுமானாலும் தங்கி, உண்டு, உறங்கிப் போகலாம் — இலவசமாக! இதுவல்லவோ நிஜமான டூரிஸம்!

ஒரு விநாடி உயிரற்ற அந்த உடலையே வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்த ஆலம்கீர் 'பதில் பேச வேண்டிய அவசியமில்லாத நிலையை அடைந்துவிட்டாள், நிம்மதியாக!' என்று முணு முணுத்தார். கைதட்டினார். கதவைத் திறந்து கொண்டு இரண்டு வீரர்கள் வந்து வணங்கி நின்றார்கள். அவர்களிடம், "தற்கொலை செய்து கொண்டுவிட்ட இந்தக் கயவளைக் கொண்டு போய்க் கழுகுகளுக்கு இரையாகப் போடுங்கள்!" என்றார்.

ஹக்கீம் விசாரணைக்குட்பட்டிருந்த அதே சமயத்தில் ஷாஜஹானின் நடுங்கும் கைகளில் ஒரு கடிதம் படபடத்துக் கொண்டிருந்தது.

ஆலம்பனாஹ் ஷாஜஹான் அவர்களுக்கு! இந்தக் கடிதத்தைத் தாங்கள் படித்துக் கொண்டிருக்கும் போதே, தங்கள் கருணை வெள்ளத்திலே மூழ்கித் தங்கள் உப்பைத் தின்று வாழ்ந்த இந்த உடலிலிருந்து உயிர் பிரிந்து விட்டிருக்கும். நன்றி கொன்ற கொடியவள் என்ற ஓர் எண்ணம் உங்களுக்கு என்னைப் பற்றி இந்தச் சமீப காலத்தில் ஏற்பட்டிருக்கிறது. அப்படி ஏற்பட வேண்டும் என்பதற்காகவே நானும் தங்களிடம் நடந்து கொண்டேன். நான் அப்படி நடிக்காதிருந்தால்? நான் உங்களிடம் அலட்சியமாகவும் உங்களை அவமானப்படுத்தும் முறையிலும் நடந்து கொண்டுவிட்டு வீட்டுக்கு வந்து எத்தனை நேரம் குமுறிக் குமுறி அழுதிருப்பேன் என்பது அல்லாவுக்கே தெரியும்.

ஜஹாம்பனா! உங்களுக்கு விஷமிட்டுக் கொல்ல வேண்டும் என்பது எனக்கிடப்பட்ட கட்டளை. ஆனால் அது உலகின் கண்களுக்கு தெரியாமல் கொஞ்சம் கொஞ்சமாக உங்களை மரணம் தழுவும் வகையில் மருந்து தரப்பட வேண்டும் என்பது தங்கள் மைந்தனின் விருப்பம். நான் இதை மறுத்தால் அதை நிறைவேற்ற, பொருளுக்கும் பதவிக்கும் ஆசைப்பட்டுத் தங்களை நேசிக்காத வேறு ஒரு வைத்தியர் சம்மதிக்கக்கூடும். ஆண்டவனுக்கும் மேலாக நேசிக்கும் என் அரசருக்கு அந்த கைய நிலை ஏற்படக் கூடாது என்பதற்காகவே என் உள்ளத்தைக் கல்லாக்கிக் கொண்டு ஔரங்கசீப்பின் அந்தக் கொடிய கட்டளையை ஏற்றுக் கொண்டேன். அதற்காக ஆயுள் நாடகத்தில் உங்கள் வெறுப்பை நான் சம்பாதித்துக் கொண்டாலும் மன்னர்பிரானின் உயிரைக் காக்க முடிகிறதே என்று மகிழ்ந்து போனேன். நான் தங்களுக்கு விஷம் கலந்த மருந்தைத் தருவதற்குப் பதில் உங்கள் உள்ளமும் உடலும் தெம்பும் திடமும் பெறும்படி மூலிகைகளினாலான ஔஷதத்தைக் கொடுத்து வந்தேன். வருஷங்கள் பல நகர, தான் செய்யும் கொடுமைகளுக்கும் சித்திரவதைகளுக்கும் ஈடுகொடுத்து வாழ்ந்து வரும் உங்களைக் கண்டு என்னை அடிக்கடி அழைத்து விசாரிப்பார் உங்கள் மகன். 'இன்னமும் மன்னர் உயிரோடு இருக்கிறாரே எப்படி?' என்று. என் மருந்துகள் உங்கள் மனோதிடத்திடம் தோல்வி அடைந்து வருவதாகவும், விரைவிலே பலன் தரும் கடுமையான விஷத்தைத் தருவதாகவும் சமாதானம் கூறித் தப்புவேன். ஆனால் இனி என் சூழ்ச்சி பலிக்காது. இப்படி இரட்டை வாழ்க்கை வாழ்வதற்கு இனி என்னால் முடியாது. ஒரு வகையில் இது எனக்கும் சித்திரவதைதான். இதிலிருந்து விடுபடத் தீர்மானித்துவிட்டேன். தங்களுக்கு விஷமிட்டுக் கொல்ல என்னால் முடியாது. அந்த இழிசெயலிலிருந்து தப்ப, எனக்கு நானே விஷமிட்டுக் கொள்வதைத் தவிர வேறு மார்க்கம் இல்லை. அதை அந்த ஔரங்கஸேப்பினாலும் தடுக்க முடியாது. தங்கள் நலன் கருதி நான் தவறாக நடந்து கொண்டாலும் தங்கள் மனம் புண்படும்படி நடந்து கொள்ள நேர்ந்தமைக்கு இந்த எளியவளைத் தாங்கள் மன்னிக்க வேண்டும்."

"மகளே, ஜஹானாரா!" என்று அலறினார் மன்னர் ஷாஜஹான். ஓடோடி வந்தவளிடம் ஹக்கீமின் கடிதத்தைக் கொடுத்துவிட்டுச் சிறு குழந்தையைப் போல் விக்கி விக்கி அழலானார்.

"என் வாழ்க்கையில் பல நல்லவர்களை அறிந்து கொள்ளாமல் அவர்களை இழந்த பிறகு கதறியிருக்கிறேன். அப்படிப்பட்ட ஒரு விலை மதிக்க முடியாத கோஹினூர் அம்மா, இந்த ஹக்கீம்! நன்றியில்லாத கொடியவள் குரூரமானவள் என்று கொதித்தேனே. ஐயோ, என் உயிரைக் காக்கத் தன் உயிரைக் கொடுத்த உத்தமியை அறிந்துகொள்ளாமல் போனேனே....." என்று அரற்றினார் ஷாஹன்ஷா ஷாஜஹான்.

கடிதத்தைப் படிக்க முடியாமல் ஜஹானாராவின் பார்வைக்குக் கண்ணீர் வலை பின்னிக் கொண்டிருந்தது.

வண்டு நாடுவதோ வாச நறுமலரை
வண்டு விழி மாதர் நாடுவதோ சாரதாஸை
பாங்கான பட்டாடைகளுக்கு..



சாரதா'ஸ்

பட்டுப் புடவைகளுக்கு
நம்பிக்கையான பெயர்

தன் பில்டிங், மவுண்ட்ரோடு,
சென்னை-2. போன்: 87177.

32, N.S.B. ரோடு,
திருச்சி-2. போன்: 7077.



தலைவலியை எதிர்த்து ஸாரிடான்



தலைவலி உங்களைத் தாக்கும்போது, ஸாரிடான் கொண்டு அதைத் தாக்குங்கள். ஒன்றே ஒன்று போதும். ஸாரிடானின் தனிப்பட்ட கலவைமுறை மட்டுமே உங்களைத் தலைவலி, உடம்புவலி, மனச்சோர்வு மற்றும் வலிகளிலிருந்து மீட்கிறது. நிவாரணமளித்து, சோர்வை நீக்கிப் புத்துயிரளிக்கிறது. ரோஷின் சர்வதேச ஆராய்ச்சியின் விளைவு இங்கு செயல்படுகிறது.

தலைவலியைப் போக்குகிறது ஒரே ஒரு **ஸாரிடான்**

திருடர்கள்

ர.சு.நல்லபெருமாள்

6. "நியூவேவ்"

வக்கீல் சங்கக் கட்டடம், நீதிமன்றத்துக்குத் தென்புறத்தில் அமைந்திருந்தது. சங்கக் கட்டடத்துக்குள் மத்தியானம் இடைவேளையில் கலகலப்பாயிருக்கும். வேலையில்லாத வக்கீல்களும், காலையில் மட்டும் வேலையிருந்து மத்தியானம் வேலையில்லாத வக்கீல்களும், அரட்டை அடிப்பதற்கென்றே அங்கு ஒரு பெரிய அறை இருந்தது. அந்த அறையில்தான் எப்போதும் கூச்சலும் கும்மாளமும் இருக்கும். அந்த அரட்டை அறைக்கு அடுத்துள்ள பெரிய அறையில் சில வயதான வக்கீல்கள் சாய்வுநாற்காலிகளில் குறட்டைவிட்டுக் கொண்டிருந்தார்கள். சில சமயங்களில் இவர்களுடைய தூக்கத்தைக் கலைக்கும் அளவுக்கு அரட்டை அறையிலிருந்து ஆரவாரம் கிளம்புவதும் உண்டு. அரட்டை அறைப் பேச்சுக்களை ரசிக்கச் சில சமயங்களில் வயதான வக்கீல்களும் வருவார்கள். அந்த இடத்தில் எந்தப் பொருள் பற்றியும் பேச்சு அடிபடும். அமெரிக்க ஜனாதிபதியின் வாட்டர்கேட் விவகாரத்திலிருந்து, தமிழகத்தில் அரிசி விலை ஏற்றம் வரையில் பேசித் தீர்க்கப்படும். ஆனால் எந்தப் பேச்சிலும் ஆழ்ந்த கருத்தையோ, சிந்தனைச் செறிவையோ, அறிவின் நுட்பத்தையோ அந்த இடத்தில் எதிர்பார்க்க முடியாது. மேம்போக்காகவும், தமாஷாகவும் பேசுவார்கள்.

அந்த அரட்டை அறைக்கு நேர் எதிர்த் திசையில் வேறோர் அறை இருந்தது. அதில் ஓய்வு நேரங்களில் இலக்கியம், கலை, சட்ட நுணுக்கம், நீதிமன்ற நடவடிக்கைகளின் தரம், அரசியல் இவை பற்றிய பேச்சு நடைபெற்றுக் கொண்டிருக்கும். இங்கு நடைபெறும் பேச்சும், பேசப்படும் பொருளும் மிகுந்த தரம் உள்ளவையாயும் சிந்தனையைத் தூண்டுபவையாகவும் இருக்கும். பாலகிருஷ்ணய்யரின் சம்ஸ்கிருத ஞானமும், ஆவுடையப்பபிள்ளையின் தமிழ் ஞானமும் அங்கு நிறைந்து எல்லோருடைய மனத்தையும் நிரப்பும். சில வேளைகளில் சம்பத் போன்ற இளைஞர்கள், தற்கால இலக்கியத்தின் புதுமைப் போக்கையும், தரத்தையும் விமர்சிக்கும்போது, பாலகிருஷ்ணய்யர் போன்ற மேதைகளின் தர்க்கம் சிந்தனைக்கு விருந்தாக அமைவது உண்டு. வழக்கறிஞர்கள் அன்றைய அவரவர்களின் மன நிலைக்கு ஏற்ப அரட்டை அறைக்கோ அல்லது மற்றோர் அறைக்கோ செல்வார்கள் !

சம்பத் ஜூனியராகச் சேர்ந்தவுடன் அவனுக்கு முதன் முதலில் ஆவுடையப்பபிள்ளை சொன்ன புத்திமதி, ''வக்கீல் சங்க அரட்டை அறைக்குள் பொழுதைக்கழித்து விடாதே. அங்கு போனால் உன்னுடைய சிந்தனை தானே குறைந்துவிடும்'' என்பதுதான்.

ஆனால் அரட்டை அறையில் நடைபெறும் எந்தப் பேச்சிலுமே உயர்ந்த நோக்கமோ, நல்ல ரசனையோ, தரமோ இல்லை என்பதற்காக சம்பத் அங்கு போகாமல் இருந்து விடுவதும் இல்லை. அவனுக்கு ஓய்வு தேவைப்படும் போது பொழுதைக் கழிப்பதற்காக அங்கு போய் உட்கார்ந்து கொள்வான். அங்குள்ள சூழ்நிலையையும், எப்படியெல்லாம் ஒருவர் மீதுள்ள பொறாமையை மற்றவர்கள் வெளிப்படுத்துகிறார்கள் என்பதையும், எல்லாம் தெரிந்தவரைப் போல் பேச நினைத்து, சிலர் உளறுவதையும் கேட்கக் கேட்கச் சம்பத்துக்கு வேடிக்கையாக இருக்கும். தான் ஒரு கதாசிரியனாக இல்லாமற் போய்விட்டோமே என்று கூட அவன் வருந்துவான். பல நாவல்களுக்குப் போதுமான பல தரப்பட்ட பாத்திரங்களை அங்கு பொறுக்கலாம்.

அன்று அந்த அறையில் கூட்டம் நிரம்பி வழிந்தது. பல இளம் வக்கீல்கள், உட்கார இடமின்றி நாற்காலிகளின் கைகளில் ஒண்டியபடி அமர்ந்திருந்தார்கள். கூட்டத்தினரின் கவனம் முழுதும் அங்கு நடுநாயகமாக அமர்ந்திருந்த வக்கீல் கருணாகரன் மீதிருந்தது. அந்த அறைக்குக் கருணாகரன் எப்போது வந்தாலும் கலகலப்பாய்த்தானிருக்கும். ஏதாவது புதுச் செய்திகளைக் கொண்டு வருவார். புரட்சித் தலைவர் என்பதால் சிலருக்கு அவர் மீது மரியாதையும், பயமும் உண்டு. அன்று கருணாகரன் மிக முக்கியமான விஷயம் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார். நீதிபதியின் மீது கண்டனத் தீர்மானம் போடுவது பற்றிய பேச்சு.

''இன்னும் கொஞ்சம் பொறுத்துப் பார்க்கலாமே சார்!'' என்றார் ஓர் இளம் வக்கீல்.

''எத்தனை நாட்கள் பொறுப்பது? ஒரு வருஷமாகப் பொறுத்தாகி விட்டதே, போதாதா?'' என்றார் கருணாகரன்.





''ஜட்ஜ் இப்படி நடந்து கொள்வதற்கு அவருடைய குடும்பச் சூழ்நிலை காரணமாக இருக்கலாம்'' என்றார் ஒருவர்.

''அவர் குடும்பத்தில் ஆயிரம் இருக்கும். இத்தனை வயதுக்கு மேல் கல்யாணத்தைப் பண்ணிக் கொண்டால் அப்படித்தான்'' என்றார் கருணாகரன் கேலியாக. பலர் சிரித்தார்கள்.

''இவரே இத்தனை வயதுக்கு மேல் மூன்றாவது முறையாகக் கல்யாணம் செய்திருக்கிறாரே!'' என்று கருணாகரனைக் காட்டி இரகசியமாகச் சொன்னார், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஓர் இளம் வக்கீல். ''அப்படியிருந்தும் ஜட்ஜைக் கேலி செய்கிறார்!''

''ஜட்ஜுடைய மனைவி பெரிய எழுத்தாளியாகி விட்டாள் சார். இன்று அவளுடைய கதைப் புத்தகம் ஒன்றுக்கு வெளியீட்டு விழா நடக்கிறது. நம்முடைய வக்கீல் சங்கத்துக்கும் அழைப்பு வந்திருக்கிறது'' என்றார் ஒருவர்.

''இன்றைக்கு வந்த 'நவரசம்' பத்திரிகையில் அந்த அம்மாளுடைய கதை ஒன்று வந்திருக்கிறது'' என்று கருணாகரனின் ஜூனியர், கான்முகமது பத்திரிகையை விரித்துக் காட்டினான். ஒரு பெண்ணின் படம் முக்கால் நிர்வாணத்நில் அதில் இருந்ததைப் பார்த்து முறைத்தார்கள்.

''இதுவா அவளுடைய படம்?'' என்று விவரம் தெரியாமலோ அல்லது வேண்டுமென்றே கேட்டார் தலை முழுவதும் நரைத்துப்போன வயதான வக்கீல். எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

''மிஸ்டர் சர்மா, இது கதைக்கான படம். கதை எழுதியவளுடைய படமல்ல'' என்றான் கான்முகமது சிரித்துக் கொண்டே.

''ஓஹோ..... நான் இந்தக் கதைகளை எல்லாம் படிப்பதே இல்லை'' என்று முனகிக் கொண்டார் சர்மா.

''நீங்கள் கேஸ் கட்டைத் தவிர வேறு எதைப் படித்திருக்கிறீர்கள்?'' என்றான் கான்முகமது.

சர்மா தலையைத் தடவியபடியே சிரித்துக் கொண்டார்.

''என்ன கதை?'' கருணாகரன் கேட்டார்..

''நியூ வேவ்'' என்றான் பத்திரிகையை வைத்திருந்த கான்முகமது.

''அவசியம் எழுத வேண்டியதுதான். நாடு இருக்கிற நிலையில் நியூவேவ் கதை



இல்லாவிட்டால் என்ன ஆகிறது?'' என்றார் கருணாகரன். மீண்டும் சிரிப்பொலி எழுந்தது.

''பிரபல எழுத்தாளியாகிவிட்டாள்'' என்றார் ஒருவர்.

''எழுத்திலும் கவர்ச்சி; அவள் பார்க்கவும் கவர்ச்சியா யிருக்கிறாள்; நவரசம் பத்திரிகை ஆசிரியர் பிரமாதப்படுத்தி விளம்பரம் கொடுத்துவிட்டதில் வியப்பென்ன?'' என்றார் கருணாகரன் எரிச்சலுடன்.

''அவளுடைய கவர்ச்சிதான் அவளுடைய புகழுக்குக் காரணம் என்கிறீர்களா ?'' என்று கேட்டார் வேறோர் இளம் வக்கீல் வம்புக்காக. ஒரு நீதிபதியினுடைய மனைவியைப் பற்றி இப்படிப் பொது இடத்தில் பேசுகிறோமே என்ற கூச்சம்கூட இல்லை.

ஒருவர் வம்புத் தீ வளர்க்க ஆரம்பித்தால் இன்னொருவர் எண்ணெய் விடுவது இயல்பு.

''அதில் எவ்வளவோ விஷயம் அடங்கியிருக்கிறது. நவரசம் ஆசிரியர் இருக்கிறாரே, அவர் பெரிய ஆள்'' என்று கூறிக் கண்களைச் சிமிட்டினார், கருணாகரன். சிலர் புரிந்து கொண்டு சிரித்தனர்.

''கதாசிரியைக்காகவாவது நாம் ஜட்ஜின் மீது சிறிது இரக்கம் காட்டினால் என்ன?'' என்று ஓர் இளம் வக்கீல் கூறியதும், பலர் குபீரென்று சிரித்தார்கள்.

''இந்த ஜட்ஜ் மட்டமான ஆள். வக்கீல்களை மதிப்பதில்லை. கான்முகமது அன்று அழத்தான் இல்லை. அந்த அளவுக்குக் கோர்ட்டில் அவனை அவமானமாகப் பேசியிருக்கிறார். அவர் இஷ்டத்துக்கு நேரம் கழித்து வருகிறார். நாம் வாய்தா கேட்டால், மறுக்கிறார். கொஞ்சம்கூடப் பெருந்தன்மை இல்லாதவர். ஒரு முறை தீர்மானம் போட்டால்தான் இந்த மாதிரி நபர்களுக்குப் புத்தி வரும்'' என்றார் கருணாகரன்.

'' குறுக்கு விசாரணையே செய்யவிடாமல் தடுக்கிறார் சார். பிறகு எப்படித்தான் வழக்கை நடத்துவது ?'' என்று கோபத்தோடு ஒரு நடுத்தர வயதுள்ள வக்கீல் இரைந்தார்.

''இந்த ஆள் வந்த பிறகு ஏழு தூக்குப் போட்டாகி விட்டது. குற்றவாளிகளை விடுதலை செய்யும் அதிகாரத்தை இன்னும் ஹைகோர்ட் இவருக்குக் கொடுக்கவில்லை போலிருக்கிறது'' என்றார் கருணாகரன். பிறகு, ''நாளைக் கூட்டத்துக்கு எல்லோரும் வந்துவிடுங்கள். இரண்டாம் சனிக்கிழமை விடுமுறை என்று வீட்டில் இருந்துவிடாதீர்கள். நாளைக்குக் காலையில் பத்து மணிக்குக் கூட்டம். ஏகமனதாகத் தீர்மானத்தை நிறைவேற்றி ஹைகோர்ட்டுக்கு அனுப்பிவிடுவோம் '' என்று கூறிவிட்டு எழுந்தார்.

''நம்முடைய சங்கத் தலைவர் ஆவுடையப்ப பிள்ளை என்ன நினைக்கிறாரோ ?'' என்று யாரோ ஒருவர் சொன்னார்.

''அவர் என்ன நினைத்தால் என்ன ? நாம் மெஜாரிட்டி இருக்கிறோம். என்ன பயம் ? பிள்ளை பத்தாம்பசலி ஆள். வழவழா என்று



தான் இருப்பார். அவருக்கெல்லாம் ஜட்ஜ் என்றாலே தொடை நடுங்கும்'' என்றார் கருணாகரன்.

''யார்? பிள்ளையா நடுங்குவார்? ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்தேழில் இங்கே ஒரு வெள்ளைக்கார ஜட்ஜ் இருந்தான்.... ஐ.ஸி.எஸ். லாங்டன் என்று பெயர். பிள்ளையிடம் அவன் பட்டபாடு உமக்கு என்ன தெரியும்? நீர் அப்போது இந்தத் தொழிலுக்கே வரவில்லை'' என்றார் ஒரு வயதான வக்கீல் கோபத்துடன்.

''அதெல்லாம் அந்தக் காலத்தில்'' என்று கூறிக் கொண்டே கருணாகரன், அந்த அறையைவிட்டு விரைவாக வெளியேறினார். கருணாகரனின் தந்திரங்களில் இதுவும் ஒன்று. தமக்கு எதிர்ப்பு இருக்கிறது என்று தெரிந்தால் விரைவில் அந்த இடத்திலிருந்து நழுவி விடுவார்.

சங்கக் கட்டடத்தின் வெளி வராந்தாவுக்கு வந்த கருணாகரன், பஞ்சாயத்துப் போர்டு தலைவர் நிற்பதைக் கண்டதும் அவரை அழைத்துக் கொண்டு ஒரு தனி இடத்துக்குச் சென்றார்:

''சர்க்கார் வக்கீல் முனுசாமிக்கு நீங்கள் இன்னும் பணம் கொடுக்கவில்லையே?'' என்றார் கருணாகரன்.

''ரொம்பக் கேட்கிறீர்களே!'' என்றார் பஞ்சாயத்துப் போர்டுத் தலைவர்.

''நானா கேட்கிறேன்? அவருக்கல்லவா பணம்? இந்த வழக்கில் வெற்றி அடைய வேண்டுமா, வேண்டாமா?''

''ஏன் வேண்டாம். அந்தப் பயலை மூன்று வருஷங்களாவது ஜெயிலுக்கு அனுப்பி, ரகுபதி நாயுடுவின் மானத்தை வாங்காமல் நான் தூங்கமாட்டேன் சார்!'' என்றார் தலைவர், உணர்ச்சி பொங்க.

''பின்னே, பணம் கொடுக்கத் தயங்கினால் எப்படி?''

''அவர் அரசாங்க வக்கீல். எப்படியும் இந்த வழக்கை நடத்த வேண்டியது அவருடைய பொறுப்புத்தானே சார்!'' என்றார் தலைவர், சிரித்துக் கொண்டே.

''இந்த வழக்கில் எதிரி தண்டனை அடைந்தாலோ விடுதலை பெற்றாலோ முனுசாமிக்கு ஒன்றுமில்லை.''

''சாட்சிகள்தான் பலமாயிருக்கிறதே!''

'' என்ன இருந்தாலும், வழக்கை நடத்த வேண்டியவர் அரசாங்க வக்கீல்தானே?.... வழக்கை நன்றாக நடத்த வேண்டாமா? ஆஸ்பத்திரியில் நோயாளிகளைக் கவனிப்பது டாக்டரின் கடமைதான். ஆனால் நம்மை நன்றாகக் கவனிக்க வேண்டும் என்பதற்காக டாக்டருக்குத் தனியாகவும் பணம் கொடுக்கிறோமே, அதே மாதிரிதான் இதுவும்'' என்றார் கருணாகரன்.

'' சார்.....! டாக்டர் விஷயம் என்னவாயிற்று? வழிக்கு வந்தாரா?'' — பரபரப்புடன் கேட்டார் பஞ்சாயத்துத் தலைவர்.

''டாக்டரைத் திங்கட்கிழமைதானே விசாரிக்கப் போகிறோம். அதற்குள் அவரைச் சரிக்கட்டிவிடலாம். இன்னும் வக்கீலுக்கே நீங்கள் பணம் தந்தபாடில்லை. டாக்டர் என்ன கேட்கிறாரோ..... மத்தியானம் கோர்ட் ஆரம்பிப்பதற்குள் நீங்கள் பணம் கொடுக்கவில்லை என்றால் பிறகு, முனுசாமி இந்த வழக்கில் அக்கறை காட்டமாட்டார். சாட்சிகளைச் சரியாக விசாரிக்கமாட்டார். விடுதலையாவதற்கு ஏற்றவாறு நடந்து கொள்வார்!'' என்றார் கருணாகரன்.

''ஆயிரம் ரூபாய் அதிகம் சார்!''

'' சரி, எழுநூறு கொடுங்கள். நான் சொல்லிச் சரிப்படுத்துகிறேன்.''

''இன்னும் அரை மணி நேரத்தில் கொண்டு வந்து தருகிறேன்'' என்று கூறிவிட்டுத் தம் காரை நோக்கி விரைந்து சென்றார் பஞ்சாயத்துப் போர்டு தலைவர்.

''உம்.... எழுநூறாவது வருகிறதே. அந்த வரை லாபந்தான்'' என்று நினைத்துக் கொண்டே வக்கீல் சங்கக் கட்டடத்தின் படிகளில் இறங்கத் தொடங்கினார் கருணாகரன். அப்போது ஆவுடையப்பபிள்ளை, படிகளில் ஏறிக் கொண்டிருந்தார்.

'' என்ன சார், குறுக்குவிசாரணையை இன்றைக்குள் முடித்துவிடுவீர்களா?'' என்று கேட்டார் கருணாகரன்.

படிகளில் ஏறியதால், சற்று மூச்சு வாங்க நின்றார் ஆவுடையப்பபிள்ளை.

'' இந்தப் படி ஏறுவதற்குள் இப்படி மூச்சு வாங்குகிறதே!'' என்றார் கருணாகரன்.

''எனக்கு வயது அறுபத்தைந்து. இரத்தக் கொதிப்பு வேறு இருக்கிறது'' என்றார், ஆவுடையப்பபிள்ளை.

''அறுபத்தைந்து ஒரு வயதா?'' என்றார் கருணாகரன் அலட்சியமாக.

''நான் இன்னும் மாசே துங்கின் சிந்தனைகளைப் படிக்கவில்லை என்றும் இளமையாகவே இருப்பதற்கு'' என்று பிள்ளை கூறியதும் கருணாகரன், கலகலவென்று சிரித்துக் கொண்டே படிகளில் இறங்கிப் போய்விட்டார்.

(தொடரும்)

அடுத்த இதழில்

நகர்வலம்: திருவனந்தபுரம்





சுதேசியைப் பேணுவீர்!

புகழ்பெற்ற ஒரு பழம்பெரும்
நாட்டில் பிறந்தோம்
என்று நாம் பெருமை
கொள்வோம், பாரதநாட்டில்
பிறந்தோம் என்று
பரவசமடைவோம்.
இந்திய மரபைப் பேணுவோம்.
குவாலியர் சூட்டிங்கில்
கச்சிதமாகத் தைக்கப்பட்ட
நேரு ஜாக்கெட்டை
அணிவோம். இத் திசையில்
குவாலியர் ரேயான்,
இந்திய உடைப் பாங்கைப்
பிரபலப்படுத்துவதன்
அவசியத்தை எப்பொழு-
தும் உணர்ந்து வருகிறது.
எனவே அடுத்த முறைநீங்கள்
உடையணியும்போது
இந்திய மரபைக் கையாளுவீர்
—குவாலியர் சூட்டிங்
பயன்படுத்தி- அதனால்
உங்களுக்குப் பெருமை ஏற்படும்!

குவாலியர் சூட்டிங்

தி குவாலியர் ரேயான் ஸில்க் மான்யுபாக்சரிங் (வீவிங்) கம்பெனி லிமிடெட், பிர்லாநகர்–குவாலியர் (ம. பி.)

பஞ்சாமிர்தம் சரித்திரக் கதை எழுதுகிறார்!

கோமதி ஸ்வாமிநாதன்

காட்சி - 1

(எழுத்தாளர் பஞ்சாமிர்தத்தின் வீட்டுக்கூடம். பஞ்சாமிர்தம் குறுக்கும் நெடுக்கும் நடந்து கொண்டிருக்கிறார்.)

பஞ்சாமிர்தம் (தாமாக): ஹும்!.... இப்போ உடனடியாக ஒரு குதிரை வேணுமே! எங்கே போய்த் தேடறது?

பெரியநாயகி (உள்ளிருந்து வந்து கொண்டே சரியாகக் காதில் வாங்கிக்கொள்ளாமல்): இப்போ திரைக்கு என்ன அவசரம் வந்ததாம்? அந்த ஜன்னல் இருக்கிற லட்சணத்துக்குத் திரை ஒன்னுதான் குறைச்சல்.

பஞ்சாமிர்தம்: கர்மம்! கர்மம்! ஒரு டமாரச் செவிடோட நிம்மதியாக் குடித்தனம் நடத்திவிடலாம்! ஆனால் அரைகுறைச் செவிட்டோட.....அடி, மண்டுகமே! நான் குதிரை வேணும்னு சொல்லிண்டு இருந்தேன்! நீ ஏதோ திரையைப் பிடித்து 'டார் டார்' என்று இழுக்கிறாய்!

பெரியநாயகி: குதிரையா?...

பஞ்சா: ஆமாம்! குதிரையேதான்!... நான் இப்போ ஒரு சரித்திரக் கதை எழுதப் போகிறேன்!....

பெரி: அதற்கு?

பஞ்சா: சரித்திரநாயகர்கள் எல்லாம் குதிரை மீதுதான் செல்வார்கள்! ஒரு நல்ல கதையை எழுத ஓர் அனுபவம் மிக்க எழுத்தாளன் அவன் சிருஷ்டிக்கும் பாத்திரமாகவே மாறணும்! அப்பத்தான் பாத்திரங்களில் ஜீவன் இருக்கும்!

பெரி: குதிரை மேலே ஏறி உட்கார்ந்துண்டுதான் சரித்திரக் கதை எழுதணும்னு ஏதாவது சட்டமா? அப்படின்னு இந்த வீட்டுக் கூடத்திலே கொண்டு வந்து குதிரையைக் கட்டணுமா? ஐயையோ! இப்பவே நாத்தம் அடிக்கிற மாதிரி இருக்கு!


பஞ்சா: அட மட ஜன்மமே! சின்னப் பசங்க, விளையாட்டு மைதானத்திலே சைக்கிள் கத்துக்கற மாதிரி, நான் ஒரு குதிரையை வாடகைக்குப் பிடிச்சு அதன் மேலே உட்கார்ந்து ராத்திரி வேளையிலே கொஞ்சம் சவாரி செய்வேன். அப்போ நான் என் கற்பனையிலே, ஒரு மகேந்திரமல்லனாகவோ, சாளுக்கிய சிங்கநாதனாகவோ மாறி விடுவேன். அந்த வேகத்திலே சரித்திரக் கதை எழுதின...

பெரி: ...அந்த வேகத்திலே உங்க கதை அச்சாயிருக்கிற பக்கங்களைத் தள்ளிட்டுப் படிக்கிறவா அடுத்த கதைக்குப் போவா...! கதை எழுதறாராம் கதை! என்னவோ மனசிலே தோணினதை எழுதாமே!...

பஞ்சா: நான் வெளியே போகப் போகிறேன்! உன்னைச் சுற்றி ஒரு காத வட்டாரத்துக்கு மனுஷனுக்கு உருப்படியான கற்பனை பிறக்காது!....

(போகிறார்)





காட்சி - 2

(பஞ்சாமிர்தம் வாசலை ஒட்டிய முன் அறை ஜன்னல் வழியாகத் தெருவைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். தெருவிலே ஒரு பரதேசி போய்க் கொண்டிருக்கிறார். பஞ்சாமிர்தம் வேகமாக வாசலுக்கு வருகிறார்).

பஞ்சா: பெரியவரே!... ஸ்வாமி! இப்படிக் கொஞ்சம் வந்து அமர்கிறீர்களா?

சாமியார்: ஐயா! என்னையா கூப்பிட்டீங்க?

பஞ்சாமிர்தம்: உங்களையேதான். இப்படிக் கொஞ்சம் வாருங்கள்!

(சாமியார் வந்து கூடத்தில் ஒரு நாற்காலியில் அமர்கிறார்).



சாமியார்: ஒரு மணி நேரமாக ஒரு சிங்கிள் டீக்குத் தவிக்கிறேன்!... தாங்கள்...

பஞ்சா: ஸ்வாமி! டபுள் டீக்கு ஏற்பாடு பண்ணறேன்!...உங்களுக்குப் பூர்வ ஜன்ம நினைவு ஏதாவது வருகிறதா ?

சாமி: பூர்வ ஜன்மமா?... அப்படீன்னு ?

பஞ்சா: சுவாமி! பாதாள விக்கிரமனின் பாசறையிலிருந்து அவனுடைய ரத்தின கிரீடத்தை அபகரித்துக் கொண்டு போன மெய்யே மொழியா அடிகளார் மாதிரித் தாங்கள் இருக்கிறீர்கள்! என்ன ஜெம்பறீங்க? உட்காருங்க !

சாமி: பின்னே என்னவாம்! தெருவிலே போறவனைக் கூப்பிட்டு, 'அதை அபகரிச்சே! இதைச் சுருட்டினே'ன்னு ஆரம்பிச்சிங்கன்னு ! இது ஆள்மாருட்டக் கேக! நான் வர்றேன்!...

பஞ்சா: சுவாமிகளே! டீக் குடிக்கச் சில்லறை தரேன். அதற்குப் பதிலா நீங்க ஓர் உதவி செய்யணும்!

சாமி: சொல்லுங்க!

பஞ்சா: ஒரு வேட்டி துண்டு இரவலாய்த் தர்றேன். அதைக் கட்டிக்கிட்டு உம்முடைய காஷாய ஜிப்பாவைக் கொஞ்ச நேரம் கழற்றும். அதை நான் மாட்டிக்கிட்டுக் கண்ணாடி முன்னாலே நடந்து பார்க்கணும்!.... துறவிகள் வரும் சரித்திரக் கதை ஒன்றை நான் எழுதிக் கொண்டிருக்கிறேன்!

சாமியார்: எனக்கேதுங்க கதை கேட்க நேரம்? சிங்கிள் டீ....

பஞ்சா: உங்ககிட்டே கதை சொல்லலே சுவாமி! நான் 'டெம்பரரி' சாமியாரா மாறிப் பார்க்கணும்.

சாமி: நல்ல ஆசைங்க!... நான் ஒண்ணு சொல்றேனுங்க. ஒரு வேட்டி துண்டும் இருபத்தி ஐஞ்சு ரூபாயும் கொடுங்க! இந்தக் காவித் துணிகளை உங்களுக்கே கொடுத்துடறேன்.

பஞ்சா: அஞ்சு படி அரிசி வாங்கிக்கிட்டுத் திரும்பச் சம்சாரம் நடத்தப் போகத் தீர்மானமா ? இந்தா இரண்டு ரூபாய். அரை மணி நேர வாடகை.

(சாமியார் முறைத்து விட்டுப் போகிறார்)

காட்சி — 3

(பஞ்சாமிர்தத்தின் வீட்டுக்கூடம், பஞ்சாமிர்தம் ஏதோ எழுதிக் கொண்டிருக்கிறார். அவர் பையன் ராஜு வெளியிலிருந்து வருகிறான்.)

ராஜு: என்னப்பா ஆச்சு? எவ்வளவு தூரம்....?

பஞ்சாமிர்தம்: அந்த மணியடிச்ச வல்லபனை இப்போ எப்படிக் கொல்றதுன்னு புரியவில்லே.....!

ராஜு: அவனையே கொஞ்சம் மூட்டைப் பூச்சி மருந்தைக் குடிச்சு ஒரேயடியாக மூச்சை விடச் சொல்லுங்களேன்! போங்கப்பா ! மணியடிச்ச வல்லபனும்!... ஏதாவது பள்ளிக்கூடத்திலே பீரியட்டுக்குப் பீரியட் மணி அடிக்கும் உத்தியோகம் பார்த்தானா? மணி எடுத்த பல்லவன்! பேரை ஞாபகம் வைச்சுக்கத் தெரியலே! காலகண்ட சாஸ்திரியோட சரித்திர ஆராய்ச்சிப் புத்தகத்தைக் கரைச்சுக் கலக்கிக் குடிச்சதாகப் பீத்திகிறீர்கள்! போங்கப்பா !

பஞ்சா: எஸ்! எஸ்! மணி எடுத்த பல்லவன் கரெக்ட்! இப்போ குறைஞ்சது ஐம்பது இடத்திலேயாவது கரெக்ஷன் போடணும். ராஜு இந்தச் சரித்திரக் கதைகள் எழுதறதிலே இதுதான் ஒரு பெரிய கன்ஃப்யூஷன். ஆனாலும் ஏதோ ஆசை ... அவன் 'க்ளோஸ்' ஆனால்தான் கதையில் திருப்பம் உண்டாகும்.

(பெரியநாயகி கையில் கறிகாய்க் கூடையுடனும் அரிவாள் மனையுடனும் வருகிறாள்).


பெரி: இந்தப் பக்கம் கொஞ்சம் திரும்பிப் பாருங்கள். வீட்டிலே கத்திரிக்காய் மாத்திரம்தான் இருக்கு..... உங்க ரெண்டு பேருக்கும் பிடிக்காதே!....

பஞ்சாமிர்தம் (அரிவாள்மனையைப் பார்த்து): ஆஹா! பிரமாதமான ஐடியா ! மணி எடுத்த பல்லவன் மார்பில் கத்தியைப் பாய்ச்சி விடுகிறேன். உங்கம்மா அரிவாள் மனையுடன் வந்தாலும் வந்தாள்... உபயோகமாகத்தான் இருக்கு!

பெரி: இப்படி ஒரு கொலைகார வர்க்கத்திலே என்னைக் கொண்டு வந்து பிடிச்சுத் தள்ளியிருக்கிறீர்களே !

ராஜு: சரித்திரக் கதைகளிலே சாகிறவன் எல்லோருமே அநேகமா கத்தி முனையிலேயே சாவான்! இல்லை கத்திக் குத்திச் சாவான் ! பிரமாதமான ஐடியாவாம்! ஆனந்தப் படறேளே ! எலெக்டிரிக் ஷாக்லேயும், துப்பாக்கிக் குண்டிலேயுமா சாவான்?

பெரி: குதிரைச் சவாரி பண்ணிப்





சீக்கிரம்!
சீக்கிரம்!

"எல்லாம் பரீட்சைகளிலும் நிதானமாகப் பாஸ் பண்ணலாம்! சரித்திரப் பரீட்சை மட்டும் சீக்கிரம் பாஸ் பண்ணிவிட வேண்டும்! இல்லாவிட்டால் 'சிலபஸ்' அதிகமாகிவிடும்!"

'மௌனி' நாடகத்தில் ஒரு ஜோக் அது.

- எஸ். கோபாலன்

பழுதி முழுங்காலைச் சிராய்த்துக் கொண்டாவிற்று. இரண்டு ரூபாய் வாடகை அழுது காஷாயம் கட்டிக் கொண்டு பார்த்தாகி விட்டது! கத்தியிலிப் பழக வேண்டாமோ? கதை எழுதறாராம் கதை!

ராஜு: இந்த அப்பாகிட்டே யாரோ மித்திரத்துரோகி சரித்திரக் கதைகளுக்கு ஒரு முரட்டுக் குதிரை, ஒரு மொட்டைச் சாமியார் ஒரு பட்டாக் கத்தி மூணுதான் முக்கியம்னு சொல்லிட்டான். அதை நம்பி இவர் கதை எழுத ஆரம்பிச்சுட்டார்!

பஞ்சா: முடிச்சுட்டியளா?.... கற்பனை வறட்சிகளா!.... செழித்துக் கொழித்துச் செல்வத்தில் திளைத்த அந்த நாளைய சாம்ராஜ்யங்களையும் சமர்த்தர்களையும் படம் பிடித்துக் காட்ட உதவுவது சரித்திர நவீனம்!

பெரி: இப்போ அரிசி விலை படி அஞ்சு ரூபா விக்கிறதை மறக்கடிக்கச் செய்யுமோ, உங்கள் செல்வம் கொழிக்கும் சரித்திரக்கதை?

பஞ்சா: அரிசி! அரிசி! எதற்கெடுத்தாலும் அரிசிதானா? என் கதையிலே வரும் கருணாகர பாண்டிய வல்லபர், வராகனுக்கு முப்பது மரக்கால் அரிசி அளக்கிறார்! போய் வாங்கிக்கோ!

ராஜு: ரேஷன் கார்டு உள்ளவாளுக்கா? எல்லோருக்குமா?

பஞ்சா: என்னடா, உளர்றே!

ராஜு: சாரி அப்பா! நாளு நாளா அரிசிப் பையோடே கடை கடையாக ஏறி இறங்கிய நினைவு!.... உங்க கதைக்கு வருவோம்!.... மணி எடுத்த பல்லவனுக்குக் கத்தின்னு முடிவாச்சு!... அப்புறம்?

(பெரியநாயகி உள்ளே போகிறாள்.)

பஞ்சா: மணிமார்ம பாண்டியன் அந்தப்புரத்திலே நள்ளிரவிலே...

ராஜு: இங்கேயும் உங்களுக்குக் கன்ஃபியூஷன்...! மணிவர்மபாண்டியன்!.... மணியானகதையா எழுதணும்னு எல்லார் பேரிலேயும் ஒரு மணியைக் கட்டித் தொங்கவிட்டுட்டீங்க!

பஞ்சா: நோ! இனிமேல் மாத்த முடியாது. அவன் மணிமார்ம பாண்டியன்தான்! யாராவது கேட்டால் நான் விளக்கம் கொடுக்கத் தயார்! அவன் 'பெல்பாட்டம்' கால் சட்டை போட்டுக் கொள்வான். 'பெல்' என்றால் மணி. பாட்டம் என்றால் ஆழம் காண முடியாத அடி — மர்மம்! ஆகவே, மணிமார்ம பாண்டியன்னு பேரை வைத்துக் கொண்டான்!..... சரிதானா?

ராஜு: அந்தக் காலத்திலேயே 'பெல் பாட்டம் பாண்ட்' வந்துடுத்தா? நல்ல ஆராய்ச்சி!.... வெரிகுட்!... அந்தத் தங்க மயிலி என்ன செய்கிறாள்?

பஞ்சா: அந்தத் தங்க மயிலி இளவரசன் வைர நெஞ்சனுக்குக் குறுந்தாடி அடிகளைத் தூது அனுப்பினாளா?....

ராஜு: ஆமாம்!...

பஞ்சா: ஆனாலும் அவளுக்குச் சந்தேகம்! அடிகளார் மறந்துவிட்டாரோ என்ற சந்தேகம். இளவரசனின் நிபந்தனைகளை மறந்து டெலிபோன் செய்துவிடுகிறாள்!

ராஜு: வாட்...? டெலிபோன் பண்ணினாளா?....

பஞ்சா: ஆமா! ஆனால் மறுமுனையிலே டெலிபோனை எடுத்தது இளவரசன் வைர நெஞ்சனின் வஞ்சக அமைச்சர், மலைதலைக் கிள்ளியார்! அவ்வளவுதான்; ஆத்திரத்தில், தன் இடுப்புப் பாக்கெட்டிலிருந்த ரிவால்வரை எடுத்து, டெலிபோன் ரிசீவரையே தங்க மயிலியாக்கும் என்று நினைத்து டான் டான் என்று சுடுகிறார்!.... அப்போதுதான் ஒரு குண்டு குறி தவறி எதிர்ச் சுவரில் உள்ள ரகசியக் கதவின் தாழ்ப்பாளை உடைக்கிறது!

ராஜு: உங்க கதையும் உடைஞ்சு தூள் தூளாய்ப் போச்சு!.... அப்பா! சரித்திரக் கதையிலே டெலிபோனும் துப்பாக்கியும் வந்துடுத்துன்னு, அந்தச் சரித்திரக் கதையின் காலம் என்ன?

பஞ்சா: ஆமாண்டா! என் உற்சாகத்திலே வெறுத்து வாங்கி எழுதித் தள்ளிட்டேன்!....

ராஜு: இதுக்குத்தான் ஆரம்பத்திலேயே 'கடுவிட்டுக் கூடு பாய வேண்டாம்! ஏதோ வழக்கம்போல, கறிகாய்க் கடை பச்சையப்பன், கண்டக்டர் கன்னுசாமி இவங்களை வைச்சு எழுதிட்டுப் போங்க'ன்னேன்!.... டெலிபோனைப் புறாவாக மாத்துங்க! துப்பாக்கியை.......

பஞ்சா: சரிதாண்டா! நான் எழுதினதும் எழுதினதுதான்! இனிமேல் மாத்திக் கொண்டு இருக்க முடியாது!... இப்படித் தான்எழுதுவேன்.

ராஜு: 'இதைத்தான் படிப்பேன்' என்று வாசகர்கள் வேண்டாமா? பேசாம எழுதிக் குவித்த கடுதாசிகளை அம்மாகிட்டே தூக்கிக் கொடுங்கோ!....பழைய பேப்பருக்கு இப்போ மவுசு ஜாஸ்தி!....

(பஞ்சாமிர்தம் கை ஓங்க ராஜு வெளியே ஓடுகிறான்)

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031. Editor: K. Rajendran

ஒரே ஒரு காசு செலவில் 1 சேலை அல்லது 3 சட்டைகள் பனிபோல் வெண்மை பெற...

மாக்ஸிம்*

எல்லா துணிகளுக்கும்
உகந்த ஏற்றமிகு ஒயிட்னர்

எவ்வளவோ சிக்கனமானது!

எந்த ஆடையாக இருந்தாலும் சரி, அதற்குப் புத்தம் புதிய வெண்மை ஒளியேற்ற சராசரி ஒரு துளி மாக்ஸிம் போதும். ஒவ்வொரு மாக்ஸிம் பாட்டிலும் சுமார் 1200 துளிகள் கொண்டது என்பது உங்களுக்குத் தெரியுமோ என்னவோ! எனவேதான் மாக்ஸிம் மிகவும் சிக்கனமான, வீரியமுள்ள நீலநிற திரவ வடிவ ஒயிட்னராக விளங்குகிறது. மேலும் விசேஷ ட்ராப்பர் மூடிகொண்ட பிளாஸ்டிக் பாட்டிலாக இருப்பதால், இன்னும் லாபம். ஏனெனில் தேவைக்கு மேல் ஒரு துளி கூட சிந்தாது. எனவே துளியும் வீணாவதில்லை. துணியும் நீலம் படிவதில்லை.

- 'டெரீன்' ✓
- 'டெரீன்'/காட்டன் ✓
- நைலான் ✓
- உல்லன் ✓
- சில்க் ✓
- காட்டன் ✓


எல்லா துணிகளுக்கும் ஏற்றது

எல்லாவித துணிகளுக்கும் நீங்கள் மாக்ஸிம் உபயோகிக்கலாம். 'டெரீன்', 'டெரீன்'/காட்டன், நைலான், உல்லன், சில்க் மற்றும் காட்டன் போன்ற எல்லா துணிகளுக்கும் மாக்ஸிம் வெண்மையூட்டி புதிய மெருகேற்றுகிறது. தவிர, மாக்ஸிம் துணியில் கறை ஏற்படுத்துவதுமில்லை.

உபயோக முறை மிகமிக எளிது

மாக்ஸிம் உபயோக முறை மிகமிக் எளிதானது. துணிகளை முதலில் சோப் அல்லது பிற சலவைச் சாதனங்கள் மூலம் சுத்தமாக துவைத்து நன்கு அலசி எடுக்கவும். பிறகு வாளியிலுள்ள (5 லிட்டர்) நல்ல தண்ணீரில் 10-15 துளிகள் மாக்ஸிம் விட்டுக் கலக்கவும். (பழுப்பேறிய துணிகளென்றால் கொஞ்சம் கூடுதல் துளிகள் மாக்ஸிம் சேர்க்கவும்) பின்பு துணிகளை 10—15 நிமிடங்களுக்கு அதில் ஊறவைக்கவும். மீண்டும் அலச வேண்டாம். அப்படியே உலரவிடவும்.





ஒவ்வொரு காசுக்கும் உரிய பலனைத் தருகிறது மாக்ஸிம்

GHM-33 TAM

*Regd. T.M. Geoffrey Manners & Co., Ltd.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon
இலங்கையில் விலை 60 சதம் (தபால் செலவு தனி)

